பக்கங்கள்: பன்னிரண்டு + TV = 16
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி 01 வெள்ளிக்கிழமை (18-10-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:325

'மானுடத்தின் தமிழ்க் கூடல்' ஏற்பாடுகள் களைகட்டுகின்றன

## திருமாவளவன், இயக்குநர் புகழேந்தி உட்பட தமிழகக் கலைஞர்குழு இன்று யாழ். வருகிறது!

யாழ்ப்பாணம்,ஒக்.18

யாழ்.நகரில் நாளை ஆரம்பமாக இருக்கும் 'மானுடத்தின் தமிழ்க் கூடல்' நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுவதற்காக தமிழ்நாட்டின் பிரபல கலைஞர்கள் அடங்கிய சிறப்புக் குழு ஒன்று இன்று யாழ். வருகின்றது.

'விடுதலைச் சிறுத்தைகள்' அமைப்பின் தலைவரும் தமிழக சட்டசபை உறுப்பினருமான இரா.திருமாவளவன், கவிஞர் இன்குலாப், ஓவியர் மருது, தமிழகத்தில தடை செய்யப்பட்ட சர்ச்சைக்குரிய திரைப்படமான 'காற்றுக் கென்ன வேலி' இயக்குநர் புகழேந்தி தங்கராஜ், எழுத்தாளர் பா.செயப்பிரகாசம் ஆகியோர் அடங்கிய குழுவினரே இன்று கொழும்பு ஊடாக யாழ்ப்பாணம் வருகின்றனர்.

விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழகமும், 'நிதர்சனம்', தமிழ்த்தாய் வெளியீட்டகம் ஆகியனவும் இணைந்து நடத்தவுள்ள 'மானுடத்தின் தமிழ்க் கூடல் - 2002' மாநாடு நாளை ஆரம்பமாகின்றது.

"மானுட விடுதலை நோக்கிய திசையில் ஈழத்தமிழர் உரிமைப் போராட்டமும், கலை - இலக்கிய ஊடகங்களின் வகிபாகமும்" என்னும் அடிப்பொருளில் இம்மாநாடு நாளை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சர்வஜன வாக்கெடுப்பு இல்லை

# தேர்தலுக்கு அரசு தயாராகிறது!

## அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு

கொழும்பு,ஒக்ரோபர்18

**பொதுமக்களின் கருத்தறியும் சர்வஜன வாக்கெடுப்புக்கு இவ்வேளையில் முகங்கொடுக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை. ஆயினும், மக்களின் கருத்தை அறிய பொதுத்தேர்தல் ஒன்றை நடத்துவதே பொருத்தமானதாகும் என்று அரசு நம்புகிறது.**

**அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இவ்வாறு நேற்று அறிவித்தார்.**

19ஆவது அரசமைப்புத் திருத்தசட்டமூலம்மீது சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டுமென உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கும் நிலையில், நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்கு அரசு முகங்கொடுக்க வேண்டுமென நேற்றுமுன்தினம் அமைச்சர்கள் தீர்மானித்திருப்பதற்கு மத்தியிலேயே அமைச்சர் பீரிஸ் நேற்று மேற்கண்டவாறு அறிவித்தார்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு அது

(11 ஆம் பக்கம் பார்க்க)

## அக்கரைப்பற்றில் நேற்றும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிப்பு!

### இயல்பு நிலை பாதிப்பு

கொழும்பு,ஒக்.18

அக்கரைப்பற்றில் இளைஞர் ஒருவர் கடத்தப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அவரை விடுவிக்கக் கோரியும் நேற்றைய தினமும் இரண்டாவது நாளாக அங்கு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 6மணியுடன் முடிவடைந்த பொலீஸ் ஊரடங்குச் சட்டத்தை அடுத்து பொதுமக்கள் மீண்டும் வீதிக்கு வந்து ஹர்த்தால் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

வீதிகளில் போக்குவரத்தை தடை செய்வதற்காக ரயர்கள் எரிக்கப்பட்டன. வீதிக்கு குறுக்கே மரங்கள், கொங்கிறீட் தூண்கள், கற்கள் முதலியன போடப்பட்டிருந்தன. போக்குவரத்தைச்

(11 ஆம் பக்கம் பார்க்க)

### அக்கரைப்பற்றில் ஊரடங்கு நீடிப்பு

மட்டக்களப்பு,ஒக்.18

அக்கரைப்பற்றில் நேற்று அமைதி நிலவிய போதும் பிற்பகல் 3மணிக்குப்பின்னர் ஊரடங்குச் சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

இன்று காலை 6மணிக்கு ஊரடங்கு நீக்கப்படுவதாகவும் -

பாதுகாப்பு முன்னேற்பாடாக ஊரடங்கு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் -

பொலீஸார் தெரிவித்தனர்.(ஐ-3)

## நோர்வே சமாதானக் குழுவினர் அடுத்த வாரம் யாழ்.வருகின்றனர்

### உடன்படிக்கை குறித்து மக்களின் கருத்தை அறிய

யாழ்ப்பாணம்,ஒக்.18

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாக குடாநாட்டு மக்களின் அபிப்பிராயங்களை அறிந்து கொள்வதற்காக நோர்வே சமாதானக் குழுவினர் எதிர்வரும் 22 ஆம் திகதி யாழ். வரவிருக்கின்றனர்.

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சரும் சமாதானக்குழுவின்

(11 ஆம் பக்கம் பார்க்க)

### மீனவர்கள் மூவர் தாக்கப்பட்டனர்

வடமராட்சி,ஒக்.18

கற்கோவளம் கடற்பிரதேசத்தில் கடந்த 15ஆம் திகதி மாலை மீன்பிடிக்கச் சென்ற மூன்று இளம் மீனவர்கள் படையினரால் தாக்கப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் இது தொடர்பாக இராணுவ அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

(ஜ-173)

## இராணுவத்துக்கு ஆள்சேர்க்க குடாநாட்டில் சுவரொட்டிகள்



இராணுவத்துக்கு புதிதாக ஆள்களைத் திரட்டுவதற்கான சுவரொட்டிகள் குடாநாட்டின் பல பகுதிகளிலும் படையினரால் ஒட்டப்பட்டுள்ளன. இராணுவத்தினரின் படங்கள் அடங்கிய வர்ணச் சுவரொட்டி ஒன்றும், தமிழில் எழுதப்பட்ட வாசகங்கள் கொண்ட இன்னொரு சுவரொட்டியும் அருகருகே ஒட்டப்பட்டிருக்கின்றன.

குடாநாட்டிலிருந்து இளைஞர்களை படைக்குச் சேர்ப்பதற்காக இந்தப் பிரசுரங்களை படையினர் பொது இடங்களில் ஒட்டியிருக்கின்றனர். தமிழ் இளைஞர்களைப் படையில் சேர்க்கும் நோக்குடன் வெளியிடப்பட்ட சுவரொட்டிகளைப் படத்தில் காணலாம். (படம்:தேவராஜன்)

இனங்களுக்கிடையிலான பிரச்சினைகளைத் தீர்க்க

## கிழக்கிற்கு சமாதான குறைகேள் அதிகாரி நியமிப்பது பற்றி அரசு ஆராய்கின்றது!

கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு நிலைமை குறித்து அரசு கவனம் செலுத்தி வருகிறது. இது தொடர்பாக அடுத்த வாரத்தில் மாநாடு ஒன்றைக்கூட்டத் திட்டமிட்டிருக்கிறோம். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், அரசின் பல உறுப்பினர்கள் ஆகியோர் இக்கூட்டத்துக்கு அழைக்கப்படுவர்.

அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர்கள் மாநாட்டில் இவற்றைத் தெரிவித்தார். அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

சமாதான குறைகேள் அதிகாரி ஒருவரை கிழக்கில் நியமிப்பது குறித்து அரசு ஆராய்ந்து வருகிறது. அவ்வாறு நியமிக்கப்பட்டால் பாரதூரமான விளைவுகள் ஏற்படுவதற்கு முன் பிரச்சினைகள் கையாளப்படலாம்.

அரசுக்கும் புலிகள் இயக்கத்திற்கும் இடையிலான பிரச்சினைகளைக் கண்காணிப்புக்குழு கையாண்டு வருகிறது. ஆயினும், சமூகங்களுக்கிடையேயும் பிரச்சினைகள் இருந்து வருகின்றன. இவற்றைப் பற்றி ஆராய்ந்த நாம், சமாதான குறைகேள் அதிகாரி ஒருவர் நியமிக்கப்படுவது பயனுள்ளது எனக் கருதுகிறோம்.

- இவ்வாறு அவர் கூறினார்.(ஐ-12)

### ஹைதராபாத்தில் பசுவை கொன்ற ஐவர் அடித்துக் கொலை!

ஹைதராபாத்,ஒக்.18

பசுமாடு ஒன்றைக் கொன்று அதன் தோலை உரித்தனர் என்று கூறப்படும் ஐவர் ஹைதராபாத்தில் அடித்துக் கொலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

மாட்டின் தோலை உரித்துக் கொண்டிருந்த இந்த ஐவரையும் சுற்றிவளைத்த தீவிர இந்து அடிப்படைவாத அமைப்பைச் சேர்ந்த சுமார் 300 பேர் ஐவரையும் அடித்து எரித்துக் கொன்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தலித் இனத்தைச் சேர்ந்த இளைஞர்களே கொலை செய்யப்பட்டிருக்கின்றனர். (ஐ-12)

# எம்.பிக்கள் மனச்சாட்சிப்படி வாக்களிக்க வழிசெய்யும் 6ஆவது விதி சட்டவிரோதம்

## புதிய அரசமைப்புச் சட்டத்திலேயே அதனைச் செய்யலாம்

கொழும்பு,ஒக்.18

19 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்ட மூலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனச்சாட்சிப்படி வாக்களிக்க வகை செய்யும் 6 ஆவது விதி சட்ட விரோதம் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பதாக அறியவருகிறது.

திருத்தச் சட்டத்தின் இந்த விதிப்படி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கட்சி அங்கத்துவத்தையோ, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையோ இழக்கும் ஆபத்தின்றி திருத்தச் சட்ட மூலத்துக்கு ஆதரவாக வாக்களிக்க வழி செய்யப்பட்டிருக்கிறது.

இந்த விதி சட்டவிரோதமானது என்று தீர்ப்பளிக்கப்பட்டிருப்பதால் அதனை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளாலும் சர்வஜன வாக்கெடுப்பாலும் கூட நிறைவேற்ற வழி இல்லை என சட்ட வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்திருகின்றனர்.

மனச்சாட்சிப்படி வாக்களிக்கவும் அவ்வாறு வாக்களித்தாலும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறி போகாமல் இருக்கவும் வழி செய்யும் அரசமைப்புச் சட்டவிதி புதிதாக இயற்றப்படும் அரசமைப்புச் சட்டத்தின் மூலமே கொண்டுவரப்பட முடியும் எனவும் நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

கட்சி முறையை அடிப்படையாகக் கொண்ட நாடாளுமன்ற பிரதிநிதித்துவ முறைக்கு வழிவகுக்கும் தற்போதைய அரசமைப்புச் சட்டத்தின் கீழ் மனச்சாட்சிப்படி வாக்களிக்க வழி செய்யும் சட்ட விதிக்கு இடமில்லை என்றும் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

19 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டமூலத்தின் ஏனைய விதிகள் நிறைவேற்றப்பட நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளுக்கு மேலதிகமாக சர்வஜன வாக்கெடுப்பில் மக்களின் அனுமதியும் தேவை என தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தேர்தல் நடைபெற்று ஓராண்டின் பின்னரே ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியும் என்ற கால எல்லையை மூன்று ஆண்டுகளின் பின்னரே கலைக்கலாம் என்று நீடிக்கும் சட்ட விதியை மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளால் மட்டும் நிறைவேற்ற முடியும் எனவும் அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு அவசியமற்றதாகும் எனவும் தீர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. (ஐ)

# நாடாளுமன்ற கலைப்புக் கோரிக்கை நிராகரிக்கப்படுவது ஜனநாயக விரோதம்

## அரசுத் தரப்பு கருத்து

கொழும்பு,ஒக்.18

"நாடாளுமன்றத்தைக் கலைத்து தேசியப்பிரச்சினைகளை மக்கள் முன் சமர்ப்பிக்க வாய்ப்பளிக்குமாறு கோர பெரும்பான்மையுள்ள ஓர் அரசுக்கு உரிமையுண்டு. அவ்வாறு விடுக்கப்படும் ஒரு கோரிக்கை நிராகரிக்கப்படுமேயானால் அதனை ஜனநாயக விரோதச் செயலாகவே அரசு கருதும் என்று அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறினார்.

இது தொடர்பாக அமைச்சர் பீரிஸ் மேலும் விளக்கிக் கூறியதாவது:-

அவ்வாறான ஒரு நிலை ஏற்பட்டால் நாடாளுமன்றம் மேற்கொள்ளக் கூடிய பல நடவடிக்கைகள் இருக்கின்றன. பலவீனமான ஒரு நிலைக்கு அரசு ஒரு போதும் உள்ளாகாது.

இந்த நிலையில் நிதியை நிர்வகிக்கும் அரசின் அதிகாரமே முக்கியமானதாகும். அரசமைப்பில் அரசுக்கு உள்ள முக்கிய பலம் அதுதான்.

ஜனநாயக விரோதச் செயல் ஒன்றில் ஈடுபட்டால் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டி வரும். அவ்வாறு நிகழாது என்று நாம் நம்புகிறோம்.

கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அமைச்சர், ஜனாதிபதியின் நிதிகளை வெட்டுவது குறித்து தான் குறிப்பிடவில்லை என்றும் நிதிகள் வெட்டப்படும் என்று தான் கூறவில்லை என்றும் கூறினார். (ஐ-12)

# நோர்வே பிரதி அமைச்சர் சனியன்று கொழும்பு வருகிறார்

கொழும்பு,ஒக்.18

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிசன் எதிர் வரும் சனிக்கிழமை இலங்கை வருகிறார்.

தாய்லாந்தில் நடைபெறவிருக்கும் இரண்டாவது சுற்றுப் பேச்சுகளுக்கான அடிப்படைகள் குறித்து அவர் இங்கு பேச்சு நடத்துவார். இது தொடர்பாக அரசும் புலிகள் இயக்கமும் நோர்வே அனுசரணையாளர்களும் இப்போது பேச்சு நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்று இவற்றைத் தெரிவித்தார். அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேலும் கூறியதாவது:-

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இலங்கை வந்திருக்கிறார். இப்போது அவர் கிளிநொச்சியில் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுடன் பேச்சு நடத்தி வருகிறார். கூட்டுச் செயலணிக்குழு அமைப்பது குறித்தே இப்பேச்சுக்களில் முக்கியமாக ஆராயப்படுகிறது. சர்வதேச நாடுகளிடமிருந்து நிதி பெறுவதே இக்குழுவின் முக்கிய பணியாகும்.

இந்நாட்டை அபிவிருத்தி செய்ய நிதி தேவையென அரசும் புலிகளும் ஒரே குரலில் உலக நாடுகளிடம் எடுத்துக் கூறவிருக்கின்றனர்.

- இவ்வாறு அவர் கூறினார். (ஐ-12)

## நிமலராஜன் நினைவு தினம்

யாழ்ப்பாணம்,ஒக்.18

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் இரண்டாவது ஆண்டு நினைவு தினம் நாளை ஆகும்.

இதனை ஒட்டி யாழ்ப்பாணத்தில் பல நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை ஏற்பாடு செய்துள்ள நினைவு நிகழ்ச்சி இன்று பிற்பகல் 4.00 மணிக்கு யாழ். பரமேஸ்வராச் சந்தியில் உள்ள பேரவை தலைமையகத்தில் பேரவைத் தலைவர் கஜேந்திரன தலைமையில் நடைபெறும். (ஐ-ஒ)

## அம்பாறையில் அமைதிப் போராட்டத்துக்கு அழைப்பு

அம்பாறை மாவட்டத்திலுள்ள அனைத்து ஜும்ஆப் பள்ளிவாசல்களிலும் இன்று ஜும்ஆத் தொழுகையையடுத்து அமைதியான போராட்டம் நடத்த முன்வருமாறு எம்.பிக்களான அன்வர் இஸ்மாயிலும் எச்.எம்.எம். ஹரீஸும் அழைப்பு விடுத்துள்ளனர்.

முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 9 பேரின் நாடாளுமன்ற பகிஷ்கரிப்பு தொடர்கிறது. இவர்களின் போராட்டத்தில் ஏனைய முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களும் தேசியத் தலைவர் ரவூப் ஹக்கீமும் இணைந்துகொள்ளவேண்டும்.

நாடாளுமன்ற பகிஷ்கரிப்புக்கு முஸ்லிம் மக்களின் முழு ஆதரவு இருக்கின்றது என்பதை உணர்த்துவதற்கு ஜும்ஆத் தொழுகையின் பின்னர் குரல் கொடுக்க இணையுமாறு இரு எம்.பிக்களும் அழைப்பு விடுத்திருக்கின்றனர். (ஐ)

# அக்கரைப்பற்று வாசியை புலிகளே கடத்தினராம்!

## டக்ளஸ் தேவானந்தா குற்றச்சாட்டு

கொழும்பு,ஒக்.18

அக்கரைப்பற்று வாசியான அப்துல் வஹாட் என்பவரை விடுதலைப் புலிகளே கடத்திச் சென்றுள்ளனர் என்று ஈ.பி.டி.பி. அமைப்பின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருக்கிறார்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின உறுப்பினரான அஸ்மீர் என்பவரது சகோதரர் அப்துல் வஹாட் என்பவர் கடந்த 15 ஆம் திகதி காலை இலக்கத் தகடு இல்லாத வாகனத்தில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். இதுவரை இவர் விடுவிக்கப்படவில்லை. அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் நிலவும் பதற்றத்திற்கான அத்திவாரமாக அமைந்த இந்தச் சம்பவத்தை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். சமூகங்களுக்கு இடையிலான நல்லுறவுக்கு குந்தகம் ஏற்படுத்தக்கூடிய இந்தச் சம்பவத்தின் சூத்திரதாரிகள் புலிகள் இயக்க உறுப்பினர்களாகவே இருக்கலாம் என்பதை எமக்குக் கிடைக்கும் தகவல்கள் ஊர்ஜிதப்படுத்துகின்றன. இத்தகைய பொறுப்பற்ற செயல்களை வன்மையாகக் கண்டிப்பதோடு, தமது குடும்ப உறுப்பினரைக் காணாது தவிக்கும் நெஞ்சங்களோடு எமது துயரத்தையும் பகிர்ந்து கொள்கிறோம்.

இவ்வாறு ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் கே.என்.டக்ளஸ் தேவானந்தா வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## மங்கள சமரவீரவுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

கொழும்பு,ஒக்.18

பொ.ஐ.முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவுக்கும் அவரது மெய்ப்பாதுகாவலர்கள் ஐவருக்கும் எதிராக மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

2001ஆம் ஆண்டு நவம்பர் 4ஆம் திகதி மின்சக்தி எரிபொருள் பிரதியமைச்சர் சாக ரத்நாயக்காவின் ஆதரவாளர்கள் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகவே இவ்வழக்குத் தொடரப்பட்டது.

சட்டமா அதிபரின் ஆலோசனையின் பேரில் இரகசியப் பொலீஸார் வழக்கைத் தாக்கல் செய்தனர். மேல் விசாரணை டிசெம்பர் 12ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஐ)

# மக்கள்வங்கி கிளைகளிலேயே இனி அடகுநகை மீளளிப்பு

மக்கள் வங்கியில் நகை அடகு வைத்து தமது நகைகளை மீளப் பெறுவதற்குப் பணம் கட்டியவர்களின் அடகுநகைகள் கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்டுள்ளன.

மார்ச் மாதத்தில் இருந்து ஒகஸ்ட் மாதம் வரை பணம் கட்டியவர்களுடைய நகைகளே இவ்விதம் கொண்டு வரப்பட்டுள்ளன.

எனவே, அடகு நகைகளுக்காகப் பணம் கட்டியவர்கள் தமது நகைகளை அந்தந்தக் கிளைகளில் பெற்றுக்கொள்ளலாம் என மக்கள் வங்கியின் பிராந்திய அலுவலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை,ஊர்காவற்றுறை கிளைக்குரியவர்கள் தமது அடகு நகைகளை யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி மக்கள்வங்கிக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# விளையாட்டு

## பல்கலைக்கழகத்தில் நாளை விருதுகள் இரவு நிகழ்ச்சி

யாழ்ப்பாணம்,ஒக்.18

யாழ்பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் வருடாந்தம் நடத்தப்படும் வீரர்களைக் கௌரவிக்கும் விருதுகள் இரவு நிகழ்ச்சி நாளை சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு வீரர்களைக் விருது வழங்கிக் கௌரவிப்பார்.

இவ்வருடம் 25 விளையாட்டு அணிகளைச்சேர்ந்த வெவ்வேறு விளையாட்டுகளில் தமது திறமைகளை வெளிப்படுத்திய வீர, வீராங்கனைகளுக்கு விருதுகளும், விளையாட்டு அணிகளில் புதிதாக இணைந்து சிறப்பாகச் செயற்பட்ட வீரர்களுக்கும் உள்ளரங்கப் போட்டிகளில் ஒற்றையர், இரட்டையர் மற்றும் கலப்பு இரட்டையர் ஆட்டங்களில் பல்கலைக்கழக திறந்த சுற்றுப் போட்டிகளில் கலந்து கொண்ட வீர, வீராங்கனைகளுக்கும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

கிரிக்கெட்டில் சிறந்த பந்து வீச்சாளர், பந்து தடுப்பாளர், துடுப்பாட்டக்காரர் மற்றும் சகலதுறை ஆட்டக்காரருக்கான சான்றிதழ்களும், இவ்வாண்டின சிறந்த சகலதுறை விளையாட்டு வீர, வீராங்கனைகளுக்கான சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

இவ்வருடத்தின் சிறந்த மெய்வன்மை வீரராக கலைப்பீடத்தைச் சேர்ந்த மூன்றாம் வருட மாணவன் எஸ்.ரஞ்சித்குமாரும், சிறந்த சகலதுறை விளையாட்டு வீராங்கனையாக மூன்றாம் வருட முகாமைத்துவ மாணவி செ.குகாயினியும், சிறந்த சகலதுறை விளையாட்டு வீரராக மருத்துவபீட நான்காம் வருட மாணவன் அ.அன்ரன்ஜெனிலும் கௌரவிக்கப்படுகின்றனர்.

இவர்களுடன் மருத்துவபீட 4ஆம் வருட மாணவன் என்.சாந்தகுணாகரன் கூடைப்பந்தாட்டத்தில் மாகாண, மாவட்ட மற்றும் தேசிய மட்டங்களில் திறமையாக விளையாடி கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சிரேஷ்ட தேசிய கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ்.மாவட்டத்தின் சார்பில் பங்குபற்றி அச்சுற்றுப் போட்டியின் தொடரில் சிறந்த வீரராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். இதற்காக அவர் விசேட விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார். (ஐ-5)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.18

சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டச் சுற்றுப போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (ஐ-5-48)

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.18

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டங்கள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.15 மணிமுதல் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஜெஜினா இருதயநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் உடுவில் கல்விக்கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் அ.தற்பரானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலய ஆசிரியர் திருமதி நகுலாம்பிகை தற்பரானந்தன் வெற்றியீட்டிய அணிகளுக்கான வெற்றிக் கேடயங்களை வழங்குவார்.

இந்த இறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

**16 வயதுப்பிரிவு**

★ மானிப்பாய் இந்துக்கல்லூரி எதிர் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்.

**18 வயதுப்பிரிவு**

★ இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

* * *

யாழ்ப்பாணம்,ஒக்.18

சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் ஸ்ரான்லிக் கல்லூரிக்கும் இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டம் இன்று பிற்பகல் 2மணிக்கு ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்றைய ஆட்டங்களில் இரு கல்லூரிகளினதும் 15வயது, 17வயது, 19வயதுக்குட்பட்ட அணிகள் மோதுகின்றன. (ஐ-5-9-86-152)

## சமாதான விளையாட்டு விழா வீரர்களுக்கு!

யாழ்ப்பாணம்,ஒக்.18

களுத்துறையில் அடுத்த மாதம் 16ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள வடக்கு - தெற்கு சமாதான விளையாட்டு விழாவில் பங்குபற்றவுள்ள யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சகல வீர, வீராங்கனைகளையும் நாளை சனிக்கிழமை காலை 7 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்திற்கு பயிற்சிக்கான ஆயத்தத்துடன் வருகைதருமாறு யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி ஏ.எவ்.ஜெ.ரூபசிங்கம் கேட்டுள்ளார். (ஐ-5)

# இலங்கை அணி ஞாயிறன்று தென்னாபிரிக்கா பயணம்

இலங்கை கிரிக்கெட் அணி எதிர் வரும் ஞாயிறன்று தென்னாபிரிக்காவுக்குப் புறப்படவுள்ளது. 2 டெஸ்ட் போட்டிகளிலும் 5 ஒருநாள் போட்டிகளிலும் இலங்கை - தென்னாபிரிக்க அணிகள் மோதவுள்ளன.

முதலாவது டெஸ்ட் போட்டி நவம்பர் 8 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. தென்னாபிரிக்காவுக்குச் செல்லவிருக்கும் இலங்கை அணியில் 17 பேர் இடம்பெற்றுள்ளனர். இவர்களில் 7 வேகப்பந்து வீச்சாளர்களும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முதலில் 6 வேகப்பந்து வீச்சாளர்கள் இடம்பெற்றிருந்தனர். பின்னர் ருச்சிர பெரேராவும் சேர்க்கப்பட்டார்.

அண்மையில் நடைபெற்ற இங்கிலாந்து சுற்றுலாவின்போது ருச்சிர பெரேரா பந்தை எறிகின்றார் எனக் குற்றம் சுமத்தப்பட்டார்.

எனினும், இக்குற்றச்சாட்டிலிருந்து தற்போது அவர் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்றவுள்ள இலங்கை வீரர்கள்:-

சனத் ஜயசூரிய (தலைவர்), மாவன் அத்தபத்து, குமார் சங்கக்கார, மஹேல ஜயவர்தன, ரஸல் ஆர்னோல்ட், ஹசான் திலகரட்ன, ஜெகன் முபாரக், ஹசந்த பெர்னாண்டோ, சமிந்தவாஸ், தில்ஹார பெர்னாண்டோ, சஜீவ டி சில்வா, சமில கமகே, திலின துஷார, தரங்க லக்ஷித, முத்தையா முரளிதரன், பிரசன்ன ஜயவர்த்தன, ருச்சிர பெரேரா.

## தெ.ஆபிரிக்க - பங்களாதேஷ் டெஸ்ட் இன்று ஆரம்பம்

தென்னாபிரிக்க - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது.

இரு போட்டிகள் கொண்ட தொடரில் இவ்விரு அணிகளும் மோதவுள்ளன. முதலாவது போட்டி கிழக்கு லண்டன் நகரில் நடைபெறவுள்ளது.

இவ்விரு அணிகளும் டெஸ்ட் போட்டிகளில் மோதவுள்ளமை இதுவே முதல் தடவையாகும்.

ஐ.சி.சி.டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டியலில் ஆஸ்திரேலியாவுக்கு அடுத்ததாக இரண்டாவது இடத்தில் தென்னாபிரிக்காவுள்ளது.

பங்களாதேஷ் அணி இதுவரை 13 போட்டிகளில் பங்குபற்றியுள்ளது. அவற்றில் 12 போட்டிகளில் தோல்வியைத் தழுவியமை குறிப்பிடத்தக்கது.

# நாகப்பாவை விடுவிக்க கொளத்தூர் மணி தூதர்

பெங்களூர்,ஒக்.18

கொளத்தூர் மணிக்கு பிணை அனுமதி கிடைத்தால் அவரை சந்தன மரக் கடத்தல் வீரப்பனிடம் தூதராக அரசு அனுப்பும் என்று கர்நாடக செய்தித் துறை அமைச்சர் காகோடு திம்மப்பா தெரிவித்தார்.

கர்நாடக முதல்வர் எஸ்.எம். கிருஷ்ணா தலைமையில் கர்நாடக அமைச்சரவைக் கூட்டம் பெங்களூரில் நடைபெற்றது. கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் காகோடு திம்மப்பா கூறியதாவது:-

அமைச்சரவைக் கூட்டத்தில் நாகப்பா கடத்தல் விவகாரம் குறித்து விவாதிக்கப்பட்டது.

நாகப்பாவை விடுவிக்க அரசு தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறது. மகாதேவசாமியுடன், கொளத்தூர் மணியைத் தூதராக அனுப்புவது நீதிமன்ற முடிவைப் பொறுத்து உள்ளது. நீதிமன்றம் அவரை பிணையில் விடுவித்தால் அவரை தூதராக நாங்கள் அனுப்புவோம் - என்றார் அவர்.

கர்நாடக மாநில முன்னாள் அமைச்சர் நாகப்பாவை சந்தனமரக் கடத்தல் வீரப்பன் கடத்திச் சென்று பணயக் கைதியாக வைத்துள்ளமை தெரிந்தது. (ஒ)



தமிழகத்தில் நடிகை ரேவதி, ஒளிப்பதிவாளர் தங்கர்பச்சான், இயக்குநர் சேரன், படத் தொகுப்பாளர் பி.லெனின் உட்பட 14பேருக்கு சிறந்த தொழில்நுட்பக்கலைஞர் விருது வழங்கப்படுகிறது. தென்னிந்தியத் திரைப்படத் தொழில்நுட்பக் கலைஞர் சங்கம் இவ்விருதுகளை வழங்குகிறது.

கதை, திரைக்கதை - சேரன் (பாண்டவர் பூமி), ஒளிப்பதிவு - தங்கர்பச்சான் (பாண்டவர் பூமி), பாடலாசிரியர் - ஸ்நேகன் (தோழா..தோழா..- பாண்டவர் பூமி), நடிகை ரேவதி (மித்ர மை ஃபிரண்ட்), படத் தொகுப்பாளர் - பி.லெனின் (ஊருக்கு நூறு பேர்) ஆகியோருக்கும் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

# இந்தோனேஷியாவை விட்டு வெளியேற ஆஸ்திரேலிய பிரஜைகளுக்குப் பணிப்பு!

சிட்னி,ஒக்.18

இந்தோனேஷியாவில் தங்கியுள்ள தமது பிரஜைகள் அனைவரையும் உடனடியாக அந்த நாட்டைவிட்டு வெளியேறுமாறு ஆஸ்திரேலிய அரசு வற்புறுத்தியுள்ளது.

கடந்த சனியன்று பாலிக்குடாவில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 180 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதை அடுத்து ஏற்பட்டுள்ள புதிய அச்சுறுத்தலைத் தொடர்ந்தே ஆஸ்திரேலிய அரசு இந்த முடிவை மேற்கொண்டுள்ளது.

சனியன்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்களில் அதிகமானோர் ஆஸ்திரேலியர்கள் என்று கூறப்படுகிறது. உயிரிழந்த 39 பேர் ஆஸ்திரேலியர்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 89 ஆஸ்திரேலியர்கள் காயமடைந்துள்ளனர்.

இதனை அடுத்தே - தீவரவாதிகளின் அச்சுறுத்தல் காரணமாக இந்தோனேஷியாவை விட்டு தனது பிர



இந்தோனேஷிய குண்டு வெடிப்பில் காயமடைந்த நபர்.

ஜைகளை வெளியேறுமாறு ஆஸ்திரேலியா கேட்டுள்ளது.

இதற்கிடையில் -

பாலிக்குடா குண்டுவெடிப்புச் சம்பவத்துடன் இந்தோனேஷியர்கள் நால்வருக்குத் தொடர்பு இருக்கின்றதா என்று பொலீஸார் விசாரித்து வருவதாக பொலீஸ் பேச்சாளர் நேற்று தெரிவித்தார்.

"இந்த விடயத்தை தெளிவுபடுத்த நான் விரும்புகின்றேன். இச்சம்பவம் தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை. இருவர் ஏற்கனவே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். அது தற்போது நான்கு ஆகியுள்ளது." - என்றார் பொலீஸ் பேச்சாளரான சலேசபா

இந்தக் குண்டு வெடிப்புக் குறித்து விசாரணை செய்வதற்கு ஆஸ்திரேலியப் பொலீஸாரும் புலனாய்வு அதிகாரிகளும் இந்தோனேஷியப் பொலீஸாருடன் இணைந்து குழுவாக இயங்கி வருகின்றனர். (ம)

# பிரிட்டனின் தலைமைக்கு கனடா நாட்டில் எதிர்ப்பு!

ஒட்டாவா,ஒக்.18

பிரிட்டிஷ் ராணி எலிசபெத் 12 நாள்கள் சுற்றுப்பயணமாக கனடா வந்தார். அங்கே நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு ஒட்டாவா விமான நிலையத்தில் இருந்து பிரிட்டனுக்குப் புறப்பட்டார். அவரை துணைப்பிரதமர் ஜான மேன்லி வழியனுப்பி வைத்தார்.

ராணியின் சுற்றுப்பயணம் வெற்றிகரமாக முடிந்தாலும், கனடா மீதான பிரிட்டனின் தலைமை எத்தனை நாள்கள் நீடிக்கும் என்பது கேள்விக்குறியாக இருக்கிறது.

கனடா தனி நாடாக இருந்தாலும், பிரிட்டிஷ் ராணி அல்லது மன்னர் தான் கனடாவின் தலைவராக கருதப்படுகிறார். ராணியின் பிரதிநிதியான கவர்னர் ஜெனரல்தான் கனடாவின் நிர்வாகத் தலைவராகக் கருதப்படுகிறார். நாடாளுமன்ற பிரச்சினையில் அவர் தலையிட முடியும்.

ராணி எலிசபெத் ஆட்சி முடிவடைந்ததும் அந்த நாட்டு தலைமைக்கு முடிவு கட்டிவிட வேண்டும் என்ற கருத்து கனடாவில் ஓங்கிவருகிறது. இதற்கு துணைப்பிரதமர் ஜான் மேன்லி தலைமை வகிக்கிறார்.

தனது சுற்றுப்பயணத்தின்போது இந்த பிரச்சினையை ராணி வெளியே காட்டிக் கொள்ளவில்லை. (ஒ)

# பாக். பொலீஸ் நிலையத்தில் 'பார்சல்' குண்டு வெடித்தது!

கராச்சி,ஒக்.18

பாகிஸ்தானின் கராச்சியில் உள்ள பொலீஸ் நிலையத்தில் பார்சல் வெடி குண்டு வெடித்தது. இதில் 7 பொலீஸார் காயம் அடைந்தனர்.

பொலீஸ் நிலையத்துக்கு தபாலில் ஒரு பார்சல் வந்தது. அதை பொலீஸாரில் ஒருவர் பிரித்தார். அப்போது குண்டு வெடித்தது.

இந்தப் பொலீஸ் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் வைத்து மதத் தீவிரவாதிகள் சிலர் சமீபத்தில் பொலீஸாரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# தலிபான் ஆதரவு மதகுரு பாகிஸ்தான் பிரதமராவாரா?

இஸ்லாமாபாத்,ஒக்.18

'பாகிஸ்தானில் தலிபான் ஆதரவு மதகுருவை பிரதமராக அறிவித்தால் மட்டுமே கூட்டணி ஆட்சிக்கு சம்மதிப்போம்' என்று மதவாதக் கூட்டணி அறிவித்துள்ளது.

பாகிஸ்தானில் சமீபத்தில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் எந்த ஒரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. அதிபரின் ஆதரவுபெற்ற கிங்ஸ் பார்ட்டி(மன்னர் ஆட்சி) என்று அழைக்கப்படும் முஸ்லிம் லீக் கட்சி 77 இடங்களைப் பிடித்து முதல் இடத்தில் உள்ளது.

2ஆவது இடத்தில் முன்னாள் பிரதமர் பெனாஸிரின் பாகிஸ்தான் மக்கள் கட்சி உள்ளது. இதற்கு 63 இடங்கள் கிடைத்துள்ளது. 3ஆவது இடத்தில் 6 கட்சிகள் கொண்ட மதவாதக் கூட்டணி உள்ளது. அது 44 இடங்களைப் பிடித்துள்ளது. சுயேட்சை உறுப்பினர்கள் 28 பேர் வெற்றிபெற்று இருக்கிறார்கள்.

நாடாளுமன்றத்தில் மொத்த இடம் 272. இதில் 136 இடங்களைப் பெற்ற கட்சியே ஆட்சி அமைக்கமுடியும். ஆனால், அந்த அளவுக்கு உறுப்பினர்கள் எந்த ஒரு கட்சிக்கும் கிடையாது. இதனால், கூட்டணி ஆட்சிதான் அங்கு அமைக்கமுடியும்.

எனவே, முதல் இடத்தில் இருக்கும் முஸ்லிம் லீக் தலைவர் ஷுஜாத ஹுசைன் கூட்டணி ஆட்சி அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார். இதற்காக பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களை அவர் சந்தித்துப் பேசினார். முன்னாள் ஜனாதிபதி பரூக் லெகாரியை அவரது வீட்டில் சந்தித்தபோதுதான் முஸ்லிம் லீக் கட்சியை உள்ளடக்கிய தேசிய கூட்டணி மற்ற கட்சிகளுடன் சேர்ந்து ஆட்சி அமைக்கும் என்று தீர்மானிக்கப்பட்டது.

தேசியக் கூட்டணியைச் சேர்ந்த ஒருவர்தான் பிரதமராகத் தேர்ந்து எடுக்கப்படவேண்டும் என்று லெகாரி வலியுறுத்தினார். 6 கட்சிகள் கொண்ட மதவாதக் கூட்டணியின் மேல் மட்டத் தலைவர் மவுலானா பஸ்லூர் ரகுமானையும் ஷுஜாத் சந்தித்துப் பேசினார். அப்போது கூட்டணி ஆட்சி குறித்து தோழமைக் கட்சிகளுடன் ஆலோசனை நடத்திவிட்டு கூறுவதாக பஸ்லூர் ரகுமான் தெரிவித்தார்.

அமெரிக்க எதிர்ப்பு கொள்கையைச் சொல்லி வாக்குளைப் பெற்றுவிட்டு, அமெரிக்க ஆதரவுக் கட்சியுடன் கூட்டணி சேருவது என்பது மதவாதக் கூட்டணிக்கு கடினமான ஒன்று.

இதற்கிடையில், முட்டாஹிதா மஜ்லிஸ் - இ - அமல் என்ற 6 கட்சி இஸ்லாமியக் கூட்டணியில் இடம் பெற்றுள்ள ஜமாத் - இ - இஸ்லாமி கட்சியின் தலைவரும், கூட்டணியின் துணைத் தலைவருமான குவாசி உசேன் அகமது "நாங்கள் கூட்டணி ஆட்சியில் இடம்பெறவேண்டுமானால், எங்கள் பிரதமராக மவுலானா பஸ்லூர் ரகுமான் இருப்பார்" என்று அறிவித்தார். முஸ்லிம் - லீக் காயிதே - இ - அசாம் கட்சித் தலைவர் சவுத்ரி ஷுஜாத் ஹுசேன் அவரைத் சந்தித்து ஆலோசனை நடத்தியபோது அகமது இப்படி அறிவித்தார். மவுலானா பஸ்லூர் ரகுமான், தீவிரவாத தலிபான் இயக்கத்துக்கு நெருக்கமான ஜமியாட் உலேமா - இ - இஸ்லாம் கட்சியின் தலைவர் ஆவார். மவுலான பஸ்லூர் ரகுமான் பிரதமரானால், ஆப்கானிஸ்தான் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டுள்ள - பாகிஸ்தானிலும் தனது படைகளை நிலை நிறுத்தியுள்ள - அமெரிக்காவுக்கு எதிரான போக்கையே கடைப்பிடிப்பார் என்று கருதப்படுகிறது. (ஒ)

உலக அரங்கில்

# பங்களாதேஷ் மீனவர்கள் சூறாவளியில் சிக்கி மாயம்!

டாக்கா,ஒக்.18

வானிலை அவதானிப்பு நிலையத்தின் எச்சரிக்கையையும் மீறி கடலுக்கு மீன் பிடிக்கச்சென்ற பங்களாதேஷ் மீனவர்களில் 165 பேர் சூறாவளியில் சிக்கி காணாமற்போய்விட்டனர்.

வங்காளவிரிகுடாக் கடலுக்குள் மீனவர்கள் சென்றபோது பலத்த சூறாவளியில் படகுகள் சிக்கிக் கவிழ்ந்ததாக பங்களாதேஷ் கடலோரக் காவற் படையினர் தெரிவித்தனர். (ஒ)

# மதகுருவுக்கு 7 ஆண்டு சிறை!

தெஹ்ரான்,ஒக்.17

'ஈரான் சீர்திருத்தத்தின் எதிர்காலம்' என்ற பெயரில் 2 ஆண்டுகளுக்கு முன்னர் ஜேர்மனியில் ஒரு மாநாடு நடந்தது. அதில் அரசின் தடையையும் மீறி ஈரானைச் சேர்ந்த மதகுரு சுவி எஸ்கவாரி என்பவர் கலந்துகொண்டார். நாடு திரும்பியதும் அவர் கைதுசெய்யப்பட்டார்.

அவருக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து ஈரான் இஸ்லாமிய நீதிமன்றம் தீர்ப்புக் கூறியிருக்கிறது.

ஈரானியப் பெண்கள் உடையை மாற்றவேண்டும் என்று ஜேர்மன் மாநாட்டில் பேசியதற்காகவும், பொய்யைப் பரப்பியதற்காகவும் ஜேர்மன் மாநாட்டில் கலந்துகொண்டதற்காகவும், இந்தத் தண்டனை விதிக்கப்பட்டதாகத் தீர்ப்பில் கூறப்பட்டு இருக்கிறது. (ஒ)

## தேர்தல் குறித்த குற்றச்சாட்டு:

# ஐரோப்பிய ஒன்றியக் குழுவுக்கு பாக். அதிபர் முஷாரப் கண்டனம்!

இஸ்லாமாபாத், ஒக். 18

சமீபத்தில் பாகிஸ்தானில் இடம்பெற்ற தேர்தலை பார்வையிட வந்த ஐரோப்பிய ஒன்றியப் பார்வையாளர்கள் குழுவின் தலைவர் ஜோன் கஷ்னாகன் தேர்தலைக் குறை கூறி இருந்தார். அத்துடன் நாடாளுமன்றத்தின் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு மாற்றும் வகையில் அதிபர் முஷாரப் பாகிஸ்தான் அரசியல் சட்டத்தில் ஏற்கனவே திருத்தம் செய்வதையும் அவர் குற்றஞ்சாட்டி இருந்தார்.

இதற்கு முஷாரப் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். ஐரோப்பிய பார்வையாளர்கள் குழுவுக்கு பாகிஸ்தான் விவகாரங்களில் தலையிடும் உரிமை இல்லை என்றும் அவர் கூறியுள்ளார். (ஒ)




இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் பொலீஸ் தலைமையகக் கட்டடத்தின் முன்பாக இஸ்லாமிய பாதுகாப்பு முன்னணியைச் சேர்ந்தவர்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட போது எடுக்கப்பட்டபடம். பாலித்தீவில் வெடிகுண்டை வெடிக்க வைத்து 180 பேரைக் கொன்ற அமெரிக்கா, பழியை இஸ்லாமியத் தீவிரவாதிகள் மீது போடுவதாகத் தெரிவிக்கும் பதாகையை அவர்கள் ஏந்தியுள்ளனர்.

உங்களது
பிறிட்ஜ் வேலைகளுக்கும், காஸ் வெல்டிங் வேலைகளுக்கும்
நீங்கள் நாடவேண்டிய சிறந்த இடம்:
கணேசர் பிறிட்ஜ் மெக்கானிக் அன் பெயின்ரிங்
மூத்தநயினார் கோயிலடி, ஆனைக்கோட்டை.
தொலைபேசி: 0777242155 (9547)


## ஓராண்டு இதய அஞ்சலி

பிறப்பு 19 - 08 - 1951



இறப்பு 30 - 10 - 2001

### அமரர் இராமமூர்த்தி சிவசுப்பிரமணியம்

திதி: 18.10.2002 திரயோதசி

இனிய நாத ஓசை அடங்கி ஓராண்டும் ஆனதோ?
உங்கள் திருமுகம் எம் நெஞ்சில் நிலைத்திருக்கின்றதே!
எங்கள் வாழ்வின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்தீர்களே!
மீண்டும் உங்கள் நாதம் கேட்கும் நாள் எந்நாளோ?

- குடும்பத்தினர்.

*புகையிரத நிலைய வீதி,*
*காளிகோயிலடி, கோண்டாவில் மேற்கு.*
(9571)

## 45ஆவது நினைவு நாள்

மலர்வு 1974 - 12 - 12



உதிர்வு 2002 - 09 - 04

### அமரர் கந்தசாமி பாமதேவி

45 நாள்கள் விரைந்தோடிச் சென்றதே
கலங்கிய எம்மனம் உனை நினைத்துத் தவிக்குதே
பாசமில்லா வஞ்சகர் செய்த சதியினால்
துடிதுடிக்க உன் உயிர் பறந்து சென்றதோ?
ஐம்புலன்களில் ஒரு புலன் இழந்துவிட்டோம்!
உன் நினைவோ தினந்தினம் எம்மை வதைக்கிறதே!

உன்னால் தவிக்கும்:
அம்மா, சகோதரர்கள்,
மைத்துனன், பிள்ளைகள்.

*மணற்பகுதி,*
*புத்தூர்.*
(9467)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மண்மகிழ 22 - 08 - 1926



கண் நெகிழ 19 - 09 - 2002

### அமரர் வெங்கடாசலம் திருமேனிப்பிள்ளை

*(ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்)*

19.09.2002 அன்று சிவபதமெய்திய அன்னாரது அந்தியேட்டிக்கிரியைகள் நாளை(19.10.2002) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சமுகந்தந்து அந்நிகழ்விலும் மற்றும் அன்னாரது வீட்டுக்கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரண நிகழ்வில் கலந்து எமது துயரில் பங்கேற்றவர்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பியோர், கூடநின்று உதவியோர் மற்றும் அனைவருக்கும் எம் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*ஆலடி ஒழுங்கை,*
*வல்வெட்டித்துறை.*
(C/24285)
- குடும்பத்தினர்.


## கோலாகலமான புதுப்புடைவைக் கடைத் திறப்புவிழா





* யாழ்.நகர மக்களின் மனம் மகிழ்ந்திட
* நவநாகரிக உலகில் நவயுகம் திகழ்ந்திட
* மங்கையரென்ன ஆடவரைக் கூட
கவர்ந்திழுக்கும் காட்சியறையுடன்
தங்கத் தாமரை தரணிமீது பொங்கிப் புடைசூழ
எங்கள் திருநாட்டில் தித்திப்பாய் எழுகின்றாள்!
அவளே.......... உங்கள்

சுவேதா

சுவேதா சில்க்ஸ்.......................... இது உங்கள் ஸ்தாபனம்
சுவேதா சில்க்ஸ்.......................... இது உங்கள் இல்லம்
சுவேதா சில்க்ஸ்.......................... இது உங்களின் உள்ளம்
சுவேதா சில்க்ஸ்.......................... இதுவே உங்களின் தெரிவு

21.10.2002 திங்கட்கிழமை
முற்பகல் 10.00 மணிமுதல் 11.00 மணிவரையுள்ள சுபவேளையில்

சுவேதா சில்க்ஸ்

ஸ்தாபனத்தின் திறப்புவிழா வைபவம் இல.05, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் நிகழ்வுறவுள்ளது. அனைத்து வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்களையும் வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இத்தினத்திலிருந்து 21.10.2002 முதல் 04.11.2002 தீபாவளிப் பண்டிகைத் தினம் நண்பகல் 12.00 மணிவரை விற்பனையாகும் புடைவைகளுக்கான விற்பனைச் சிட்டைகள் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

| | |
|---|---|
| *முதலாம் பரிசு* | புத்தம் புதிய லுமாலா சைக்கிள் |
| *இரண்டாவது பரிசு* | ரூபா 2000/= ரொக்கம் (வவுச்சர்) |
| *மூன்றாவது பரிசு* | ரூபா 1000/= ரொக்கம் (வவுச்சர்) |

*இல.05, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.* (9555) - சுவேதா சில்க்ஸ் ஸ்தாபனத்தார்.


# வலிகாமம் வடக்குப் பிரதேச சபை
## காங்கேசன்துறை, மல்லாகம்
## கேள்வி அறிவித்தல் - 2002

கீழ்க்குறிக்கப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் 'இக்ராட்' நிறுவனத்தில் தரம் 'எம் 9' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திற்குப் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கப்படும் கடைசித் திகதி:** 29-10-2002ஆம் திகதி பிற்பகல் 3.00மணிவரை.
**கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:** 30-10-2002ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிவரை.
**கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி:** 31-10-2002ஆம் திகதி காலை 10.30 மணி.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை 'தலைவர், வலி.வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை, மல்லாகம்' என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கும் எதிர்வரும் 30-10-2002ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் எழுதப்படல் வேண்டும்.

| இல. | வேலையின் பெயர் | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் (VAT உட்பட) |
|---|---|---|---|
| 01. | கேணிப்பிட்டிச்சுடலை வீதி புனரமைப்பு | 1500.00 | 600.00 |
| 02. | கேணிப்பிட்டிச் சுடலை திருத்தம் | 1000.00 | 300.00 |
| 03. | குட்டியப்புலம் கோணாவளை வீதி திருத்தம் | 2000.00 | 600.00 |
| 04. | முன்பள்ளி அமைத்தல், குளமங்கால் | 1000.00 | 300.00 |
| 05. | தம்பளைச் சுடலை திருத்தமும் சுடலை வீதி புனரமைத்தலும், அளவெட்டி | 500.00 | 300.00 |
| 06. | சன்மார்க்க முன்பள்ளி மலசலகூடம் அமைத்தல், மல்லாகம் | 100.00 | 300.00 |
| 07. | அளவெட்டி மேற்கு புதுப்பனையடி ஈஸ்வரி சனசமூக நிலைய புனரமைப்பு | 500.00 | 300.00 |

இது தொடர்பான மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

திருமதி பா.ஸ்ரீபாஸ்கரன் ஜே.பி.யு.எம்.
தலைவர்.

வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,
காங்கேசன்துறை, மல்லாகம்.
15-10-2002.
(C/24286)

பொதுசன நூலகம்

## உதயன்

### காஞ்சிரங்குடாவும் கண்காணிப்புக் குழுவும்

திருக்கோயில், காஞ்சிரங்குடா விசேட அதிரடிப்படை முகாமின் முன்னால் கடந்த 9ஆம் திகதி புதன்கிழமை பொதுமக்களில் ஏழு பேர் விசேட அதிரடிப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை எவ்வளவு முயன்றாலும் மறக்கமுடியவில்லை.

பொதுமக்களின் உணர்வலைகளுக்கும் ஜனநாயக உரிமைகளுக்கும் விசேட அதிரடிப்படையினர் மதிப்பளிப்பதில்லை என்பதை அந்தச் சம்பவம் எடுத்துக்காட்டுகிறது.

அது மட்டுமல்ல, விசேட அதிரடிப் படையினரின் அசுரத் தனத்தையும், நெஞ்சில் ஈரமோ மனிதாபிமானமோ சிறிதுமற்ற வரட்டுத் தன்மையையும் கூட அந்தச் சம்பவம் துலாம்பரமாக எடுத்துக்காட்டுகிறது.

காஞ்சிரங்குடா படுகொலைச் சம்பவம் விசேட அதிரடிப் படையினரை இனங்காட்டுவதோடு நின்றுவிடவில்லை. அம்பாறை மாவட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் நடுநிலைமையும் அதாவது பக்கம் சாராமையையும் கேள்விக்குறியாக்கியிருக்கிறது.

கண்காணிப்புக் குழுவின் பதில் தலைவர் திருமதி ஆன் லூயிஸ், காஞ்சிரங்குடா சம்பவம் பற்றி அறிந்ததும் தனி ஒருவராக அங்கே விரைந்து சென்று விசேட அதிரடிப் படையினரிடம் சம்பவம் பற்றிக் கேட்டறிந்துவிட்டு விடுத்த அறிக்கையே அம்பாறை கண்காணிப்புக் குழுமேல் அனைவருக்கும் ஆத்திரத்தையும் சந்தேகத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

கண்காணிப்புக் குழு உறுப்பினர்களைக்கூட சீற்றமடையச் செய்திருக்கிறது. கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற குழுவின் வாராந்தக் கூட்டத்தில் உறுப்பினர்கள் நெருப்பெடுத்தார்கள். குறிப்பாக குழுவில் உள்ள அரச தரப்புப் பிரதிநிதிகளில் ஒருவரான மெல்வின் விஜேசேகரா கொதித்து எழுந்தார். அறிக்கையில் கூறப்பட்டிருப்பதெல்லாம் அப்பட்டமான பொய்யென்று அவர் அடித்துக் கூறினார்.

"சம்பவம் இடம்பெற்ற அன்று முகாமுக்குள் பொதுமக்கள் அத்துமீறிப் பிரவேசித்தனர் என்றும் அதனால் பொறுமை இழந்த படையினர் முதலில் கண்ணீர்ப் புகையையும் றப்பர் குண்டையும் பயன்படுத்திய பின்னரே நிஜக் குண்டைப் பயன்படுத்தினார்கள். அதாவது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள் என்று திருமதி ஆன் லூயிஸ் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார். இது தவறான தகவல்.

"முதலில், ஆன் லூயிஸ் அங்கு செல்லும் போது எங்களில் ஒருவரையாவது அழைத்துச் சென்றிருக்கவேண்டும். சரி, சம்பவம் நடந்த இடத்திற்குத் தனியே சென்றிருந்தாலுங்கூட திரும்பி வந்த பின்னர் அறிக்கை விடுமுன்னர் கூட்டத்தைக் கூட்டி எங்களுடன் கலந்தாலோசித்திருக்க வேண்டும்.

அப்படியொன்றும் நடக்கவில்லை. ஒருவர் தனியே சென்று சம்பவம் தொடர்பாகப் படையினரின் கதையை மட்டும் கேட்டுவிட்டு வந்து படையினருக்குச் சார்பாக கண்காணிப்புக் குழுவின் பெயரால் அறிக்கை விடுவது எமது (குழுவின்) நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தக் கூடியது. மொத்தத்தில் கண்காணிப்புக் குழுவுக்கு இதனால் பெரிய அவமானம்.

"அதிரடிப் படையினர் கண்ணீர்ப் புகையையோ, றப்பர் குண்டுகளையோ பயன்படுத்தவில்லை. விசேட அதிரடிப் படையினர் கூறுவது பொய். அவர்கள் வேண்டுமென்றே திட்டமிட்டு அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று குவித்தார்கள். இந்த ஒரு பக்கச்சார்பு அறிக்கையை வாபஸ் பெற வேண்டும்."

இப்படி அரச தரப்பு உறுப்பினர்களில் ஒருவரும் இலங்கை நிர்வாக சேவை அதிகாரியுமான மெல்வின் விஜேசேகரா எதையும் ஒழிக்காமல் அப்பட்டமாகக் கனல்தெறிக்கக் கூறினார்.

"உங்களுடைய ஆவேசம் நியாயமானதுதான். இப்போது சம்பவம் பற்றி அரச கமிஷன் விசாரணை நடைபெறுகிறது. அந்த விசாரணை அறிக்கை வரட்டும். வந்ததும் ஒரு முடிவுக்கு வருவோம" என்று தலைவர் சமாதானம் பேசினார். ஆயினும், மெல்வின் விஜேசேகரா விடவில்லை. தலைவர் வேறுவழியின்றி, "சரி இங்கு நடந்தவற்றை கண்காணிப்புக் குழு தலைமையகத் தலைவருக்கு அறிவிக்கிறேன். அறிக்கையை மீள்பரிசீலனை செய்வோம்" என்றார். கூட்டத்தில் எந்தவோர் உறுப்பினராவது அறிக்கையை வரவேற்றுப் பேசவில்லை. இதற்கு மேல், விசேட அதிரடிப்படையின் நடவடிக்கை பற்றியும் கண்காணிப்புக்குழுவினர் சிலர் நடந்துகொள்ளும் விதம் பற்றியும் என்ன சொல்ல இருக்கிறது?

---

(சமாதானச் சூழல் நிலவும் நிலையில்)

# நாகர்கோவில் மக்களுக்கு இனியாவது விடிவு கிட்டுமா?

(வடமராட்சி கிழக்கு செய்தியாளர்)

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதையடுத்து வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பல்வேறு கிராமங்களில் மக்கள் மீளக்குடியமர்ந்து வருகின்றனர்.

கடந்த 6 மாத காலத்தினுள் மாமுனை தொடக்கம் கேவில் வரையுள்ள பிரதேசத்தில் மூவாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த பதினோராயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் மீளக்குடியமர்ந்துள்ளார்கள். அப்பகுதியில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றிய திட்டங்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை இந்த உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள நாகர்கோவில் மேற்கு, நாகர்கோவில் கிழக்கு, நாகர்கோவில் தெற்கு ஆகிய மூன்று கிராமசேவையாளர் பிரிவுகளில் மக்கள் மீளக்குடியமர அனுமதி வழங்கப்படவில்லை. இக்கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 1,500 குடும்பங்கள் வடமராட்சியில் உறவினர்களின் வீடுகளிலும் நலன்புரி நிலையங்களிலும் ஏதிலிகளாக வாழ்ந்து வருகின்றனர்.

அம்பன் கிழக்குப் பகுதியிலும் நாகர்கோவில் மேற்கு, நாகர்கோவில் கிழக்கு, நாகர்கோவில் தெற்கு ஆகிய மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளிலும் படையினரின் முகாம்கள் அமைந்துள்ளன.

இடம்பெயர்ந்து வாழும் குடும்பங்களில் சுமார் 1,250 குடும்பங்கள் கடற்றொழிலையும், சுமார் 200 குடும்பங்கள் விவசாயத்தையும் தமது தொழிலாகச் செய்து வாழ்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது. 2000ஆம் ஆண்டு மார்ச் மாதம் அப்பகுதியில் ஏற்பட்ட யுத்த நிலைமை காரணமாக இக்குடும்பங்கள் இடம்பெயர்ந்ததிலிருந்து எவ்வித தொழிலுமின்றி வருமானமுமற்ற நிலையில் வாழ்ந்துவருகின்றன. -

அத்தோடு, இப்பகுதியில் இயங்கிவந்த பல அரச நிறுவனங்கள் தற்போது இங்கு இயங்கமுடியாதுள்ளன. நாகர்கோவில் மகா வித்தியாலயம், நாகர்கோவில் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை ஆகியவற்றில் படையினர் நிலைகொண்டுள்ளதாகத் தெரியவருகின்றது. அம்பன் சுமநல சேவை நிலையம், பருத்தித்துறை பிரதேச சபையின் குடத்தனை உப அலுவலகம், குடத்தனை பொது நூலகம் ஆகியன அப்பகுதியில் செயற்படமுடியாத நிலையில் உள்ளன. அம்பன் மத்திய மருந்தகமும், பிரசவ விடுதியும் படையினரின் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ளது எனக் காரணம் கூறப்பட்டு கடந்த 2 வருடங்களாக செயற்பட அனுமதிக்கப்படவில்லை. வைத்தியசாலை உபகரணங்கள், தளபாடங்கள், மருந்துப் பொருள்கள் ஆகியன கைவிடப்பட்ட நிலையிலேயே உள்ளன.

அம்பன் அரசினர் மத்திய மருந்தகமும், பிரசவ விடுதியும் இயங்காததினால் மணற்காடு, குடத்தனை, குடத்தனை வடக்கு, பொற்பதி, அம்பன் மக்கள் கடந்த இரண்டு வருடங்களாக பல சிரமங்களை அனுபவித்து வருகின்றார்கள். கடந்த காலங்களில் உடனடி சிகிச்சை வசதி இன்மையினால், உயிரிழப்புகள் கூட கடந்த காலங்களில் ஏற்பட்டுள்ளன.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலயம் உட்பட 10இற்கும் மேற்பட்ட இந்து ஆலயங்களும், ஒரு கிறிஸ்தவ தேவாலயமும் பூசைகள், வழிபாடுகள் அற்ற நிலையில் கடந்த இரண்டு வருடங்களாக உள்ளன. நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலயத்தை மீளத் திறந்து பூசை வழிபாடு நடத்துவதற்கு பல தடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், அது கைகூடாமல் போய்விட்டது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பின்னர் இடம்பெயர்ந்திருந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் மீளவும் தமது சொந்த மண்ணுக்குச் சென்று தமது புதிய வாழ்வு ஒன்றுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றபோது, இம்மக்களின் வாழ்வு, உரிமை மறுக்கப்பட்டு இருக்கிறது. தமது எதிர்காலத்தின் மீது இம்மக்கள் அவநம்பிக்கை கொள்ள இது காரணமாக அமைந்துவிடக்கூடாது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் எடுப்பார்களா? (ம-182)

---

(மிருசுவில் குடியேற்றத்திட்டத்தில்)

## மீளக் குடியமரச் சென்றோர் ஏமாற்றத்துடன் திரும்பினர்

தென்மராட்சி,ஒக்.18

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்தில் மீளக் குடியமர்வதற்கான ஆயத்தங்களை பல குடும்பங்கள் மேற்கொண்டபோதும், படையினரால் அக்குடும்பங்கள் திருப்பி அனுப்பப்படுவதாகக் கூறப்பட்டது.

இப்பகுதியில் உள்ள பத்து வீடுகளில் படையினரின் உடைமைகள் உள்ளதாகவும் - விரைவில் அந்த வீடுகளை விட்டு வெளியேறி உரிமையாளர்களிடம் அவற்றை ஒப்படைப்பதாகப் படை அதிகாரிகள் தெரிவித்ததாகவும் -

இதனை நம்பிய மக்கள் அப்பகுதியில் மீளக் குடியமர்வதற்கான ஆயத்தங்களை மேற்கொண்ட வேளையில் மேலும் பத்துக் காணிகளையும் சேர்த்து படையினர் முட்கம்பிவேலி அமைத்து வருவதாகவும் - பொதுமக்கள் தரப்பில் கூறப்படுகிறது.

இதனால் முட்கம்பிவேலிக்கு உட்பட்ட பகுதிக்குள் உளள பத்து குடியிருப்பாளர்களும் அங்கு தொடர்ந்து இருக்க முடியாத நிலையில் வெளியேற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

---

பாடசாலைகளில் முதலாம் தரத்துக்கு

## மாணவர்களை சேர்க்கும் அதிகாரம் அதிபர்களுக்கு

கொழும்பு,ஒக்.18

அடுத்த ஆண்டுமுதல் மாணவர்களைப் பாடசாலைகளில் முதலாம் தரத்துக்கு அனுமதிக்கும் முழு அதிகாரம் பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட கல்வி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இதற்கமைய பாடசாலைகளின் மீளாய்வுச் சபைகள் கலைக்கப்படவுள்ளன.

இந்த வகையில், சில பாடசாலை அதிபர்கள் விதிமுறைகளை மீறி அனுமதிகள் வழங்கியுள்ளதாக பல முறைப்பாடுகள் கல்வி அமைச்சுக்குக்கிடைத்துள்ளதாகவும் -

அவை சம்பந்தமாக எடுக்கப்படவேண்டிய ஒழுங்கு நடவடிக்கைகள் பற்றித் தீர்மானிப்பதற்காக கல்வி அமைச்சர், அமைச்சின் மேலதிகாரிகளுடன் கலந்தாலோசனை செய்ய விருப்பதாகவும் -

தெரிவிக்கப்படுகிறது. (ஒ)

---

### நாளை

ஐப்பசி 02
சனிக்கிழமை
(19.10.2002)
திதி : திரயோதசி
முற்பகல் 9.15 வரை.
நட்சத்திரம: உத்திரட்டாதி
பின்னிரவு 3.47 வரை.
சுபநேரம் : 3.02 - 4.32
ராகுகாலம் : 9.02 - 10.32
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

சுதந்திர இலட்சியத்தை அடையும் நோக்குடன் மரணத்தை வரவேற்பவர்களை அச்சுறுத்தும் சக்தி உலகில் எவருக்கும் கிடையாது.

---

அமெரிக்க - ஈராக் யுத்த அச்சம்:

## மத்தியகிழக்கில் இலங்கையர்களை பாதுகாக்க விசேட குழு விரைவு

கொழும்பு,ஒக்.18

ஈராக்மீது அமெரிக்கா தாக்குதல் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ள இந்தவேளையில், மத்திய கிழக்கில் வேலை செய்யும் இலங்கையர்களைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புச் சபையின் விசேட குழு ஒன்று அங்கு செல்லவுள்ளது.

தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவின் பணிப்பின் பேரிலேயே இந்த உடனடி நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

'குவைத்தில் சுமார் ஒரு லட்சத்து 70 ஆயிரம் இலங்கையர்கள் வேலை செய்கிறார்கள். சவூதி அரேபியாவில் சுமார் மூன்றரை லட்சம் இலங்கையர்கள் வேலை செய்கிறார்கள். ஆனால், ஈராக்கில் அங்குள்ள இலங்கைத் தூதரகத்தினர் தவிர வேறு இலங்கையர்கள் எவரும் இல்லை - என்றார்.

இதேவேளை -

அமெரிக்கா - ஈராக் யுத்தம் வெடித்தால் இலங்கையில் எரிபொருள் நிலைவரம் பற்றி இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தவிசாளர் தஹம் விமலசேன தெரிவிக்கையில்:-

ஈராக் - அமெரிக்க யுத்தம் இலங்கை எரிபொருள் நுகர்வில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தாது. ஈரான் மற்றும் சவூதியிலிருந்து நாம் தாராளமாக எரிபொருளைப் பெற்றுக்கொள்ளமுடியும். எம்மிடம் அடுத்த ஒரு மாதத்துக்குரிய மசகு எண்ணெய் இருப்பில் உள்ளது. அத்துடன் இப்படிப்பட்ட அவசரகாலங்களில் இலங்கைக்கு எரிபொருள் வழங்குவது என்ற ஒப்பந்தம் ஒன்றை இந்தியாவுடன் ஏற்கனவே செய்துகொண்டுள்ளோம்- என்றார். (ஒ)

---

(பின்தங்கிய கிராம மக்களின்)

## வாழ்க்கைத் தரத்தை உயர்த்த கெயர் நிறுவனம் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.18

குடாநாட்டிலுள்ள பின்தங்கிய கிராமங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு கெயர் நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக குடாநாட்டிலுள்ள 4 பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து 10 கிராமசேவகர் பிரிவுகள தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் ஜே/157, ஜே/161 ஆகிய பிரிவுகளும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஜே/146, ஜே/150, ஜே/154 ஆகிய பிரிவுகளும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் ஜே/215, ஜே/224, ஜே/239 ஆகிய பிரிவுகளும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஜே/279, ஜே/271, ஜே/267, ஜே/278 ஆகிய பிரிவுகளுமே தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

கடந்த 30ஆம் திகதி நடைபெற்ற மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே இந்தக் கிராமங்கள் சிபாரிஸின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. தற்போது இதன் முதற்கட்டமாக "பங்கேற்புடனான தேவைப் பகுப்பாய்வு" என்ற திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டது.

இதன்கீழ் இக்கிராமங்களிலுள்ள மக்களின் குறைபாடுகள், தேவைகள் போன்ற விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன. இந்த விவரங்கள் திரட்டப்பட்ட பின்னர் அந்த மக்களின் தேவைகளுக்கேற்ப சுயதொழில் ஊக்குவிப்புத் திட்டம், சேமிப்புத் திட்டம், சுழற்சி முறைக் கடன் திட்டம் போன்ற உதவித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதோடு ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்களுடனும் தொடர்புகொண்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் கூறப்பட்டது.

எனினும், அத்தியாவசிய உடனடி நிவாரணப் பணிகள் தேவைப்படும் பகுதிகளில் இந்த சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்படமாட்டாது எனவும் -

அந்தப் பகுதிகளில் உடனடி நிவாரணப் பணிகள் முடிவடைந்து ஓரளவு மேம்பாட்டுக்குத் தயாரான நிலையை அடைந்த பின்பே அங்கு இந்த சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் -

'கெயர்' நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-4)

# முதலாவது வருட நினைவு



# திருமதி சிவராசா செல்வராணி

மலர்வு
29-03-1952

மறைவு
18-10-2001

*திதி: 06.11.2002*

அன்போடு எம்மை ஆதரவாய் அரவணைத்து
அன்பு மொழி பேசிய அழகுமுகம் மறைந்ததோ?
இன்முகங்காட்டி எம் இதயத்தில் இடம்பிடித்த
செல்வராணியே நீ சென்ற இடம்தான் எதுவோ?
உன் முகம் மறைந்து இன்று ஓராண்டும் ஆனதோ!
உள்ளத்தில் உம் நினைவு நிலைத்தேவிட்டது
என்றுமே எம்முடன் இணைந்து நீர் இருப்பதால்
இதயத்தால் அஞ்சலி செலுத்துகின்றோம் இன்று!

தகவல்:
ஆ.சிவராசா,
வீரப்பதிராயன்,
கரணவாய் தெற்கு, கரணவாய்.

(C/24254)

உன் நினைவுடன்:
**கணவர், தாய்.**

யாழ்ப்பாணம் நாவாந்துறைப் படிப்பகம்

# புரிந்துணர்வு உடன்படிக்கையை 800 தடவைகள் புலிகள் மீறியுள்ளனர்!

## இவ்வாறு கூறுகிறார் டக்ளஸ் தேவானந்தா

**தற்போதைய அரசியல் நிலைவரம், சமாதானப் பேச்சுக்கள் குறித்து ஈ.பி.டி.பி. அமைப்பின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவை "லக்பிம" சிங்கள வார இதழ் பேட்டி கண்டு பிரசுரித்தது. கடந்த 6ஆம் திகதிய இதழில் வெளியான அப்பேட்டியின் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.**

### மாற்றார் தோட்டத்திலிருந்து...

### தமிழில்: கஜனி

*கேள்வி:* விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே சமாதானப் பேச்சுக்களின் முதற்கட்டம் தாய்லாந்தில் இடம்பெற்று முடிவடைந்துள்ளது. இது குறித்துத் தங்கள் கருத்து என்ன?

*பதில்:* இந்தப் பிரச்சினை தொடர்பாக மிக விரைவில் அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என நாங்கள் கூறுகின்றோம். அது தொடர்பாக எடுக்கப்படும் எந்தவொரு நியாயமான வேலைத் திட்டத்திற்கும் எமது ஒத்துழைப்பை வழங்குவோம். அதேபோலவே அரசு இவ்விடயத்தில் நேர்மையுடன் நடவடிக்கைகளை மேற்கொள்கிறது என்பதையும் நாம் ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால், விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் குறித்து எமக்கு நம்பிக்கையில்லை.

*கேள்வி:* விடுதலைப் புலிகள் அமைப்புமீது நம்பிக்கை இல்லை என ஏன் கூறுகிறீர்?

*பதில்:* நாங்களும் அவர்களும் இருவேறு அமைப்புகளில் உள்ளதால் அந்த அவநம்பிக்கை உருவாகவில்லை. அவர்களது கொள்கைகளைப் போலவே அவர்களது செயற்பாடுகள் குறித்தும் நாம் மாறுபட்ட கருத்தைக் கொண்டுள்ளோம். எனவேதான் இந்த முயற்சியை கடற்கரையில் மணல்வீடு கட்டுவதற்கு ஒப்பானது எனக்கூறுகின்றோம். அவர்களது கடந்தகால செயற்பாடுகள் குறித்து நாமறிவோம்.

*கேள்வி:* சரி. ஈ.பி.டி.பி. அமைப்பிற்கு விடுதலைப் புலிகள் அமைப்பு மீது நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம். இருப்பினும், தற்போது அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மேற்கொள்ளப்படும் சமாதானப் பேச்சுக்களின்மூலம் பயன்தரும் தீர்வு எட்டப்படும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இல்லையா?

*பதில்:* ஜனநாயக சுதந்திரம், மனித உரிமைகள் போன்ற நடவடிக்கைகளில் அந்த இருதரப்பினருக்கும் இடையே இணக்கம் காணப்படின் அது நல்லதே. அதேபோல ஐக்கிய இலங்கைக்குள் விடுதலைப் புலிகளுடன் சமாதானத்தை மேற்கொள்ள அரசுக்கு முடியுமாயின் அதை நாம் ஏற்றுக்கொள்வோம். இதற்கு முன்னரும் புலிகள் ஜனாதிபதி பிரேமதாஸாவுடனும் ஜனாதிபதி சந்திரகாவுடனும் சமாதானப் பேச்சுக்களை மேற்கொண்டனர். அந்தச் சமாதானப் பேச்சுக்களுக்கு என்ன நடந்தது என்பதை நாம் அறிவோம். சுருங்கக் கூறின் தற்போது நடைமுறையில் உள்ள யுத்த நிறுத்த உடன்பாட்டை அவர்கள்(புலிகள்) 800 தடவைகளுக்கு மேல் மீறியுள்ளனர்.

*கேள்வி:* இருப்பினும் கடந்த 10 மாத காலத்தில் நீங்கள் அவநம்பிக்கைகொள்ளும் அளவிற்கு எந்தவொரு சம்பவமும் இடம்பெறவில்லை இல்லையா?

*பதில்:* ஏன் இல்லை. நாள்தோறும யுத்தநிறுத்த உடன்பாட்டை அவர்கள் மீறுவதை எம்மால் காணமுடிகிறது. ஒக்ரோபர் மாதத்திற்கு முன்னர் ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் வெளியேற வேண்டும் எனக் கடந்தவாரம் வடமராட்சிப் பகுதிகளில் "போஸ்டர்கள்" ஒட்டப்பட்டன. இவ்வாறான நிலைமையில் எமக்கு அவநம்பிக்கை ஏற்படும் சம்பவங்கள் இடம்பெறவில்லை என எவ்வாறு கூறமுடியும்?

*கேள்வி:* அப்படியெனில் அந்தப் 'போஸ்டர்'களை விடுதலைப் புலிகளா ஒட்டினார்கள்?

*பதில்:* ஆம். புலிகளேதான். இல்லையெனில் வேறு யார்?

*கேள்வி:* தாங்கள் தற்போது கோருவது தனிநாடு அல்ல. ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பரவலாக்கலே என அன்ரன் பாலசிங்கம் இம்முறை தாய்லாந்துப் பேச்சுக்களின்போது தெரிவித்துள்ளார். அதிலிருந்து அவர்களது கோரிக்கைகளில் சாதகமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன எனத் தெரிகிறது இல்லையா?

*பதில்:* பெரிய பூசணிக்காயை எப்படிச் சோற்றுக் கோப்பையில் மூடி மறைக்கமுடியும்? அதுபோலவேதான அன்ரன் பாலசிங்கம் கூறும் பொய்களை முழு உலகுமே அறியும். அது பொய்க்கதை என்பது பிரபாகரன் பங்குபற்றிய பத்திரிகையாளர் மாநாட்டில் கூட அவர் (பிரபாகரன்) தனிநாடு கோருவதாகப் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளாரே.

*கேள்வி:* ஈ.பி.டி.பி. அமைப்பும் ஆரம்பத்தில் தனிநாடு கோரிப் போராடியது. இருப்பினும், பின்னர் அந்த நோக்கத்தைக் கைவிட்டு ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துகொள்ள முடியுமாயின், விடுதலைப் புலிகள் அமைப்பும் காலந்தாழ்த்தியேனும் அந்த எண்ணத்தை கைவிட நினைத்திருக்கலாம இல்லையா?

*பதில்:* விடுதலைப் புலிகள் அமைப்பு ஈழம் தொடர்பான எண்ணத்தைக் கைவிடுவார்களாயின் அது நல்லது. இருப்பினும், பிரபாகரன் அது குறித்து இன்னும் தெரிவிக்கவில்லை. அன்ரன் பாலசிங்கம் என்பவரும் பிரபாகரன் என்பவரும் இருவேறு ஆள்களாகும். எனவே, இந்த விடயத்தைப் பிரபாகரன் கூறினால் எங்களால் அதை ஏற்றுக்கொள்ளமுடியும். ஆனால், அன்ரன் பாலசிங்கம் தெரிவிக்கும் கருத்துக்களை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது.

*கேள்வி:* ஈழக் கோரிக்கையைக் கைவிடுவதாக பிரபாகரன் கூறவில்லை. எனவே, அன்ரன் பாலசிங்கம் கூறுவதை நம்பத் தயாரில்லை என்றா நீங்கள் கூற முற்படுகிறீர்கள்?

*பதில்:* ஆம். அப்படி நாங்கள் நினைப்பதற்கு போதியளவு காரணங்கள் உள்ளன. இன்றும் புதிதாக விடுதலைப் புலிகள் அமைப்பில் ஆள்களைச் சேர்க்கும் போது ஈழம் என்ற பெயரைக் குறிப்பிட்டே சத்தியப்பிரமாணம் மேற்கொள்ளப்படுகிறது. எனவே, விடுதலைப் புலிகள் ஈழத்தைக் கைவிட்டுவிட்டார்கள் என எவ்வாறு கூறமுடியும். தாங்கள் ஈழம் என்ற கோரிக்கையைக் கைவிட்டுவிட்டதாகப் பிரபாகரன் கூறினால் மட்டும் போதாது. அதைச் செயல்வடிவிலும் காட்டவேண்டும். அப்படிச் செய்தால் எங்களால் அதை ஏற்றுக்கொள்ள முடியும்.

*கேள்வி:* அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் சமாதானப் பேச்சுக்கள் இடம்பெற்றுவரும் வேளையில் வடக்கு - கிழக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இடைக்கால நிர்வாக சபை ஒன்று நியமிக்கப்படவுள்ளது. இது குறித்து நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

*பதில்:* இருதரப்பினருக்கும் இடையே நிரந்தரமான உடன்பாடு காணப்பட்ட பின்னர் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டால் பிரச்சினை இல்லை. எனவே, முதலில் சமாதானத்தையே உருவாக்கவேண்டும். அதற்கு முன்னர் வழங்கப்படும் இடைக்கால நிர்வாகத்தால் பயனில்லை. ஏனெனில், ஏதாவது ஒரு காரணத்தால் பேச்சுகள் முறிவடைந்தால் இடைக்கால நிர்வாகமும் தானாகவே செயலிழந்துவிடும். எனவே, நிரந்தர சமாதானத்தை உருவாக்கி - உடன்பாட்டிற்கு வந்து - அதன் பின்னர் நீங்கள் கூறும் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவது அதைவிட நல்லது அல்லவா?

*கேள்வி:* அரசு கூறுவதுபோல 20 வருடங்களுக்கு மேலாக இடம்பெற்று வந்த யுத்தத்தை திடீரென நிறுத்த முடியாது. இது தொடர்பாக படிப்படியாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும். அதற்கு மேலும் காலம எடுக்கக்கூடும். இருப்பினும், தற்போது முடங்கிய நிலையில் இருக்கும் அபிவிருத்திப் பணிகளை நேரகாலத்துடன் ஆரம்பிப்பதற்காகவே இடைக்கால நிர்வாகம் வழங்கப்படவுள்ளது.

*பதில்:* மழைபெய்து கொண்டிருக்கும்போது பயணத்தை மேற்கொள்ளும்போது வழியில் தங்கித் தங்கிச் செல்ல நேரிடும் என்பது உண்மையே. ஆனால், அவ்வாறு மழை பெய்யாத வேளையில் பயணத்தை மேற்கொள்ளும்போது தங்கித் தங்கிச் செல்ல வேண்டிய தேவை ஏற்படாது. அதேபோலவே இன்று யுத்தம் இடம்பெறாதுள்ளதால் சமாதானப் பேச்சுக்களை இடைநிறுத்தி இடைநிறுத்தி மேற்கொள்ளவேண்டிய தேவை ஏற்படவில்லை. இந்தப் பேச்சு விரைவில் நடத்தி முடித்து ஏன் இறுதித் தீர்வினைக் காணமுடியாது என்பதே எனது கேள்வி. அரசியல் தீர்வு காணப்பட்ட பின்னர் இடைக்கால நிர்வாகத்தை உருவாக்குவதில் எதுவித பிரச்சினையுமில்லை. இதற்கு முன்னா மூன்று சந்தர்ப்பங்களில் இவ்வாறு பேச்சுக்கள் நடைபெற்றன. இருப்பினும் அவை முறிவடைந்து மீண்டும் யுத்தம் ஆரம்பித்தது.

*கேள்வி:* ஈ.பி.டி.பி. அமைப்பு தற்போது வடக்கில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறதா?

*பதில்:* ஆம். நாங்கள் செயற்படுகிறோம். சகல பகுதிகளிலும் எமது பணிமனைகள் உள்ளன. யாழ்ப்பாணத்திலுள்ள 17 உள்ளூராட்சி அமைப்புகளில் பத்தின் நிர்வாகம் எம்மிடமே உள்ளது. நாங்கள் நிரந்தரமாகச் செயற்படுகிறோம்.

*கேள்வி:* உங்கள் கட்சி தற்போதும் வடக்கில் ஆயுதங்களுடன் நடமாடுகிறதா?

*பதில்:* அரசால் வழங்கப்பட்ட ஆயுதங்களை மாத்திரமே நாங்கள் எங்கள பாதுகாப்பிற்காக வைத்திருந்தோம். அந்த ஆயுதங்களை அரசு மீண்டும் கோரியவுடன் நாங்கள் கொடுத்துள்ளோம். தற்போது எங்களுக்கு பொலீஸ பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

*கேள்வி:* தற்போது கொழும்பில் சிவில் நிர்வாகம் இருக்கும்போதிலும் நீங்கள் ஆயுதம் தரித்தவர்களின் பாதுகாப்புடனேயே இருக்கிறீர்கள். அப்படியானால் உங்கள் அமைப்பினர் வடக்கில் ஆயுதம் தரித்தவர்களின் பாதுகாப்பின்றி அமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிறீர்கள் என்று நீங்கள் கூறுகிறீர்களா?

*பதில்:* வடக்கில் ஆயுதம் தரித்த பொலீஸாரின் பாதுகாப்பு எமக்கு வழங்கப்பட்டுள்ளது.

*கேள்வி:* கடந்த 10 மாதங்களில் நீங்களோ அல்லது உங்கள் உறுப்பினர்களோ எதுவித தாக்குதல்களையும் எதிர்கொள்ளவில்லையே?

*பதில்:* எம்மீது அவ்வாறான தாக்குதல்கள் எவையும் இடம்பெறவில்லை. இருப்பினும், அவ்வாறானவற்றிற்கு எமது உறுப்பினர்களைத் தூண்டும் விதத்தில் புலிகள் அமைப்பு தொடர்ந்தும் முயற்சித்து வருகிறது. நாங்கள் மிக அவதானத்துடன் அந்த விடயத்தில் செயற்படுகிறோம்.

*கேள்வி:* இற்றைக்கு 9 வருடங்களுக்கு முன்னர் ஈ.பி.டி.பி. அமைப்பிற்கு 9 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தனர். இன்று அந்த எண்ணிக்கை இரண்டாகக் குறைந்துள்ளது. உங்கள் கட்சிக்கு ஏன் இந்த நிலைமை ஏற்பட்டது?

*பதில்:* பலகாரணங்களால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. அதுதான் இன்று நடைமுறையிலுள்ள தேர்தல் முறையாகும். மற்றொரு காரணம் கடந்த 2001 பொதுத் தேர்தலின் போது விடுதலைப் புலிகள் நேரடியாகத் தலையிட்டு கள்ளவாக்குகளைப் போட்டுள்ளனர். மேலும், எமது கட்சியினருக்கு வாக்களிக்கச் செல்லக்கூட இடமளிக்கப்படவில்லை. எமக்கு 9 நாடாளுமன்ற உறுப்பினர் இருந்தபோது கிடைத்த வாக்குகள் 10 ஆயிரமாகும். அதற்குப் பின்னர் எமக்கு 5 உறுப்பினர்கள் கிடைத்த போது அதிக வாக்குகள் கிடைத்தன. இம்முறை எமக்கு 2 உறுப்பினர்களே



கிடைத்தனர். ஆனால், நாங்கள் 50 ஆயிரம் வாக்குகளைப் பெற்றோம். வடக்கில் போட்டியிட்ட ஏனைய அனைத்துக் கட்சிகளும் ஒரு லட்சத்து 20 ஆயிரம் வாக்குகளையே பெற்றன. அவர்கள் பெற்ற வாக்குகளில் அதிகமானவை கள்ளவாக்குகளாகும். புலிகள் இம்முறை நேரடியாகத் தேர்தல் நடவடிக்கைகளில் இறங்கி கள்ளவாக்குகளை அளித்தார்கள் என தேர்தல் கண்காணிப்புகளை மேற்கொண்ட புத்திஜீவிகளின் அமைப்புக்கூட ஏற்றுக்கொண்டுள்ளது.

*கேள்வி:* அவ்வாறெனில் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை தங்கள் அமைப்பு எதிர்க்கிறதா?

*பதில்:* இந்தத் தேர்தல் முறையில் சில சில மாற்றங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் என நாங்கள் கூறுகின்றோம்.

*கேள்வி:* ஈ.பி.டி.பி. அமைப்பு முன்னைய அரசின் ஆட்சிக் காலத்தில் பொ.ஐ.முன்னணிக்கு ஒத்துழைப்பை வழங்கியது. அந்த அரசின்கீழ் உங்களுக்கு அமைச்சர் பதவி கூடக் கிடைத்தது. நீங்கள் இன்று எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிறீர்கள். அதன்படி நீங்கள் எதிர்க்கட்சிக்கு ஒத்துழைப்பை வழங்குகிறீர்களா? அல்லது அரசுக்கு ஒத்துழைப்பை வழங்குகிறீர்களா?

*பதில்:* இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக நிரந்தர அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்பதே எமது விருப்பமாகும். எனவே, அரசு மற்றும் ஜனாதிபதி ஆகிய இருதரப்பினரும் இணைந்து ஏதாவது உடன்பாட்டிற்கு வந்து இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வழிகாண வேண்டும்.

*கேள்வி:* நான் கேட்டது இந்த வேளையில் உங்கள் அமைப்பு ஒத்துழைப்பை அரசுக்கு வழங்குகிறதா? அல்லது எதிர்க்கட்சிக்கு வழங்குகிறதா? என்பது குறித்தேயாகும்.

*பதில்:* நாங்கள் சுயேச்சைக் குழுவாகச் செயற்படுகிறோம்.

*கேள்வி:* அரசாங்கத்தால் கொண்டு வரப்படவுள்ள அரசமைப்புக்கான 19 ஆவது திருத்தத்திற்கு உங்கள் கட்சி ஆதரித்து வாக்களிக்குமா? அல்லது அதற்கு எதிர்த்து வாக்களிக்குமா?

*பதில்:* நாங்கள் அது குறித்து இன்னும் முடிவெடுக்கவில்லை. அது குறித்து நாம் இன்னும் ஆராயவேண்டியுள்ளது.

*கேள்வி:* நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனச்சாட்சியின்படி வாக்களிக்க வகைசெய்யும் சட்டம் குறித்து...

*பதில்:* எமக்கு அது குறித்துப் பிரச்சினை ஏதுமில்லை. அது ஐ.தே. கட்சி மற்றும் பொ.ஐ.முன்னணி தொடர்பான விடயமாகும். எனவே, நாங்கள் அது குறித்து ஆர்வம் கொள்ளவில்லை.

*கேள்வி:* நிறைவேற்று ஜனாதிபதி முறை ஒழிக்கப்படவேண்டும் என நீங்கள் நினைக்கிறீர்களா? அல்லது அந்த முறை தொடர்ந்து நீடிக்கப்பட வேண்டுமா?

*பதில்:* நாங்கள் அது குறித்தும் இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை.

*கேள்வி:* யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து வடக்கில் சமாதானத்தை உருவாக்கும் நோக்கில் அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து உங்கள் கட்சி திருப்தி கொண்டுள்ளதா?

*பதில்:* இன்றுவரை அரசு நேர்மையுடன் முயற்சிகளை மேற்கொள்ளுகின்றது என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். இருப்பினும், விடுதலைப் புலிகள் மீது எமக்கு நம்பிக்கை இல்லாதபடியால் எதிர்காலத்தில் இந்த முயற்சிகளுக்கு என்ன நடக்கும் என்பதை எம்மால் சிந்திக்க முடியாது.

*கேள்வி:* இன்று நிறைவேற்று அதிகாரங்களுக்கும் அரசமைப்புக்கும் இடையே பிரச்சினை உருவாகியுள்ளது என பல்வேறு தரப்புகளில் இருந்தும் தெரிவிக்கப்படுகிறது. இது குறித்துத் தங்கள் கருத்து என்ன?

*பதில்:* இன்று நிலவும் அரசியல் சூழ்நிலையின்படி இந்த நிலைமையைத் தடுப்பது கடினம். இருப்பினும், இன்று நாட்டிலுள்ள பிரச்சினையை நோக்கும்போது இந்த இரு தரப்பினரும் ஏதாவது உடன்பாட்டிற்கு வருவார்களேயாயின் நல்லது என்பதே எமது எண்ணமாகும். ✦

---

### தேசிய கல்வி நிறுவக

# பட்டமளிப்பு விழாவில் தமிழ்மொழி புறக்கணிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.18

அண்மையில் கொழும்பில் நடைபெற்ற தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டமளிப்பு விழாவில் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பட்டமளிப்பு விழாவில் பட்டங்களைப் பெற்றுக்கொண்ட ஆயிரத்து 400பேரில் தமிழ் மூலம் பட்டதாரிகள் 40பேர் என்றும் -

எனினும் பட்டமளிப்பு உரை மற்றும் சகல நிகழ்வுகளும் தனிச் சிங்களத்திலேயே நடத்தப்பட்டன என்றும் -

இதனால் அங்கு இடம்பெற்ற நிகழ்வுகளை இனங்கண்டுகொள்வதில் தமிழ்மொழி மூல பட்டதாரிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டதாகவும் - கூறப்பட்டது.

இதேவேளை, அரச கருமமொழியான தமிழைப் புறக்கணித்து பட்டமளிப்பு விழா நடத்தப்பட்டமை பெரும் வேதனைக்குரிய விடயம் என கல்வியியலாளர்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டது. (எ)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. 1Kg 130/-. சனி, ஞாயிறு தினங்களில் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.85, செம்மணி வீதி, நல்லூர். (9585)

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (9516)

## மருந்து விற்பனைக்கு

நாய்களிற்கு உரிய Parvo, Distemper, Rabice, ஆடு, மாடுகளிற்குரிய MFC Calcium, கோழிகளிற்குரிய CRD, Gampura, Raniket Fow/Pox மற்றும் சகல கால்நடை மருந்துகளும் எம்மிடம் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச சந்தையடி, நல்லூர். (9517)

## புத்தகங்கள்

அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல்கள் 1) நாடகம் எழுதுவது எப்படி? 2) யாழ்ப்பாணமா? கொழும்பா? 3) யாழ்ப்பாணம் 4) இலக்கியக் கட்டுரைகள் 5) வீட்றறவன் நாவலின் விளக்கமும் விமர்சனமும் 6) ஒரு காதலின் கதை 7) எங்கள் நாடு. (9551)

## தேவை

சுண்டுக்குளி அல்லது கச்சேரியை அண்மித்த பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை (வாடகை நேரில் பேசி தீர்மானிக்கலாம்). தொடர்பு: விளம்பர இல. 1672, மே/பா உதயன். (9562)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1970 ஆம் ஆண்டு, ரேவதி நட்சத்திரம், 2இல் செவ்வாய் உள்ள பெண்ணுக்கு கனடா, சுவிஸ், லண்டன் பிரஜாவுரிமை உடைய மணமகன் தேவை. தொடர்பு: எ.குணவதி, 105/1, கண்டிவீதி, யாழ்ப்பாணம் (பெந்தகோஸ்'க்கு அருகில்). (9560)

## ஜோதிடம்

உங்கள் ஜாதக பலன்களை அறிந்திடவும், திருமணப் பொருத்தம், எண் கணித பலன்கள் அறிந்திடவும் உடன் தொடர்புகொள்ளவும். அத்துடன் திருமண சேவையும் செய்யப்படும் தொடர்பு: N.கந்தையா, மூத்த விநாயகர் கோயிலடி, ஆனைக்கோட்டை. (9478)

## வளர்ப்பு மீன்கள்

கலர் மீன்கள், மீன்தொட்டி உபகரணங்கள், Air Pump தாவரங்கள் விற்பனைக்கு உண்டு. தனபாலசிங்கம், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (9519)

## தவறிவிட்டது

நந்தாவில், கொக்குவில் என்னும் முகவரியைச் சேர்ந்த பத்மநாதன் கபில்நாத் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.830991450V), விசேட அடையாள அட்டை (இல. 0902024391) என்பன இணுவிலுக்கும் நாச்சிமார் கோயிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மகேந்திரன் ஸ்ரோர்ஸ், கோண்டாவில் கிழக்கு என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (9593)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



HAPPY BIRTHDAY

சிவன்கோயிலடி, ஆவரங்காலைச் சேர்ந்த

திரு.திருமதி தயாபரன்(கண்ணன்) - தமயந்தி

தம்பதிகளின் செல்வப் புதல்வன்

## செல்வன் கஜலக்சனன்

இன்று(18.10.2002) வெள்ளிக்கிழமை தனது முதலாவது பிறந்தநாளை வன்னிச்சி கோயிலடி, வல்வெட்டியிலுள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மையா, அம்மம்மா, சித்தப்பாமார், சித்தி, மாமாமார், மாமிமார், அன்ரி மற்றும் உறவினர்கள் அனைவரும் சகல கலைகளையும் கற்று பல்லாண்டுகாலம் சிறப்போடு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

*வன்னிச்சி கோயிலடி,*
*வல்வெட்டி, வல்வெட்டித்துறை.*

தகவல்:
அப்பா, அம்மா.

(9549)

# எங்கள் மனம் நிறைந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்



13.10.2002 ஞாயிறன்று நடைபெற்ற யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கலைமாணி (B.A.) பட்டம் பெற்ற

ஆலடி, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த

## செல்வி நகுலராஜா றஜனி (B.A.)

அவர்கள்

மேலும் பல பட்டங்கள் பெற்று கல்வியிலும் வாழ்விலும் உயர்வடைய வேண்டுமெனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அப்பா - கு.நகுலராஜா,
அம்மா - ந.மங்கையர்க்கரசி,
அண்ணா - ந.குலராஜா *(லண்டன்)*,
தம்பி - ந.ஶ்ரீராஜ்,
தங்கை - ந.நகுலரசி,
அத்தான் - ச.ஜோதிராஜா *(நோர்வே)*,
தங்கை - ஜோ.வத்சலா.

*ஆலடி,*
*வல்வெட்டித்துறை.*

(9597)

# துயர் பகிர்வு

எமது மகாவித்தியாலய ஆசிரியர்

திரு.ராதாகிருஷ்ணன் அவர்களின் தந்தையார்

## நடராஜா கந்தசாமி

அவர்கள் அமரத்துவம் எய்தியமையையிட்டு அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*சென்.ஜேம்ஸ் ம.வி.,*
*குருநகர், யாழ்ப்பாணம்.* (9590)

சென்.ஜேம்ஸ் ம.வி.
பாடசாலைச் சமூகம்.

# கண்ணீர் அஞ்சலி

கோட்டைக்காடு, மல்லாகம், சாளம்பை முருகன் ஆலயத்தின் முன்னாள் பொருளாளர் திரு.இ.சிவராசா அவர்களின் அன்பு மனைவி

## சி.பேரின்பநாயகி

அவர்கள் 16-10.2002 புதன்கிழமை காலமானதையிட்டு அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*கோட்டைக்காடு,*
*மல்லாகம்.* (9583)

சாளம்பை முருகன் பரிபாலனசபையினரும்.
இந்து இளைஞர் தொண்டர் சபையும்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
23 - 05 - 1910



மறைவு
29 - 10 - 2001

அமரர்

## வல்லிபுரம் மயில்வாகனம்

திதி: திரயோதசி

*ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்*
*அகத்தினில் தெய்வமாய் வாழ்கின்றீர்கள்*
*நீண்டிடும் நினைவுகளுடன் எல்லோரும்*
*நித்தம் நித்தம் எண்ணியே வாழ்கின்றோம்*
*ஆண்டவன் கழலடி சேர்ந்தே வாழ்கின்றீர்கள்*
*அன்புடன் அஞ்சலித்தோம் ஆத்மசாந்திக்கு.*

*இல.12, திருவள்ளுவர் வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.* (9589)

தங்கள் ஆத்ம சாந்திக்கு
பிரார்த்திப்பவர்கள்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு
19 - 04 - 1964



உதிர்வு
04 - 09 - 2002

## அமரர் நடராசா குனேந்திராசா (பாபு)

திதி: 18.10.2002

*அன்பான முகத்தை, அரவணைக்கும் இதயத்தை*
*இனி நாம் காண்பது எப்போழ்து?*

உம் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல
ஊரெழு ஞானவைரவரை வேண்டிநிற்கின்றோம்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்திகேட்டு எமது இல்லம் நாடி நேரில் வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், இன்று (18.10.2002) வெள்ளிக்கிழமை நண்பகல் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ஊரெழு கிழக்கு.* (9584)

மனைவி, பிள்ளைகள்,
தாய், சகோதரர்கள்.

# பூப்புப்புனித நீராட்டுவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் ஐப்பசித்திங்கள் முதலாம் நாள் இன்று (18.10.2002) வெள்ளிக்கிழமை காலை 7.20 மணிமுதல் 7.50 மணிக்குள் வரும் சுபமுகூர்த்த நல்வேளையில்,



எமது கனிஷ்ட புத்திரி திருநிறைசெல்வி

## ரேவதி

அவர்களுக்கு



நல்லூர் சட்டநாதர் வீதியிலமைந்துள்ள திவ்யஜீவன சங்க மண்டபத்தில் பூப்புப்புனித நீராட்டுவிழா நிகழ்த்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்பசகிதம் வருகைதந்து செல்வியை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்பாளர்:
திரு.S.பாலமுருகன் *(நாதஸ்வரம்)*
அவர்களும் பாரியாரும்
*சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.* (9566)

தங்கள் நல்வரவை விரும்பும்:
திரு.P.சுப்புச்சாமி *(நாதஸ்வர வித்வான்)*
அவர்களும் பாரியாரும்.

# மரண அறிவித்தல்

## குகநேசன் குமாரவேலு (குகன்)

(CIBC BANK, CANADA)

ஏழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகவும் கனடா ஸ்காபரோவை வசிப்பிடமாகவும் கொண்ட குகநேசன் குமாரவேலு 10-10-2002 இல் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் குமாரவேலு - கமலாவதி (இளைப்பாறிய ஆசிரியர்கள்) தம்பதியினரின் அன்பு மகனும் தம்பிநாயகம் - நல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் சாந்தியின் (ரஞ்சிதமலர்) அன்புக் கணவரும் தரணியா, அஞ்சனா, சேயோன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கணேசன் (நியூசிலாந்து), சிவநேசன் (கனடா), பவானி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கமலினி (கிழக்குப் பல்கலைக்கழகம்), நளாயினி (கொழும்பு), புரிசைநாதன் (கனடா), தர்மகுலசிங்கம் (செல்வம் - சுவிஸ்), இராஜகுலசிங்கம் (அழகன் - தம்பி - கனடா), நேசமலர் (வவுனியா), பரமேஸ்வரி (ராணி - கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் செண்பகாவின் (நியூசிலாந்து) பெரியப்பாவும் சேந்தனின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்: (416)773-1234
சகோதரன்: (416)828-7427
சகோதரி: (416)430-0629

தகவல்:
கணேசன் கமலினி
(மைத்துனி) (9596)

# அடுத்த வாரம் நோர்வேக் குழு வன்னியில் பிரபாவை சந்திக்கும்

## பாலசிங்கம் தகவல்

கிளிநொச்சி,ஒக்.18

அடுத்த வார முற்பகுதியில் வன்னிப்பகுதிக்கு வரும் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிசன் தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்து முக்கிய விடயங்கள் குறித்து உரையாடுவர் என வன்னிக்குச் சென்றுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிசன், இலங்கைக்கான நோர்வேயின் சிறப்பு சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், இலங்கைக்கான நோர்வேயின் தூதுவர் ஜோன் வெஸ்ட் பேர்க் ஆகியோரே வன்னிப்பகுதிக்கு அடுதத வாரம் வரவுள்ளனர்.

இவர்கள் விடுதலைப்புலிகளின் தலைவரின் தலைமையிலான புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன பாலசிங்கம், விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தாய்லாந்தில் கடந்த மாதம் நடைபெற்ற முதல் சுற்றுப் பேச்சுக்களில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கமைய விடுதலைப் புலிகளும் அரசும் இணைந்த கூட்டுச் செயலணியின் கூட்டமைப்பை உருவாக்குவது தொடர்பாகவும் அரச படைகளின் உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான பிரச்சினைகள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்படவுள்ளது என்றும் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

"விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டுள்ள போர் நிறுத்த உடன்படிகையின் பின்னர் தாய்லாந்தில் இருதரப்பினருக்கும் இடையே முதற்கட்ட நேரடி சமாதானப் பேச்சுக்கள் வெற்றிகரமாக நடைபெற்றன. ஆனால், இதுவரையில் இலங்கை அரச படைகள் யுத்தநிறுத்த உடன்படிக்கையயின்படி தமது நிலைகளை முழுமையாக மாற்றவில்லை.

அத்துடன் பாரதூரமான அளவில் அப்பாவித் தமிழ் மக்களை அரசுப் படைகள் ஈவிரக்கமின்றி இரு தடவைகள் சுட்டுக்கொன்றதில் 18 தமிழ் மக்கள் கொல்லப்பட்டதுடன் 40 வரையான தமிழர்கள் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுக்கு உள் ளாகினார்கள். இதனால் எழுந்துள்ள நெருக்கடியான சூழ்நிலையில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன ரன் பாலசிங்கத்தின் வன்னி வருகை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்." - எனவும் புலிகளின் குரல் வானொலி தெரிவித்துள்ளது. (ம)

# முஸ்லிம்களின் சுதந்திர வாழ்வுக்கு அமைச்சர் ரவூப் ஹக்கீம் வலியுறுத்து

முஸ்லிம் மக்கள் வடக்கு - கிழக்கில் பீதிக்கு மத்தியிலே இன்னமும் வாழ்ந்துவருகின்றனர். வடக்கு - கிழக்கு முஸ்லிம்களின் பாரம்பரிய தாயகம் என்ற கோட்பாடு மிக நீண்டகாலத்தின் பின்னர் தமிழர் தரப்பு தலைமைத்துவத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதனால் முஸ்லிம்களும் தமது பகுதிகளில் சுதந்திரமாக வாழக்கூடிய ஏற்பாடுகள் செய்யப்படவேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் துறைமுக அபிவிருத்தி, கப்பல்துறை, கிழக்கு அபிவிருத்தி, முஸ்லிம் சமய விவகார அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

டென்மார்க் வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த பீட்டர் லைசோல்ட் ஹென்ஸன் தலைமையிலான ஐரோப்பிய யூனியனின் உயர்மட்டத் தூதுக் குழுவொன்று கடந்த செவ்வாய்க் கிழமை அமைச்சர் ரவூப் ஹக்கீமை அவரது அமைச்சில் சந்தித்து பல்வேறு விடயங்கள் சம்பந்தமாக நீண்ட நேரம் பேச்சு நடத்தியபோதே அமைச்சர் இதனை வலியுறுத்தினார்.

அமைச்சர் என்பதை விடவும் இலங்கை முஸ்லிம்களால் மதிக்கப்படுகின்ற முக்கியமான முஸ்லிம் தலைவர் என்ற முறையிலேயே தாம் அமைச்சர் ஹக்கீமை சந்தித்துப் பேச்சு நடத்தத் தீர்மானித்ததாக ஐரோப்பிய யூனியன் தூதுக்குழுவினர் இச்சந்திப்பின்போது தெரிவித்தனர். (எ)

### இந்து சமயப் பேரவை அலுவலக திறப்புவிழா

யாழ்.இந்து சமயப் பேரவையின் தலைமை அலுவலகத் திறப்புவிழா நாளைமறுதினம் காலை 9மணியளவில் இல.51, பலாலி வீதி, கந்தர்மடம் என்னும் முகவரியில் நடைபெறவுள்ளது. (எ)

# மூவின மக்களும் கடலில் ஒன்றாக மீன் பிடிக்கும் நிலை வரவேண்டும்

## பிரதமர் ரணில் ஆசை

கொழும்பு,ஒக்.18

இன்று வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் சகல பகுதிகளிலும் மீண்டும் மீன்பிடித்தொழில் ஆரம்பமாகியிருக்கின்றது. வடக்கு - கிழக்கில் தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் அனைவரும் மீன் பிடித்தொழிலில் ஈடுபடுவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும்.

- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் கொழும்பு சுகததாஸ உள்ளக விளையாட்டரங்கில் 'மீனவகலோதயம்' நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

மீன்பிடி நீரியல் வள அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பிரதமர் தொடர்ந்து உரையாற்றியதாவது:-

மீனவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கவேண்டும். தீர்க்கப்பட வேண்டிய குறைபாடுகள் பல இருக்கின்றன.

இலங்கையில் சாதாரண ஒரு பிரஜை ஆண்டு ஒன்றுக்கு 17கிலோ மன் உணவுகளையே உட்கொள்கிறார். இதுபோதுமானதல்ல. போஷாக்கு உணவின் அளவு அதிகரிக்க வேண்டுமானால் அந்த அளவு 35முதல் 40 கிலோ கிராமாக அதிகரிக்கப்பட வேண்டும்.

இன்று எமது தேசிய உற்பத்தியில் மீன்பிடித் தொழில் உற்பத்தி 3சதவீதத்துக்கும் குறைவானதாகும். இதனை அதிகரிக்கச் செய்யமுடியும்.

நாட்டின் வருமானம் பெருகுமேயானால் வாழ்க்கை இலகுவானதாகும். அந்தச் சவாலுக்கு முகம்கொடுக்கவே தேசிய கடற்றொழில் கொள்கையை இன்று அறிவித்திருக்கிறோம்.

- இவ்வாறு பிரதமர் கூறினார். (ம)

# அமைதி பேணும்படி ஹக்கீம் வேண்டுகோள்

கொழும்பு,ஒக்.18

அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை ஆகிய பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையை உடனடியாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து பாரபட்சமற்ற முறையில், சட்டத்தையும், ஒழுங்கையையும் நிலைநாட்ட உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், துறைமுக அபிவிருத்தி, கப்பல்துறை, கிழக்கு அபிவிருத்தி, முஸ்லிம் சமய விவகார அமைச்சருமான ரவூப் ஹக்கீம், பாதுகாப்பு அமைச்சரைக் கோரியுள்ளார்.

இச்சந்தர்ப்பத்தில் ஆத்திரமூட்டும் செயல்களில் ஈடுபடாது அமைதி பேணும்படி அமைச்சர் ஹக்கீம் அங்கு வாழும் பொதுமக்களைக் கேட்டுள்ளார்.

புலிகள் தரப்பினரும் இப்பிரதேசங்களில் அமைதி நிலவ ஒத்துழைப்பார்கள் என தாம் எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் ஹக்கீம் இது சம்பந்தமாக விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## முதற்கட்ட நடவடிக்கையாக

# யாழ்.மாவட்டத்தில் 10 சமுர்த்தி வங்கிகள்

கொடிகாமம்,ஒக்.18

யாழ்.மாவட்டத்தில் முதற்கட்டமாக சமுர்த்தி வங்கிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதேவேளை இதற்கான கட்டட அமைப்பிடம் குறித்த வரைபடங்கள் பிரதேச செயலகங்களினால் யாழ். செயலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

ஒவ்வொரு கிராமத்திலும் 5 சிறு குழுக்களாக பிரிக்கப்பட்ட சமுர்த்தி சிறுகுழுக்களின் சேமிப்புக்களை வைப்பில் இடுவதன் மூலமும் -

அரசு வழங்கும் நிதி உதவிகளையும் மூலதனமாகக் கொண்டு மேற்படி சமுர்த்தி வங்கிகள் செயற்படும்.

வங்கிகளில் 5பேர் கொண்ட ஒவ்வொரு குழுக்களுக்கும் தனித்தனியே கணக்குகள் பேணப்படும். அதேவேளை கணக்குகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவரின் கணக்குகள் தனித்தனியாக பேணப்படுவதுடன் வைப்புகள் குழுக்களின் பெயரிலேயே இடம்பெறும்.

8 தொடக்கம் 10 வரையிலான சிறு குழுக்கள் ஒரு சங்கமாகக் கருதப்பட்டு அவ்வாறான 20 சங்கங்களைக் கொண்டு ஒரு மகா சங்கம் அமைக்கப்பட்டு இவ்வங்கிச் செயற்பாடுகள் அமையும்.

இவ்வங்கி மூலம் சேமிப்புக்கு ஏற்ற வகையில் குறைந்த வட்டியில் கடன் பெறவும், தொழில் முயற்சிக் கடன் பெறவும், கோழி, ஆடு போன்றவற்றின் வளர்ப்புக்கெனவும் கடன் பெற்றுக்கொள்ளமுடியும்.

வங்கிகளில் வைப்பிலிடப்படுகின்ற ஒவ்வொரு சிறு குழுக்களின் சேமிப்பு மற்றும் கடன் பெறும் தன்மைக்கேற்ப அரசினால் இலவசமாக வழங்கப்படும் ஊக்குவிப்புத் தொகைகளையோ, கட்டடம் அமைப்பதற்கான கட்டட வசதிகளையோ பெற்றுக்கொள்ள முடியும் - எனத் தெரிவிக்கப்பட்டது.(எ-ரி)

### கலந்துரையாடல்கள்

தொழிற்றுறைத் திணைக்களத்தைச் சேர்ந்த நெசவு போதனாசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணிக்கு யாழ்.செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து நெசவு போதனாசிரியர்களையும் இந்தக் கலந்துரையாடலில் தவறாது பங்குபற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி)

☆ ☆ ☆

யாழ்.மத்திய கல்லூரி முறைசாராக் கல்விப் பிரிவில் 2000ஆம் ஆண்டு நவம்பர் தொடக்கம் தமிழ், ஆங்கில சுருக்கெழுத்து தட்டெழுத்துப் பிரிவில் பயின்ற மாணவர்களை இன்று வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு கல்லூரியில் போதனாசிரியர்களைச் சந்திக்குமாறு அதிபர் கேட்டுள்ளார்.

பாடநெறிகள் சம்பந்தமாக கல்வித் திணைக்களத்தால் நடத்தப்படும் இறுதிப் பரீட்சை மற்றும் சான்றிதழ் வழங்குதல் ஆகியன பற்றி இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்படும் எனவும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி)

# அற்புதங்கள் பல நிகழ்த்திடும் மாதா அமிர்தானந்தமயிதேவி

'கடவுள்' என்று ஒருவர் இல்லை என்று கூறுமளவுக்கு விஞ்ஞானம் உயர்ந்து நிற்கும் இன்றைய காலகட்டத்தில் 'அம்மா' என்று அழைக்கப்படும் மாதா அமிர்தானந்தமயி தேவி அவர்களின் அவதாரம் அதை உண்டு என்று நிருபிக்கின்றது.

#### அன்னை அவதாரம்

திருவனந்தபுரம் விமான நிலையத்திலிருந்து 70 கிலோ மீற்றர் தூரத்தில் கொல்லம் மாவட்டத்தில் பறையகடவு என்று ஒரு மீனவ கிராமம் உண்டு. அங்கே 27.09.1953 ஞாயிறு காலை 9 மணி ஒன்பது நிமிட நேரத்தில் கார்த்திகை நட்சத்திரத்தில் ஸ்ரீ அமிர்தானந்தமயி தேவி மாதா இப்பூவுலகில் அவதரித்தார். உலகை உய்விக்க வந்த மாதாவே அவர்தான்.

சுதாமணி எனப்பெயர்பெற்ற மாதா சதா கண்ணனின் நாமத்தை ஜெபித்துக் கொண்டும் பாடல்களைப் பாடிக்கொண்டும் வாழ்ந்து வரலாயினார். இளமையில் மிகவும் வறுமையில் வாடிய இவர் அம்பிகையையும் கண்ணனையும் வணங்கி வந்தார். ஒருநாள் அம்மா ஆழ்ந்த தியானத்திலிருந்தபோது ஓர் ஒளிவெள்ளம் பாய்ந்தோடி வந்தது. அப்பூரண ஒளிக் கடலில் புன்முறுவல் பூத்த முகத்துடன் அம்பிகை அன்னைக்குத் தரிசனந்தந்தார்.

ஞானக்கதிர்

#### மாதாவின் மகிமைகள்

கேரள மாநிலத்தில் ஒரு சிலர் அம்மாவைப் பழித்தனர். 'இறைசக்தி உன்னிடம் இருந்தால் அதை நிரூபி பார்க்கலாம்' என்று சவால் விட்டனர். உடனே அம்மா ஒருவரை அழைத்து, 'மகனே! ஒரு பாத்திரத்தில் தூய்மையான நீர் கொண்டு வா' எனப் பணித்தார். அவ்வாறே நீர் கொண்டு வரப்பட்டது. உடனே மாதா அம்மா தியானத்தில் ஆழ்ந்துவிட்டார். பின்பு கண்விழித்ததும் 'மகனே! அந்தத் தீர்த்தத்தை அடியார்களுக்குக் கொடு' என்றார். என்னே அதிசயம்! என்னே விந்தை! அந்தப் பாத்திரத்திலிருந்து இனிய பஞ்சாமிர்தம் அள்ள அள்ளக் குறையாமல் வந்துகொண்டேயிருந்தது. அப்போது அப்பகுத்தறிவாளர்கள் அம்மா மாதாஜியின் கால்களின்மீது விழுந்து மன்னிப்புக் கேட்டனர். அன்றுமுதல் அம்மாவின் சிஷ்யராகவும் மாறினர்.

#### நோய் மாறியது

ஒரு நாள் குழந்தை ஒன்று இறக்குந் தறுவாயில் நோயுடன் போராடியது. அம்மா குழந்தையை எடுத்து



மடியில் வைத்துக்கொண்டு தியானித்தார். குழந்தை உயிர் பிழைத்து மடியிலிருந்து சுகமாக எழுந்தது.

இன்னோரிடத்தில் பேராசிரியர் ஒருவர் சுவாசப்பையுற்று நோயால் அவஸ்தைப்பட்டார். அம்மா அவருக்கு விபூதியை உடல் முழுவதும் பூசினார். நோய் பறந்தோடிப் போய்விட்டது.

#### பாம்பு வந்தது

ஒருநாள் சரசம்மா என்பவரின் மகனைப் பாம்பு தீண்டிவிட்டது. அப்போது மாதா அமிர்தானந்தமயிதேவி, 'கவலைப்படாதே! எல்லாம் சரியாய் விடும். பக்கத்திலுள்ள குடிசையில் மகனைப் படுக்க வைத்துவிட்டு நீ ஓய்வெடுத்துக்கொள்' என்று பணித்தார். சரசம்மாவும் அப்படியே செய்தார். சற்று நேரத்தில் எங்கிருந்தோ ஒரு நாகபாம்பு வந்து படுக்கையின் மேல் காவடியில் அசையாமலிருந்தது. சரசம்மா பார்த்துக்கொண்டே இருந்தார். பின்பு சிறிது நேரங்கழித்துப் பாம்பு அங்கிருந்து போய்விட்டது. இறந்து கிடந்த மகள் உயிர் பெற்று 'அம்மா' என்று கூப்பிட்டாள்.

அடியவன்

அன்னையின் வெளிநாட்டுப் பயணம் ஒன்றின்போது, திடீரென்று பயணிகள் எல்லோரும் நாங்கள் அம்மாவைத் தரிசிக்கவேண்டும் என்று அம்மா இருந்த இடத்துக்கு வந்தனர். விமான ஓட்டிகளும் அம்மாவின் தரிசனத்துக்காக வந்து விட்டனர். அப்படியாயின் அந்த நேரத்தில் விமானத்தை நெறிப்படுத்தியது யார்? அம்மாவேதான்.

#### ஒற்றுமையே அமைதிக்கு வழி

இப்படி அம்மாவின் மகிமைகள், புதுமைகள் பலப்பல. அன்பு, சேவை, ஆன்மீக சாதனை இவைகளை அம்மாவிடமிருந்து கற்று நம் வாழ்வில் கடைப்பிடித்தால் அம்மாவின் அவதார நோக்கம் நிறைவேறும்.

1995ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் பொன்விழாவில் 'ஒற்றுமையே அமைதிக்கு வழி' என்ற தலைப்பில் பல அமுத மொழிகளை வழங்கிய அம்மாவின் புகழ் ஐரோப்பிய நாடுகளில் பரவியது. அம்மா பேசப்பேசக் கேட்டுக்கொண்டேயிருக்கலாம். அம்மா மனமுருகிப்பாட அனைத்து ஜீவராசிகளும் அந்த நாதபிரம்மத்தில் லயமாவதைக் கண்குளிரக் கண்டு களிக்கலாம். ★





சங்கானை கல்விக்கோட்டம் பண்ணாகம் வடக்கு அ.மி.த.க. பாடசாலையில் அண்மையில் நடத்திய சைவசமய திருமுறை விழாவில் கலந்துகொண்ட இந்து கலாசார அலுவலர்கள் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் விழாவை முன்னிட்டு வெளியிடப்பட்ட சிறப்பு மலரை விழா தலைவர் சங்கானை கல்விக் கோட்ட பணிப்பாளர் சி.செல்லையா அவர்களிடம் வழங்குவதை முதலாவது படத்தில் காணலாம்.

இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தியவர்களையும் விழாக் குழுவினரையும் இரண்டாவது படத்தில் காணலாம்.

(ஐ-135)

# மரண அறிவித்தல்

## முருகேசு கார்த்திகேசு

(விறுமர் கோயில் பூசகரும், தர்மகர்த்தாவும்)

வெள்ளாம்போக்கட்டியைப் பிறப்பிடமாகவும் கச்சாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு கார்த்திகேசு அவர்கள் 15.10.2002 செவ்வாய்கிழமை காலமானார்.

அன்னார் முருகேசு - பொன்னாச்சி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரரும் காலஞ்சென்ற முருகேசு கோபாலபிள்ளை, திருமதி தம்பு நாகம்மா ஆகியோரின் சகோதரரும் திருமதி சரஸ்வதிப்பிள்ளையின் அன்புக் கணவரும் பேரம்பலம்-ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மருமகனும் திருமதி திருலோகநாதன் பரமேஸ்வரி, திருமதி கோணேஸ்வரன் தியாகேஸ்வரி (கனடா), திருமதி செல்வராசா குணேஸ்வரி (கனடா), கோபாலபிள்ளை கணேசமூர்த்தி (கனடா), திருமதி கந்தையா மனோன்மணி ஆகியோரின் சிறிய தந்தையும் தம்பு கந்தையாவின் (அதிபர், யாகொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.) மாமனாரும் பசுபதி திருலோகநாதன், செ.செல்வராசா, மு.கோணேஸ்வரன், கந்தையா தம்பு, திருமதி மாணிக்கம் பாக்கியம், திருமதி தவமணி நடராசா, திருமதி சின்னப்பிள்ளை சங்கரப்பிள்ளை, பேரம்பலம் தங்கராசா, பே.தர்மராசா, பே.தவராசா, பே.தவயோகராசா, திருமதி புஸ்பராணி மங்களேஸ்வரன் (ஆசிரியை, யா/அல்லாரை அரசினர் வித்தியாலயம்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.10.2002 மாலை 6.00 மணியளவில் கச்சாயில் அவரது இல்லத்தில் நடைபெற்று, அல்லாரை தெற்கு கொற்புலவு மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*கச்சாய் தெற்கு, கொடிகாமம்.* (9622) திரு.த.கந்தையா (மருமகன்)

## விதைநெல், உரம் இலவசமாக விநியோகம்

வடமராட்சி கிழக்கு,ஒக்.18

சர்வோதய நிறுவனம் மருதங்கேணிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள விவசாயிகளுக்கு இலவசமாக விதைநெல்லையும், உரத்தையும் வழங்கியுள்ளது.

அப்பிரதேசத்தைச் சேர்ந்த 207 விவசாயிகளுக்கு விதைநெல்லும், உரமும் வழங்கப்பட்டுள்ளன.(ஒ-182)

## தென்னை உரம் வழங்க நடவடிக்கை

சாவகச்சேரி,ஒக்.18

தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள தென்னைப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு தென்னை அபிவிருத்திச் சபை தென்னை உரத்தினை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வாறு தென்னை உரத்தைப் பெறும் பயிர்ச் செய்கையாளர்களுக்கு கொள்வனவுக்கேற்ப கழிவு வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-31)

## விஞ்ஞான தினவிழா

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி கணித, விஞ்ஞான மன்றத்தின் விஞ்ஞான தினவிழா இன்று வெள்ளிக்கிழமை கல்லூரியில் காலை 11 மணிக்கு மன்றத் தலைவர் செல்வன் றி.செந்தூரன் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவபீட உயிரி இரசாயன வியற்றுறைச் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பொ.நவரட்ணமும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணக் கலவி வலய விஞ்ஞானபாட சேவைக் கால ஆலோசகர் ச.அருந்தவரத்தினமும் கலந்துகொள்வர். (ஒ)

## சஞ்சிகை வெளியீடு

உரும்பிராய்,ஒக்.18


உரும்பிராய் லயன்ஸ் கழகத்தினின் 'Roaring Lions' (கர்ச்சிக்கும் சிங்கம்) என்ற ஆங்கில சஞ்சிகை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் உரும்பிராய் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் ச.ஏகாம்பரநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. சஞ்சிகையின் முதற்பிரதியை அகதிகள் புனர்வாழ்வுத் தலைவர் அ.நல்லதம்பி பெறவுள்ளார். (ஒ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழக 22ஆவது
பட்டமளிப்பு விழாவில்
**முதுகல்வியியல்மாணி**
(M.Ed.) பட்டம் பெற்ற
பருத்தித்துறை
யா/மெதடிஸ்ட் கல்லூரி
ஆசிரியரான
**திருமதி இந்திராணி சிறீரங்கநாதன்**
அவர்களைப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

*அல்வாய் மேற்கு.*
*அல்வாய்.* (9612) - குடும்பத்தினர்.



தென் கிழக்கு ஆசியாவில்
நவீன தொழிற்சாலையின்
தரமான உற்பத்தி...



றைனோ

Access Graphics

● அதிக சக்தி ● 40 வருட நம்பிக்கை ● நீண்டகால பாவனை
● ரசாயனத்தினால் பாதிப்படையாதவை ● தீ பாதிப்பையும் தாங்கக்கூடியவை
● இரைச்சலை உறிஞ்சும் ● பொருத்துவது மிகச் சுலபம்
● குறைந்த மரச் செலவு

RHINO


றைனோ ரூவ்பிங் புரொடக்ட்ஸ் லிமிட்டெட்
உறுதியான கூரைக்கு இறுதியான தெரிவு!
752, பேஸ்லைன் வீதி, கொழும்பு 9. தொலைபேசி: 693694, 674785 ஃபெக்ஸ்: 698037

நம்: 1 நம்பிக்கையானது நம்: 1 பிரசித்தமானது நம்: 1 சக்திமிக்கது

SLS
DNV
Accredited by the RvA
ISO-9002 REGISTERED FIRM
DNV Certification B.V., NETHERLANDS

உ
சிவமயம்

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



**19.09.2002** வியாழக்கிழமை
சிவபதமடைந்த
தமிழ்மணி தெல்லியூர்
**செல்லையா நடராசா**
அவர்களின்


வீட்டுக்கிருத்தியம் நாளை (19.10.2002) சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும். வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். *(இதையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.)*

*21/3,குமாரசாமி வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.* (9620)

திருமதி கனகம்மா தெ.ந.
திரு. தெ.ந. கனகவேல்ராசா
திரு. திருமதி இராஜசிவசக்தி மகேசன்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 22 - 09 - 1938



உதிர்வு 18 - 09 - 2002

### அமரர் தம்பையா இராசரெத்தினம்

(வேலணை கிழக்கு, வேலணை -1)

எங்கள் அன்பின் உருவமே! அருமைத் தெய்வமே!
எங்கள் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் ஒளியூட்டிய ஆசையின் - வடிவமே!
அல்லும் பகலும் மெழுகாய் உருகி எம்மை
அரவணைத்த தெய்வமே!
எங்களை ஆறாத்துயரில் மூழ்கவிட்டு எங்கு சென்றீர்கள் ஐயா,
எங்கள் நெஞ்சம் வேதனையில் விம்மி வெடித்தும்,
ஆறுதல் கிடைக்காமல் தவித்தேங்கி நிற்கின்றதே!
எப்படி ஐயா எங்களை விட்டு விட்டுச் சென்றீர்கள்?
மாதம் ஒன்றாகி விட்டாலும் ஆறவில்லையே எங்கள் மனம்
எம் உள்ளம் உள்ளவரை மறையாது உங்கள் நினைவுகள்
*எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*நிரந்தர முகவரி:*
வேலணை கிழக்கு, வேலணை - 1
*தற்காலிக முகவரி:*
No.37, 3-ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (9615)

*என்றும் பிரிவால் துயருறும்:*
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளை,
மைத்துனர்கள், மைத்துனிமார்.

# அக்கரைப்பற்றில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீசெய்வதற்காகப் பொலீஸாரும் இராணுவத்தினரும் தடைகளை அகற்றிய போதிலும் அவர்கள் சென்ற பின்னர் ஹர்த்தாலில் ஈடுபட்டவர்கள் மீண்டும் தடைகளைப் போட்டனர். அரச திணைக்களங்கள், வங்கிகள், பாடசாலைகள், தபால் நிலையங்கள், தனியார் நிறுவனங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன. இயல்பு நிலை முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

அக்கரைப்பற்று ஹர்த்தாலை முன்னிட்டு கூடுதலான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. பொலீஸார் வீதி ரோந்தில் ஈடுபட்டனர். விசேட அதிரடிப்படையினர் முக்கிய இடங்களில் நிறுத்தப்பட்டிருந்தனர்.

தேவையேற்படின் கடமையில் ஈடுபடுவதற்காக இரண்டு பஸ்களில் இராணுவத்தினர் கொண்டுவரப்பட்டு அக்கரைப்பற்று பொலீஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்டனர். (ஐ-12)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபர்

**உயர்திரு. பா. சந்திரசேகரன்**

(B.A., Dip. in Edu., S.L.P.S. 2.II)



அவர்கள் 13.10.2002 அன்று நடைபெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 22ஆவது பட்டமளிப்பு விழாவில் M.Ed. பட்டம் பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டி மகிழ்வதோடு மேலும் பல சிறப்புக்களைப் பெற எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

யா/தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை சமூகம். (9628)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கடந்த ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் 139 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த

**சேனாதிராஜா செல்வராஜனின்** புதல்வி

**செல்வி செல்வலக்ஷ்மி**



அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவருக்கு பயிற்சியும் ஊக்கமும் அளித்த அதிபர், ஆசிரியர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*பிள்ளையார் கோயிலடி,*
*மாதகல்.*

- குடும்பத்தினர். (9611)


# சர்வஜன வாக்கெடுப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரபூர்வமாக அறிவிக்கப்படாத போதிலும் அரசு பொதுத் தேர்தலுக்குத் தயாராகிவிட்டதை அமைச்சர்களின் தீர்மானம் எடுத்துக்காட்டியுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு அலரிமாளிகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் பூர்வாங்க அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், நாடாளுமன்றத்தைக் கலைத்து, பொதுத்தேர்தலை அரசு எதிர்நோக்கவேண்டும் என்ற யோசனையை பிரதமர் முன்வைத்திருக்கிறார். அமைச்சர்கள் அனைவரும் அந்த யோசனைக்கு ஒரே குரலில் ஆதரவு தெரிவித்தனர்.

அரசின் இந்த நிலைப்பாட்டை உறுதிப்படுத்தி அமைச்சர் ஜி.எல்.பீரிஸும் நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துக்களை வெளியிட்டார்.

பொதுமக்களின் கருத்தறியும் சர்வஜன வாக்கெடுப்புக்கு இவ்வேளையில் முகங்கொடுக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை. அது புத்திசாலித்தனமான நடவடிக்கையும் ஆகாது. நாடு இன்று பல சவால்களை எதிர் நோக்குகிறது. இச்சவால்களுக்கு பல காரணங்கள் உள்ளன. எனவே, பொது மக்களின் கருத்தை அறிவது அவசியமானால், அக்கருத்தை அறிய சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதைக் காட்டிலும் பொதுத் தேர்தலை நடத்துவதே பொருத்தமானதாகும் என்று அரசு நம்புகிறது என அவர் சொன்னார்.

நாட்டில் சமாதானத்தையும் பொருளாதார சுபீட்சத்தையும் ஏற்படுத்துவதே அரசின் பிரதான குறிக்கோள் எனக் குறிப்பிட்ட அமைச்சர் பீரிஸ், அந்த குறிக்கோளை அடைய அரசியல் உறுதிப்பாடு மிகவும் அவசியமானதாகும் என்றும் சொன்னார்.

அமைச்சர் அங்கு மேலும் கூறியதாவது:-

நாட்டில் அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்தத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளும். ஆயினும், இது தொடர்பாக இறுதித் தீர்மானம் எதுவும் மேற்கொளளப்படவில்லை. அந்த நடவடிக்கை குறித்து ஆராய்ந்து வருகிறோம். பல தெரிவுகள் இருக்கின்றன. அவற்றில் மிகவும் உசிதமான, பொருத்தமான தெரிவு எது என்பதை நாம் தீர்மானிப்போம்.

ஒரு விடயத்திற்காகவே மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு நடத்தப்படும். ஆனால், இன்று நாடு பெரும் சவால்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டு இருக்கிறது. பல பிரச்சினைகள் சம்பந்தப்பட்டிருக்கின்றன. இந்த எல்லாப் பிரச்சினைகள் தொடர்பாகவும் மக்களின் கருத்தறியக்கூடிய உகந்த வழி பொதுத் தேர்தலே என்று அரசு கருதுகிறது.

பொதுத் தேர்தல் குறித்து அரசு கவனம் செலுத்தி வருகிறது.

கடந்த ஆண்டு பொதுத் தேர்தலில் ஐ.தே.முன்னணி அரசுக்கு மக்களின் தெளிவான ஆணை கிடைத்தது. அந்த ஆணையின் கீழ் நிதி நிர்வாகம் முக்கிய அம்சமாகும். அந்த நிதி நிர்வாகம் பூரணமாக அரசிடமே உள்ளது. மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற அந்த அதிகாரத்தை முற்றாகப் பயன்படுத்த அரசு தயாராக இருக்கிறது - என்றார். (ஐ)


**நாகம்ஸ்** கன்னாகம்

விஜயகாந்த், கார்த்திக், மீனா
அருண்பாண்டியன் நடித்த

**தேவன்** (ரீல்ஸ்)

காட்சிகள்: 11.00, 3.00 (பு.நே.) (9587)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

விக்ரம், கிரன், மனோரமா நடித்த

**ஜெமினி** (ரீல்ஸ்)

காட்சிகள்: 11.00, 2.30, 6.30 (S.L.T) (C-24276)

**ராஜா** யாழ்ப்பாணம்.

விஜய், சந்தியா, சிம்ரன், விவேக் நடித்த

**யூத்** (ரீல்ஸ்)

காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (பு.நே) (C-24275)


# நோர்வே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவருமான விடர் ஹெல்கிசன், ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் உட்பட நான்கு நோர்வே அதிகாரிகள் இக்குழுவில் இடம்பெறுகின்றனர்.

விமானம் மூலம் அன்று காலை பலாலி வந்தடையும் குழுவினர், முதலில் பலாலியில் படை அதிகாரிகளுடன் கலந்துரையாடுவர். அதன் பின் முற்பகல் 10மணிக்கு யாழ்.செயலகத்திற்கு வருகை தருவர். அங்கு திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடும் குழுவினர், அதன் பின்னர் அங்கு செய்தியாளர் மாநாடு ஒன்றையும் நடத்துவர்.

யாழ்.ஆயர் இல்லம், யாழ்.பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கும் குழுவினர் விஜயம் செய்வர்.

யாழ்.மாநகர மேயர் செல்லன் கந்தையனின் ஏற்பாட்டில் யாழ்.பொது நூலகத்தில் பொதுமக்களைச் சந்திப்பதற்கும் வசதி செய்யப்படவுள்ளது. புரிந்துணர்வு உடன்பாடு தொடர்பாக மக்களின் கருத்தை குழுவினர் அப்போது கேட்டறிவர்.

நோர்வே குழுவினர் யாழ்ப்பாண விஜயத்தை முடித்துக்கொண்டு ஏ-9 வீதி ஊடாக வன்னி செல்வர். அங்கு விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன், அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோரை அவர்கள் சந்திக்கவிருக்கின்றனர். (ஐ-3-8)


**வினா - விடை வகுப்புகள்**

G.A.Q., B.A. Part I
2002 B.A. Final
G.A.Q. - 2003

**புதிய பிரிவுகள்**

G.S. கிராமசேவையாளர் தரம் II
வெளிக்கள போதனாசிரியர்
பதவிக்கான போட்டிப் பரீட்சை வகுப்புகள்
ஆரம்பம் - 19.10.02 8 a.m

**நியூட்டன் உயர் கல்வி நிறுவனம்**
ஆரியகுளம் சந்தி, யாழ்நகர். (9624)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

இல.70, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இதுவரை இயங்கிவந்த....

## சாருணி ஜுவல் கட்டிங் வேக்

நிகழும் சித்திரபானு வருடம் ஐப்பசி 2ஆம் திங்கள் நாளை (19.10.2002) சனிக்கிழமை காலை 10.30 மணிமுதல் 12.00 மணிவரையுள்ள சுப முகூர்த்தத்தில்

இல.74, கன்னாதிட்டி சந்தி,
யாழ்ப்பாணம்.

புதுப் பொலிவுடன்....
சாருணி ஜுவல் கட்டிங் வேக்

என்னும் முகவரியில் எம்மால் இடம்மாற்றப்படவுள்ளது என்பதனை எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தரும் அதேவேளை.... தாங்கள் அனைவரும் திறப்பு விழா நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*இல.74 கன்னாதிட்டி சந்தி, யாழ்ப்பாணம்.* (9618)

திரு. பா.கேதீஸ்வரன்.
உரிமையாளர்

## நியூ ஆனந்தா ஜுவல்லர்ஸ்

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்களின் நலன் கருதி இணைநிறுவனங்கள் விஸ்தரிக்கப்பட்ட நிலையில் யாழ்.நகரில் மீண்டும் புதுப் பொலிவுடன் இயங்கும் ஒரேயொரு ஸ்தாபனம்



**நியூ ஆனந்தா ஜுவல்லரீஸ்**



(வின்சர் தியேட்டர் முன்பாக)
இல, 185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

நம்பிக்கை! நாணயம்!! உத்தரவாதம்!!

அழகு ஒரு ஆனந்தம் அதற்கு நிகர் நியூ ஆனந்தா

இணை நிறுவனங்கள்:

யாழ். நியூ ஆனந்தா ஜுவல்லர்ஸ்
இல. 56 தெற்கு உஸ்மான் ரோடு
தி.நகர், சென்னை - 600 017
T.P 4350938

நியூ ஆனந்தா ஜுவல்லர்ஸ்
இல 69/1 பஜார் வீதி,
வவுனியா.
T.P 024 22096

(C/24311)


# மரண அறிவித்தல்கள்

## சிவகுரு இரவீந்திரன் (ரவி)

(செட்டியவூர், தொண்டமனாறு)

தொண்டமனாறு, செட்டியவூரைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு இரவீந்திரன் அவர்கள் 13.10.2002 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு - பாக்கியம் தம்பதிகளின் புதல்வனும் விஜயராஜா, இராமச்சந்திரன், பரமேஸ்வரி, ஜெகதாஸ், பரமேஸ்வரன், ஜெயரூபன் ஆகியோரின் சகோதரனும் இராசம்மா, நாகேஸ்வரி, பாலசுப்பிரமணியம், லிங்கேஸ்வரி, கருணாவதி, சர்மினா ஆகியோரின் மைத்துனரும் இளையராஜா, ராஜினி, கஜேந்தா, சிவசுதன், திவ்வியா, ஜெனீவ், நிதர்சன், இந்துசன், விதுர்சன் ஆகியோரின் சிறிய தந்தையும் வாசுகி, கல்யாணி, பாலமுரளி ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.10.2002) சனிக்கிழமை கனடா ரொறன்ரோவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நவிண்டில்,*
*கரவெட்டி.* (C/24310)

தகவல்:
செ.பாலசுப்பிரமணியம் (மைத்துனர்)
(இலங்கை மின்சாரசபை - பருத்தித்துறை)

## நாகலிங்கம் விஜயரட்ணம் (விஜயம்)

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் விஜயரட்ணம் நேற்று (17.10.2002) வியாழக்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் நாகலிங்கம் - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், சரோஜினிதேவியின் அன்புச் சகோதரனும், கிருபாகரன் (பிரான்ஸ்), தவக்குமரன் (வர்த்தகர், சுழிபுரம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நந்தினி (பிரான்ஸ்), கமலாவின் அன்பு மாமனாரும், சோபனா (பிரான்ஸ்), தயாளினி, மயூரா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 18.10.2002 பி.ப. 5 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கேமா ஸ்ரோர்ஸ் முன்லேன்,*
*பண்ணாகம் தெற்கு,*
*சுழிபுரம.* (9629)

தகவல்:
வி.குமரன்
(மகன்)

## திருமதி சிவபாதசுந்தரம் அமிர்தாம்பிகை

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாதசுந்தரம் அமிர்தாம்பிகை நேற்று (17.10.2002) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும் ஸ்ரீஜெகநாதன் (நிதி உதவியாளர், பிரதேச செயலகம் - சங்கானை), ஜெகதீஸ்வரி, சற்குருநாதன் (ஜேர்மனி), சற்குணேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற ஸ்ரீமதி மற்றும் அருட்சோதி, மணிமேகலை (ஜேர்மனி), பழனிநாதன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.10.2002) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*32/1, அம்பாள் வீதி,*
*நாயன்மார்கட்டு,*
*யாழ்ப்பாணம்.* (9630)

தகவல்:
ஸ்ரீஜெகநாதன்
(மகன்)

# இன்று ஹர்த்தாலைக் கைவிட சமாதானக் கூட்டத்தில் முடிவு

## சுகாதார அமைச்சர் தயாரத்ன தலைமை

அக்கரைப்பற்றில் இரு நாள்களாக நிலவிய பதற்றத்தை தணிக்கும் முகமாக நேற்று மாலை சுகாதார அமைச்சர் பி.தயாரத்ன தலைமையில் சமாதானக் கூட்டம் நடைபெற்றது.

அக்கரைப்பற்று பொலீஸ் நிலையத்தில் கூட்டம் நடந்தது. அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேரு, விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் பாவா, சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் சரத் பெரேரா, ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் எஸ்.அருள்ராஜா, ஸ்வோட் தலைவர் எஸ்.செந்துர் ராஜா, சமாதான அமைப்பின் செயலர் புகாரி உட்பட பல பிரமுகர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் பல முடிவுகள் எடுக்கப்பட்டன.


★ இன்று ஹர்த்தாலைக் கைவிட்டு கடைகளைத் திறப்பது.

★ ஏதாவது முறைப்பாடுகள் இருப்பின் சமாதான சபையிடம் முறையிடுவது.

★ எல்லாப் பகுதிகளிலும் விசேட பாதுகாப்பு ஏற்பாடு செய்வது.

இந்த முடிவுகளின் படி இன்று முதல் அக்கரைப்பற்றில் அமைதி நிலவும் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்று ஹர்த்தாலை கைவிடுவது என்று சமாதானக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு அக்கரைப்பற்றில் உள்ள எல்லாப் பள்ளிவாசல்களிலும் நேற்று இரவு 7.30 மணியளவில் அறிவிக்கப்பட்டது. ஹர்த்தாலைக் கைவிடும்படி வேண்டுகோளும் விடுக்கப்பட்டது. எனினும், ஒரு சிலர், கடத்தப்பட்டவர் விடுவிக்கப்படும் வரை ஹர்த்தால் தொடரும் என்று தெரிவித்தனர். மாலை 4 மணியளவில் அமைச்சர் தயாரத்ன காஞ்சிரங்குடா, திருக்கோயில் பகுதிகளுக்கு விஜயம் செய்தார். சுகாதார அமைச்சர் தயாரத்ன வந்து சமாதானக் கூட்டம் நடத்தி அக்கரைப்பற்று நிலைமையை வழமைக்கு கொண்டு வர முயற்சி செய்கிறார். அம்பாறை மாவட்ட தமிழ் எம்பி.சந்திரநேரு, புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் பாவா முதலானோர் சமாதானத்தை ஏற்படுத்த முயற்சி செய்து வருகின்றார்கள்

(ஐ)



வவுனியா கலாசார மண்டபத்தில் முகாமிட்டுள்ள படையினரை வெளியேறக் கோரி இலங்கை திருச்சபை தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்கள் நேற்று மேற்கொண்ட மறியற்போராட்டத்தின்போது எடுக்கப்பட்ட படம்.


## அதிசயக்கண்களினூடாக யாழ்ப்பாணம்



யாழ்ப்பாணத்தில் வாழ்ந்துகொண்டு தொழில்புரியும் வெளிநாட்டுக் கலைஞர்களின் ஓவிய, புகைப்பட, சிற்பக் கண்காட்சி

காலம் : 21.10.2002 தொடக்கம் 31.10.2002 வரை தினமும் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை.

இடம் : திருமறைக் கலாமன்றத்திற்குரிய கட்டடம், 15, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.

*கண்காட்சிப் பொருள்களின் விற்பனையால் சேகரிக்கப்படும் நிதி தர்ம நிலையங்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளது.*

கலைஞர்கள் விவரம் :
அலிஸ்டர் கோர்க், டொமினிக் சன்சனி (புகைப்படவியலாளர்கள்)
லெனொன் போல், பற்றிக் மொறின் (ஓவியர்கள்)
அன்டி ஸ்மித் (சிற்பவியலாளர்) (9616)


## சில பகுதிகளில் நாளை மின்வெட்டு

யாழ்ப்பாணம்,ஒக்.18

அவசர திருத்த வேலைகள் மேற்கொள்ளும் பொருட்டு யாழ்பிரதேசத்தின் சில இடங்களில் நாளை காலை 9 மணிமுதல் பிற்பகல் 4மணிவரை மின்விநியோகம் தடைப்பட்டிருக்குமென யாழ்மின்சாரசபை அறிவித்துள்ளது.

ஊரெழு, நீர்வேலி, கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், செம்மணி மற்றும் திருநெல்வேலி ஆகிய பகுதிகளிலேயே மின் விநியோகம் தடைப்படுமென யாழ்பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஐ-9)

## திருமாவளவன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சனிக்கிழமை ஆரம்பித்து நான்கு தினங்களுக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் ஈழததமிழரின் உரிமைப் போராட்டத்தில் கலை, இலக்கியங்கள், ஊடகங்கள் வகித்த பங்கும், இனி வகிக்க வேண்டிய பங்களிப்புப் பற்றியும் ஆராயப்படவுள்ளது. இம்மாநாட்டில் கட்டுரையாளர்கள், பேராளர்கள், பார்வையாளர்களாகப் பங்கேற்க இலங்கையின் சகல பகுதிகளில் இருந்தும் ஏராளமானோர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர். யாழ். மாவட்டத்திற்கு வெளியே இருந்து இன்றும் ஏராளமானோர் வந்து சேர்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ், சிங்கள, இஸ்லாமிய படைப்பாளிகளும் ஊடகவியலாளர்களும் சங்கமிக்கும் இத் 'தமிழ்க் கூடல் - 2002' தினமும் புதிய நேரப்படி காலை 9.00 மணியிலிருந்து இரவு 3.00 மணி வரை நடைபெறவுள்ளது. பல்வேறு அமர்வுகளாக இடம்பெறும் ஆய்வுரை, குறிப்புரை, சிறப்புரைகளின் பின்னர் தினமும் ஈழத்தமிழர்களின் பாரம்பரியத்தை - போராட்டத்தை - பிரதிபலிக்கும், மட்டக்களப்பு - வன்னி -யாழ்ப்பாண மாவட்ட கலைஞர்கள் பங்கேற்கும் நாடகங்களும் அரங்கேறவுள்ளன.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

அல்லைப்பிட்டி கிராம அலுவலர் திரு. சி.இரத்தினேஸ்வரன் அவர்களின் மைந்தன்

**செல்வன் இரத்தினேஸ்வரன் ராஜபாரதி**

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்திலிருந்து 2002இல் 5ஆம் ஆண்டு புலமைப்பரீட்சையில் சிறந்த புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அத்தோடு அதிபர், ஆசிரியர்களுக்கும் மற்றும் அவரது பெற்றோர்களுக்கும் எமது பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றோம்.

*வாழ்க வளமுடன்!*

*பிரதேச செயலகம், தீவுப்பகுதி தெற்கு, வேலணை.* (9582)

கிராம உத்தியோகத்தர்களும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரும்.

## லொறி, வான் சாரதிகள் உடன் தேவை

மேற்படி பதவிக்கு வாகன அனுமதிப்பத்திரம் உடையவர்கள் விண்ணப்பிக்கலாம்

★ விண்ணப்பதாரிகள் தமது சுயவிரத்துடன் கிராம சேவையாளர் உட்பட உறவினர் அல்லாத இருவரின் நற்சான்றிதழ்களுடனும் அங்கீகரிக்கப்பட்ட ஒருவரின் சிபார்சுக் கடிதத்துடனும் விண்ணப்பிக்கவேண்டும்.

★ கொழும்பு பற்றிய பிரதேச அறிவும், நீண்ட தூரம் வாகனம் ஓட்டுதல், வாகனம பராமரித்தல், பழுது பார்த்தல் பற்றிய அறிவும் மேலதிக விரும்பத்தக்க தகைமையாகக் கருதப்படும்.

★ கொழும்பில் தாங்குமிட வசதியும், உணவும் வழங்கப்படும். சம்பளம் தகுதிக்கேற்ப வழங்கப்படும்.

*விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:-*

விளம்பர இலக்கம் - 1673
மே/பா உதயன் பணிமனை,
(C/24291) 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## விநியோகப் பணியாளர்கள் தேவை

மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

இரண்டு உறவினர்கள் அல்லாதவர்களிடம் பெறப்பட்ட நற்சான்றிதழ்களுடனும் சுயவிவரத்துடனும் விண்ணப்பிக்கவும். தகுதிக்கேற்ப ஊதியமும், கொழும்பில் தாங்குமிட வசதியும் உணவும் வழங்கப்படும்.

விளம்பர இலக்கம் - 1674
மே/பா உதயன் பணிமனை,
(C/24292) 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## கிராம சேவகர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சை

இப்பரீட்சைக்கான பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன

சனி, ஞாயிறு - 3.00 மணி

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(9561)

## CAREER. COM INSTITUTE

Dear Students!

போட்டி உலகை வெற்றி கொண்டு உங்கள் எதிர்காலத்தை வளமாக்க நீங்களும் ஒரு முகாமைத்துவ கணக்காளராக

**CMA (Certified Management Accountants)**

கற்கை நெறியுடன் உங்களை இணைத்துக் கொள்ளுங்கள். Society of Management Accountants of Canada என்ற சர்வதேச கணக்கியல் அமைப்பின் வழிகாட்டலில் Society of Certified Management Accountants of SriLanka என்ற அமைப்பினரால் 2001ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட அதியுயர் முகாமைத்துவ கணக்கியல் கற்கை நெறியே CMA ஆகும்.

அடிப்படைத் தகைமை

**G.C.E. (A/L) 3pass & G.C.E. (O/L) 'C' 3pass**

பட்டதாரிகள் (உள்வாரி, வெளிவாரி), ATI மாணவர்கள், பல்கலைக் கழக மாணவர்களுக்கு Exemption விரைவாகப் பெற்றுத் தரப்படும்

CMA விரிவுரைகள் 19.10.2002 இல் ஆரம்பம்.

'CMA விரிவுரைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்'

79, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (C/24289)

*அலுவலக நேரம்: திங்கள், புதன், வெள்ளி, சனி, ஞாயிறு 10a.m - 2p.m*

## எமது புதிய வீடியோ CD வெளியீடு

விவேக், ரகுவரன் நடித்த
★ யுனிவேர்சிட்டி
★ ஜங்சன்
பிரதிகள் உடன் பெறலாம்.

**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம். (C-24312)

## ஜிரீசற் பதவி வெற்றிடங்கள்

**ஜி.ரி.சற் - யாழ். புனரமைப்புத் திட்டம்**

★ பராமரிப்பு உத்தியோகத்தர் - Maintenance Officer (Male)

வாகனங்கள், மின் பிறப்பாக்கிகள், அலுவலக உபகரணங்கள் ஆகியவற்றுடன் அலுவலகக் கட்டடங்கள், வதிவிடங்களையும் உரிய முறையில் பராமரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப அனுபவமும் நல்ல ஆங்கில அறிவும் அவசியம்.

★ வரவேற்பாளர் - Receptionist(Female)

ஆங்கிலத்தில் சரளமாகப் பேசக் கூடியவராகவும் தொடர்பாடலில் அனுபவம் உள்ளவராகவும் இருந்தல் அவசியம்

★ சமையல் உதவியாளர் - Assistant Cook

வெளிநாட்டவர்களுக்கான உணவு வகைகள் தயாரிப்பதிலும் பரிமாறுதலிலும் அனுபவம். அத்துடன் ஆங்கிலம் ஓரளவேனும் பேசக்கூடிய அறிவு.

25.10.2002 திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக முழு விவரங்களுடன் விண்ணப்பங்களைத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

இணைப்பாளர்,
ஜி.ரி.சற்,
(C/24289) 11, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

## குறைந்த கட்டணத்தை அறிமுகப்படுத்திய SERENDIB விமான சேவை

மாற்றத்தை உணருங்கள்...! கட்டணத்தை சிந்தியுங்கள்....!
உறுதிப்படுத்திய பயணச்சீட்டுக்கள்
விவரத்தை எம்மிடம் கேளுங்கள்.

*தொடர்பு :* **செரண்டிப் மனோ,** 13,மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(24 மணி) 0777/517019, 0777/801038, 021/222 2007
(C/24295)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.10.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# வைத்தியராக வரவிரும்பியவர் இன்று அச்சுக்கலை விற்பன்னர்

## அச்சகர் சம்மேளனத் தலைவர் சதீஸ் அபேவிக்கிரம கண்ட வெற்றிகள்

*கேள்வி:* சிறந்த வர்த்தகராக விளங்கும் நீங்கள் கடந்துவந்த பாதை பற்றிக் கூறமுடியுமா?

*பதில்:* நான் பிறந்தது முதல் வாழ்க்கையுடன் போராடியவன். குறை மாதக் குழந்தையாகப் பிறந்த நான், ஒரு வருட காலம் வாழ்வா, சாவா என்ற நிலையில் உயிர்வாழ்ந்தேன்.

இன்று நான் இந்த நிலையில் இருப்பதற்கு எனது பெற்றோருக்குத் தான் நன்றி சொல்லவேண்டும். பாடசாலைக்குச் செல்லும் வயதில் எனக்கு வைத்தியராக வேண்டுமென்ற ஆசையே இருந்தது. பணம் திரட்ட வேண்டும் என்ற ஆசையால் எழுந்த எண்ணம் அல்ல அது. சேவை மனப்பான்மையால் எழுந்த ஆசை அது. துரதிஷ்டமாக எனது அந்த கனவு நிறைவேறாமல் போய்விட்டது.

அதேவேளை, எனது தந்தை ஓர் அரசியல்வாதி. அவர் 1977இல் 'அக்மீமன' தொகுதியில் ஐ.தே.கட்சி சார்பாகப் போட்டியிட்டவர். அப்போது எனக்கு வயது 18. அந்தத் தேர்தலின் போது, என் தந்தையின் பிரதான அமைப்பாளராக நான் பணியாற்றினேன். அந்தத் தேர்தலில் எனது தந்தை வெற்றிபெற்றார்.

இதன்மூலம் எனக்குள் இருந்தது ஒரு தகைமையா? அல்லது திறமையா? என்பதை எனது தந்தையால் தீர்மானிக்கமுடியாமல் போனது. எனவே, அதிக அழுத்தம் இல்லாத துறையில் என்னை ஈடுபடுத்த தந்தை முடிவு செய்தார். அதற்கிணங்க நான "எயிட்கன் ஸ்பென்ஸ்" நிறுவனத்தில் மேற்பார்வையாளராகச் சேர்ந்து அச்சுத் தொழிலைக் கற்றுக்கொள்ளத் தொடங்கினேன். எனது திறமைகளைக் கண்டுகொண்ட அந்நிறுவனம் எனக்கு முகாமைத்துவப் பயிற்சி அளித்தது.

அந்தக் காலத்தில் அச்சுத் தொழில் முன்னேறாத துறையாக இருந்தது. பத்திரிகை அல்லது புத்தகம் அச்சிடப்படுவதற்கு அத்துறை மட்டுப்படுத்தப்பட்டு இருந்தது.

*கேள்வி:* தாங்கள் தற்போது பல அச்சு நிறுவனங்களுக்கு உரிமையாளராக இருக்கிறீர்கள். இந்தத் துறையில் இந்தளவுக்கு ஆர்வம் ஏற்படக் காரணம் என்ன?

*பதில்:* நான் இந்தத் துறைக்குப் பிரவேசிக்கும்போது பத்திரிகை பற்றியும், புத்தகம் பற்றியும்தான் எனக்குத் தெரிந்திருந்தது. ஆரம்பத்திலே குறிப்பிட்டதைப் போல வைத்தியராக ஆகுவதே எனது நோக்கமாக இருந்தது. ஆனால், அது நிறைவேறாத போதும் எடுத்த காரியத்தைச் சிறப்பாக முடிக்கும் எனது கொள்கை என்னை இந்தளவிற்கு வளர்த்துவிட்டது.

*கேள்வி:* ஒரு வைத்தியராக வரமுடியாததை நினைத்து இன்று நீங்கள் கவலைப்படுகிறீர்களா?

*பதில்:* ஆம். எனக்குள் கவலையிருக்கத்தான் செய்கிறது. ஆனால், ஒரு தொழில் என்ற ரீதியில் அச்சுத் துறையில் நான் கால் பதித்துவிட்டேன். வெற்றியும் பெற்றுவிட்டேன். அதனால் நான் எடுத்த காரியத்தைச் சரியாக முடித்துவிட்டேன் என்று நினைக்கிறேன்.

ஒரு குறுகிய வட்டத்துக்குள் இருந்த அச்சுத்துறையில் ஏதாவது ஒரு பிரிவில் நிபுணத்துவம் பெற வேண்டுமென நான் நினைத்தேன். அதற்கேற்ப தேயிலை உற்பத்தியுடன் தொடர்புடைய அச்சுத்துறையில் ஈடுபட்டேன்.

அதற்கு எனது நண்பர்கள் பலர் உதவி செய்தனர். 1989ஆம் ஆண்டு "பிரிண்ட் யூ.எஸ்.ஏ." நிறுவனத்தை ஆரம்பித்தேன். கணக்கு எழுதும் கொப்பிகள் இரண்டும், கடனுக்கு வாங்கிய கார் ஒன்றும், கார்ச் சாரதியும் தான் அப்போது எனது சொத்துக்கள்.

*கேள்வி:* நீங்கள் ஒரு பெரிய அச்சு நிறுவனத்துக்கு உரிமையாளராக இருக்கின்றீர்கள். அதேபோல, சிறிய அளவில் பல நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. அவர்களுக்கு பல பிரச்சினைகள் இருப்பதைக் காண்கிறோம். அவற்றைப் பற்றிக்கூறமுடியுமா?

*பதில்:* எமது நாட்டில் ஒரு வழமையுள்ளது. யாராவது ஒரு துறையில் முன்னேறிவிட்டால் ஒரு தொழில் துறைக்குப் போட்டியாக இன்னொரு தொழிலை யாரும் ஆரம்பிப்பார்களே தவிர அதற்கு உறுதுணையாக இன்னொன்றை ஆரம்பிக்கமாட்டார்கள். அச்சுத்துறையில் நிலைத்திருப்பது என்பது மிக இலகுவான காரியம் அல்ல. பத்திரிகை மற்றும் புத்தகங்களை அச்சிடுபவர்கள் மட்டுமே ஓரளவிற்காவது நிலைத்திருக்கமுடியும். அதிலும் நாட்டின் பொருளாதார நிலைமை குறித்து பெரும் பங்காற்ற வேண்டும்.

1977இற்குப் பின்பு அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரத்தால் பல பொருள்கள் சந்தையில் விடப்பட்டன. அவற்றிற்கான அச்சுத் தேவைகளும் ஏற்பட்டன. பின்பு 1994இல் ஏற்பட்ட பொருளாதார பின்னடைவினால் பல துறைகள் பாதிப்படைந்தன.

ஆனால், ஒரு மூலையில் மிளிர்ந்து கொண்டிருந்த தேயிலைத் துறையை நான் கண்டு கொண்டேன். ஆனால், அத்துறையில் அதிக கேள்வி நிலவியது. கேள்விக்கு ஏற்றவாறு எம்மால் வழங்கமுடியாது போனது. அந்தச் சந்தை வாய்ப்புக்களை நாம் சரியாக இனங்கண்டு கொள்ளாததே அதற்குக் காரணம்.

அதேவேளை, உற்பத்திச் செலவுகள் அதிகம் காரணமாக பலர் இவ்வாறான வேறுபட்ட அச்சுத் துறைகளில் ஈடுபடாமல் இருக்கிறார்கள்.

*கேள்வி:* இந்தியாவிலிருந்து குறைந்த விலையில் அச்சிட்டுக் கொள்ளலாம் என்று நாம் கேள்விப்படுகிறோம். இந்த நிலைமை பற்றி விளக்குவீர்களா?

*பதில்:* ஆம். அச்சுத் தொழிலாளர்களுக்கான விருது வழங்கும் வைபவத்தில் நான் இது பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். இறக்குமதிகளால் எமக்குத் தாக்கம் இருக்கவே செய்கின்றது. அதனை நாம் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

வாடிக்கையாளர்களின் கேள்விக்கேற்ப பொருள்களை எம்மால் விநியோகம் செய்யமுடியாதுள்ளது. இறக்குமதி செய்யும் அளவிற்கு ஏற்ப எமது பொருள்களின் தரமும் இல்லை. இவ்வாறான காரணங்களைக் காட்டி இறக்குமதிகள் தொடருகின்றன.

இவற்றைச் சரியாகப் பார்த்தோமேயாயின் இதில் உண்மையில்லை. எவ்வாறாயினும் வாடிக்கையாளர்கள் விரும்பிக் கொள்வனவு செய்யும் இடங்களில் அச்சிடப்படுபவற்றைக் கொள்வனவு செய்து நாம் இங்கு விற்பனை செய்யவேண்டும்.

*கேள்வி:* இதனால், எமது உள்நாட்டு அச்சுத்துறை பாதிப்படையுமென்று நீங்கள் நினைக்கவில்லையா?




ரீ.என்.எல். தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல்- நேருக்கு நேர் நிகழ்ச்சியில் கடந்த 15ஆம் திகதி தோன்றி அச்சுப்பதிப்புத்துறையில் தான் சந்தித்த வெற்றிகள் மற்றும் பிரச்சினைகள் பற்றி விளக்கம் தந்தவர் இரு புகழ்பெற்ற அச்சுத் தொழில் நிறுவனங்களின் அதிபரான சதீஸ் அபே விக்கிரம.

**வர்த்தக ஸ்பெஷல் நேருக்கு நேர்**

ஒரு வைத்தியராக உருவாகவேண்டும் என்று சிறுவயதில் கனவு கண்டார் இவர். அந்தக் கனவு நனவாகவில்லை. ஆனால், இன்று அச்சுப் பதிப்புத்துறையில் கொடி கட்டிப் பறக்கிறார். தொழிலதிபர் சதீஸ் அபேவிக்கிரம. இன்று இலங்கை அச்சகர்கள் சம்மேளனத்தின் தலைவராகவும் இருக்கிறார். அன்னாரின் தந்தை ஓர் அரசியல்வாதி. ஆனால், அவர் தனது மகனையும் அரசியலுக்கு இழுக்கவில்லை. அச்சுத்துறையைப் பயிற்றுவித்தார். தந்தையின் வழிகாட்டலில் சதீஸ் தனது திறமையை வளர்த்து இன்று 'பிரிண்ட் யு.எஸ்.ஏ.' மற்றும் 'பிலெக்ஸி' ஆகிய நிறுவனங்களுக்கு அதிபராக் இருக்கிறார். அதுமாத்திரமல்ல தோட்ட உரிமையாளராகவும் இருக்கிறார். அவர் அச்சிடும் பொருள்கள் மற்றவர்களை விட வேறுபட்டவை.

இவர் தேயிலை உற்பத்தி சார்ந்த பொருள்களுக்குத் தேவைப்படும் அச்சுப் பதிப்புகளையே அச்சிட்டு வெளியிடுவதைத் தமது தொழிலாகக் கொண்டிருக்கிறார்.

எடுத்த காரியத்தை எப்படியாவது சாதித்து முடித்துவிடவேண்டும் என்ற திடமான கொள்கையே தன்னை இவ்வளவு தூரம் வளர்த்துவிட்டிருக்கிறது என்று சதீஸ் அபேவிக்கிரம கூறுகிறார்.

தொலைக்காட்சியில் சதீஸ் அபேவிக்கிரமவை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்கிரமவும் 110 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குறூப்பின் அதிபரும், நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர். செவ்வியை இங்கே படித்துப்பாருங்கள்.

*பதில்:* அப்படி ஒருநிலை இருக்கத்தான் செய்கிறது. ஆனால், இன்றைய சூழ்நிலையில் அது சாதாரணமாகவேபடுகிறது. சட்டரீதியற்ற முறையில் இறக்குமதிகள் செய்யப்படுவதைவிட அதனைச் சட்டப்படி செய்வதில் தவறில்லை. அப்போது சரியான வரிவிதி முறைகளும் கையாளப்படும்.

*கேள்வி:* வரிமுறையைச் சீர்படுத்தினால் நிலைமை சரியாகும் என நினைக்கிறீர்களா?

*பதில்:* ஆம். அதுவும் ஒருநிலை தான். அதைவிட புத்தகங்களுக்கு வரி விலக்கு இருக்கிறது. அதனால், எமது எழுத்தாளர்கள் பலர் வெளிநாடுகளில் அச்சுச்செய்து இறக்குமதி செய்கின்றனர்.

இங்கு என்ன செய்யவேண்டுமென்றால் உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு சமவாய்ப்பு ஏற்படுத்தி, சிறந்த போட்டிக்கு வழிவகுக்கவேண்டும். அதாவது குறைந்த விலையில் அச்சுத்தாள் இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்து கொடுத்து அவர்களைத் தரமான அச்சுப் பிரதிகளை வெளியிட ஊக்குவிக்கவேண்டும்.

*கேள்வி:* அச்சுப் பொருள்களின் விலையுயர்வே புத்தகங்களின் விலை உயர்வுக்கும் காரணமென சிலர் கூறுகின்றனர். இதன் உண்மை நிலை என்ன?

(IVஆம் பக்கம் பார்க்க)


சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 2122963 இருந்து
2140753 வரை
சீட்டிழுப்பு இல. 1341
திகதி 16.10.2002

வெற்றி எண்கள்

11 14 39 47 56

போனஸ் எண்

52

ஜக்பொட் பரிசு

ரூபா.4,100,950/- வெல்லப்படவில்லை.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 4,100,950/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 03 | 100,000/- | 300,000/- |
| 4 | 119 | 10,000/- | 1,190,000/- |
| 3 | 5,750 | 500/- | 2,875,000/- |
| 2 | 93,722 | 20/- | 1,874,440/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 11ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 114,956 | 10/- | 1,149,560/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.7,389,000/-

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்

ரூபா. 4,990,000/-

தொடர் இல. 3119452க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2002 ஒக்டோபர் 19ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2127478-6-96
2126890-6-83
2126356-0-58
2136360-9-50
2124216-8-04

PHOENIX O&M

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கல்வி நிலைய சிரேஷ்ட கணித ஆசான்

**திரு. மனுவேற்பிள்ளை மகேஸ்வரராசா**

அவர்கள் அதிபர் தரம் 2:I பரீட்சையில் சித்தியெய்தி *யா/மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாலயத்தின* அதிபராக கடமையேற்றுள்ளமையைப் பாராட்டுவதுடன் அவர் மேன்மேலும் பல உயர்வுகள் பெற்று நன்றே வாழ்ந்திட வாழ்த்துகின்றோம்.

ரலன்ற் இன்ஸ்ரியூட்,
*கரவெட்டி.* (9609)

இயக்குநர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

## அறிவித்தல்

**பாலசிங்கம் சத்தியரஞ்சன் *(ரஞ்சன்)***

என்பவர் தற்பொழுது எமது ***சுந்தர்சன் ஸ்தாபனத்தில்*** கடமையில் இல்லை. இவருடைய கொடுக்கல் வாங்கல்களுக்கு நாமோ எமது ஸ்தாபனமோ எவ்வித பொறுப்புமில்லை என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

இங்ஙனம்:
**உரிமையாளர்,**
**சுந்தர்சன்.**

*மத்திய சந்தை முன்பாக,*
*மானிப்பாய்.* (9606)

## தீவகவலய ஆசிரியருக்கு செயலமர்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.18

தீவகக் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 11 வரையான வகுப்புகளுக்கு கற்பிக்கும் ஆசிரியருக்கான இடைநிலைக் கல்வி தர வட்டச் செயலமர்வுகள் நாளையும் எதிர்வரும் 26ஆம் திகதியும் இடம் பெறவுள்ளன.

நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் தமிழ்ப் பாடத்துக்கும், யாழ்.மத்திய கல்லூரியில் சமூகக் கல்வியும் வரலாறும் பாடத்துக்கும் செயலமர்வுகள் இடம் பெறும்.

எதிர்வரும் 26ஆம் திகதி காலை 8.30 மணிமுதல் யாழ்.மத்திய கல்லூரியில் கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் ஆகிய பாடங்களுக்கான செயலமர்வுகள் இடம்பெறும். (ஒ)

## உருவப்படம் திரைநீக்கம்

தேவரையாழி இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் மு.சி. சீனித்தம்பியின் ஞாபகார்த்த தினமான இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் தேவரையாழி இந்துக் கல்லூரியில் கல்லூரி அதிபர் ம. குட்டித்தம்பியால் அமரர் மு.சி.சீனித்தம்பியின் உருவப்படம் திரைநீக்கம் செய்துவைக்கப்படவுள்ளது. (ஒ-70)


**DISSERTATION BINDING**

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமைவாகக் கட்டிக்கொடுக்கப்படும். இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் 350/=.

BHARATHI PATHIPPAKAM
OFF-SET PRINTERS
430, K.K.S. ROAD, JAFFNA.
TELPHONE: 021-222 3081
(C/24304)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
14 - 05 - 1956



மறைவு
18 - 09 - 2002

**திருமதி புஸ்பராணி வேலுப்பிள்ளை**

குடும்பத்தின் குல தெய்வமாய்
ஒளிச்சுடராய் விளங்கியவரே!
*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

இன்று (18.10.2002) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன்:
வேலுப்பிள்ளை (கணவர்),
பிள்ளைகள், சகோதரர்கள்.

*கைதடி நுணாவில்,*
*சாவகச்சேரி.* (C/24305)

## ஸ்ரீ பரமானந்தா சிறுவர், முதியோர் இல்லம்

வதிரி - கரவெட்டி

### பதவி வெற்றிடம்

1. முகாமையாளர்:-

*தகைமை:* குறைந்தது ஜி.சீ.஺. (சா/த) இல் ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்தி தட்டச்சுவேலை, ஆங்கில அறிவுள்ள அரச/தனியார் நிறுவனங்களில் பணிபுரிந்த அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.

வயதெல்லை 50 - 65 வருடங்கள்

2. ஆண்பிள்ளைகள் மேற்பார்வையாளர்:-

*தகைமை:* குறைந்தது 10ஆம் வகுப்புவரை படித்த தனிநபர் அல்லது ஓய்வூதியம் பெறுபவர் விரும்பத்தக்கது.

வயதெல்லை 50 - 65 வருடங்கள்

*குறிப்பு:* இருப்பிட, உணவு வசதிகள் உண்டு. தொண்டூதியம் பேசித் தீர்மானிக்கப்படும். விண்ணப்பதாரர் சுயவிவரக் கோவையுடன் விண்ணப்பிக்கவும். முடிவு திகதி: 2002.11.15

மா.சிவசண்முகம்,
செயலாளர்,
ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரமம், தர்மகர்த்தாக்கள் சபை.

*வதிரி,*
*கரவெட்டி.* (9610)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லையா முதலியார் அமரசிங்கம் இராசலட்சுமி *(நேசம்)*

சண்டிலிப்பாய், நடுக்குறிச்சியைப் பிறப்பிடமாகவும் முல்லைத்தீவு கரைச்சிக்குடியிருப்பை வசிப்பிடமாகவும் தற்போது வெள்ளவத்தையில் வசித்தவருமாகிய திருமதி அமரசிங்கம் இராசலட்சுமி (நேசம்) அவர்கள் நேற்று (17.10.2002) வியாழன் அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினம் - முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லையா முதலியார் - சின்னத்தங்கம் அவர்களின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செல்லையா முதலியார் அமரசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் தர்மராசா, காலஞ்சென்றவர்களாகிய திருமதி சின்னத்தம்பு தங்கரத்தினம், தவராசா, தியாகராசா அவர்களின் அன்புச் சகோதரியும் திருமதிகள் தர்மராசா பொன்னாம்பிகை, தவராசா மகேஸ்வரி, தியாகராசா, சிவபாக்கியம், சரஸ்வதியம்மா இராசசுந்தரம், நவரத்தினம்மா அம்பலவாணர், காலஞ்சென்றவர்களாகிய சின்னத்தம்பு, இராசமுத்து சபாநாயகம், செல்லையா முதலியார் தங்கத்துரை, செல்லையா முதலியார் தர்மலிங்கம், திருமதி மீனாட்சியம்மா நாகலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் திருமதி இராசபூபதி, அமரர் சுந்தரராஜா, அமரர் சிவநேசன், திருமதி இரத்தினபூபதி, அமரர் சிவலிங்கம், திருமதிகள் இந்திரபூபதி, விமலா, ஜெயலிங்கம், விஜயலிங்கம், திருமதிகள் கல்யாணி, சாந்தி, திலகா, ரவிராஜன் ஆகியோரின் அன்புத் தாயாரும் பொன்னம்பலம், திருமதி மகாலட்சுமி, ஜெயநாயகம், திருமதி கருணாதேவி, திருநாவுக்கரசு, பாஸ்கரன், திருமதிகள் சர்வானந்தேஸ்வரி, ரஜனி, குலேந்திரன், த.தயாபரன், வை.தயாபரன், திருமதி சிவானந்தி அவர்களின் அன்பு மாமியாரும் தம்பதிகள் கணேசன் ஜெயந்தி, நித்தியானந்தன் தர்சினி, அசோக்குமார் சிவந்தி, ரத்தேஸ் அஞ்சலா, விஜயராஜன் காயத்திரி ஆகியோரினதும் கஜன், அரவிந்தன், கார்த்திகா, நாராயணி, பிரசாந்தினி, ரதினி, அமர்நாத், சிவராம், கமலாசினி, சுபாசினி, பாரத், வைஷ்ணவி, சைத்திரியா, சசீலன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் துஷ்யந்தி, மயூரிணி, காவின், அஸ்வின், பிரவீண் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.10.2002) சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு 24, தயா வீதி, வெள்ளவத்தையில் நடைபெற்று தகனக்கிரியைகள் பிற்பகல் 1 மணிக்கு பொறளை கனத்தை இந்து மயானத்தில் நடைபெறும்.

*24, தயா வீதி,*
*வெள்ளவத்தை,*
T.Phone: 586935 (C/24306)

தகவல்:
திரு.திருநாவுக்கரசு,

## முத்துவேலு கனகசபை (சிங்கப்பு)

*(இளைப்பாறிய முன்னாள் சாரதி - இ.போ.ச. )*

நவிண்டிலைப் பிறப்பிடமாகவும், அல்வாய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துவேலு கனகசபை 15-10-2002 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற முத்துவேலு அம்முணியின் மூத்த மகனும் யோகம்மாவின் அன்புக் கணவரும் கௌரியின் அன்புத் தந்தையும் அம்பலநாதனின் (கானகன் - மேற்பார்வையாளர், குற்றப்புலனாய்வுத் துறை) மாமனும் நிதர்சன், நிதீபன், நிருபன், நிதர்சினி ஆகியோரின் அன்புப் பேரனும் சரஸ்வதி, பாலசிங்கம், மகேஸ்வரி (கிளி), சந்தனாதேவி (பேபி), சுந்தரமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரவீந்திரன் (கனடா), சண்முகேந்திரன் (சுவிஸ்), பங்கயற்செல்வி (நோர்வே), நளினி (டென்மார்க்) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான சிவபாதசுப்பிரமணியம், பரஞ்சோதி (அரசினர் வைத்தியசாலை) மற்றும் பாலகிருஷ்ணன், செல்வச் சந்திரன், இராசம்மா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16-10-2002 புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கருகம்பன் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள், காவல் துறையினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்வாய் கிழக்கு,
அல்வாய். (9607)

தகவல்:
**மகன், மருமகன்.**

## வைரவன் (கொழும்பர்) நாகம்மா

மட்டுவில் தெற்கு, கண்ணன் ஆலய வீதியைச் சேர்ந்த திருமதி வைரவன் நாகம்மா 16-10-2002 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரவன் அவர்களின் அன்பு மனைவியும் மனோகரன் (டென்மார்க்), மனோரஞ்சினி, தேவன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*கண்ணன் ஆலய வீதி,*
*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.* (9617)

தகவல்:
**ஜெயக்கொடி.**


கந்தோர்,
வேலைத்தலம்,
சுப்பர் சந்தை...

ஆகியவற்றைச்
சுலபமாகச்
சென்றடைய




சாம்ப்
மோபெட்

த சம்பியன்
எல்லோராலும்
மிகவும் விரும்பப்படுவது



மேலும் தகவல்களுக்கு
சுசூக்கி மோட்டோஸ் லங்கா லிமிட்டெட்
795, சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு-14.
தொலைபேசி: 542883-5 தொலைநகல்: 440889



நேற்று நடைபெற்ற வெரித்தாஸ் வானொலியின் 'உறவுகளின் சங்கமம்' நிகழ்வில் கலந்துகொண்ட அந்த வானொலியின் பணிப்பாளர் பியாற்றோ வான் தாய் (வலது) மேடையில் அமர்ந்திருப்பதையும், தமிழ் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் வண. பிதா ஏ.சிங்கராயன் உரையாற்றுவதையும், யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் உட்பட பிரமுகர்கள் அமர்ந்திருந்து நிகழ்ச்சிகளைக் கண்டுகளிப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒருபகுதியினரையும் முறையே படங்களில் காணலாம்.

# தமிழ் உணர்வும் தமிழ்ப் பற்றும் ஈழத் தமிழர்களுக்கு அதிகம்

## 'வெரித்தாஸ்' ஒருங்கிணைப்பாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,ஒக்.18

"தமிழ் உணர்வும் தமிழ்ப் பற்றும் தமிழகத்தில் உள்ள தமிழர்களை விட ஈழத் தமிழர்களுக்கே அதிகள வில் உள்ளது. எனது அனுபவத்தில நான் இதனை உணர்ந்துள்ளேன்."

- இவ்வாறு 'வெரித்தாஸ்' வானொலி தமிழ் ஒலிபரப்பு ஒருங்கிணைப்பாளர் அருட்திரு.அ.சிங்கராயன் தெரிவித்தார்.

'உதயனு'க்கு அவர் வழங்கிய விசேட செவ்வியில் தெரிவித்ததாவது:-

வெரித்தாஸ் வானொலியின் உறவுச் சங்கமம் நிகழ்வை இந்த மண்ணில் நடத்துவதற்காகவே நாம் இங்கு வந்தோம். இத்தகைய ஒரு நிகழ்வை இங்கு இப்பொழுதே முதற்றடவையாக நடத்துகின்றோம்.

வெரித்தாஸ் என்பதன் பொருள் உண்மை ஓங்கும் என்பதாகும். நான் இந்த வானொலியின் தமிழ்ப் பிரிவு ஒருங்கிணைப்பாளராகப் பொறுப் பேற்ற போது ஈழத்தமிழர்கள் பிரச்சினை குறித்து அதிகம் அறிந்திருக்கவில்லை. ஆனால், கடந்த 25 ஆண்டு காலமாக ஈழத்தமிழர்கள் படும் இன்னல்களுக்காக வெரித்தாஸ் குரல் கொடுத்து வந்துள்ளது. எனவே, ஈழத்தமிழர்களின் பிரச்சினை அவர்கள் படும் இன்னல்கள் என்பவற்றை நேரில் அறிந்துகொள்ள விரும்பினேன். அதனை உணர்வுபூர்வமாக அறிவதன்மூலமே இங்கிருந்து கிடைக்கும் செய்திகளை உண்மையாகவும் தெளிவாகவும் வழங்கமுடியும் என்று நான் கருதினேன். இங்கு வந்த எமது நோக்கங்களில் முக்கியமான ஒன்றாக இதுவும் இருக்கின்றது.

வெரித்தாஸ் வானொலிக்கு தமிழகத்தைவிட ஈழத்திலேயே அதிக நேயர்கள் இருக்கின்றார்கள். வெரித்தாஸ் வானொலி மூலம் ஒலிபரப்பாகும் 17மொழிகளில் தமிழுக்கே அதிக அளவு நேயர்கள் இருக்கின்றார்கள். அவர்களிலும் ஈழத் தமிழ் நேயர்களே அதிகம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அவர்களின் இந்த ஆர்வம்தான் எங்களை மேலும் ஈடுபாட்டுடனும் தமிழ் உணர்வுடனும் செயற்படவேண்டும் என்று தூண்டுகின்றது.

இங்குள்ள தமிழர்கள் தமிழ் மொழிக்கும் அதன் பாரம்பரியங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். தமிழ் இலக்கியத்திலும் அதிக ஆர்வம் காட்டுகின்றார்கள். அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கும்படி எங்களுக்கும் கடிதங்களை அனுப்புகின்றார்கள்.

இலங்கையில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் சமாதான முயற்சிகள் வெற்றிபெற வேண்டும் என்று நாம் வாரத்தில் இரு தடவைகள் பிரார்த்தனை செய்கின்றோம்.

சமாதான முயற்சியில் ஈடுபட்டுள்ள இரு தரப்புகளும் தமது சுயநலன்களைக் களைந்துவிட்டு மனித நேயத்துடன் மக்களுக்கான உயர்ந்த நோக்கத்துடன் செயற்படவேண்டும் அதுவே எமது விருப்பு. அதற்காகவும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் சுமுகமாகத் தீர்க்கப்படவேண்டும் என்பதற்காகவும் நாம் எப்போதும் ஆதரவுக் குரல் கொடுப்போம்.

இலங்கை முழுவதும் உள்ள தமிழர்களை ஒருங்கிணைக்கக் கூடிய ஒரு உறவுச் சங்கமம் நிகழ்வை நடத்துவது குறித்தும் நாம் ஆலோசிக்கின்றோம். இங்குள்ளவர்களும் அது குறித்த தமது ஆர்வத்தை வெளியிட்டுள்ளனர்.

இது தவிர ஐரோப்பிய நாடுகள், சிங்கப்பூர், மலேசியா, பர்மா போன்ற நாடுகளில் எல்லாம் இருக்கும் தமிழர்களை ஒன்றிணைத்து ஒரு உறவுச் சங்கமத்தை நடத்தவேண்டும் என்பது எனது பேரவா. அதற்கு முதலில் இந்த நாடுகளில் எல்லாம் வெரித்தாஸ் நேயர்களை அதிகளவில் உருவாக்கவேண்டும்.

மொத்தத்தில் தமிழ் உணர்வை வளர்ப்பதில் வெரித்தாஸ் உந்து சக்தியாகச் செயற்படும். ஈழத் தமிழர்களுக்கான ஆதரவை அது தொடர்ந்தும் வழங்கும்.

- இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (ம-8)

### மோ.சைக்கிள் விபத்தில் மாணவன் காயம்!

வலி.வடக்கு,ஒக்.18

பாடசாலை நேரத்தில் சரஸ்வதி பூசைப் பணிக்காக மோட்டார் சைக்கிளில் சென்ற மாணவன் விபத்திற்கு உள்ளாகி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளான்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவனான கனகநாயகம் நிசாந்தன் என்ற மாணவனே தலை, முகம் என்பவற்றில் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவனாவான.

இவ்விபத்து கடந்த செவ்வாய்க் கிழமை மல்லாகம் சந்திக்கு அண்மையில் இடம்பெற்றது. (ஒ-86)

### வீதி விபத்தில் இருவர் காயம்!

சாவகச்சேரி,ஒக்.18

மீசாலை - கண்டிவீதியில் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம் பெற்ற மினிபஸ் - சைக்கிள் விபத்தில் - புத்தூர் வீதியைச் சேர்ந்த நடராசா தவமணி (வயது 49), கணபதிப்பிள்ளை சிவசுப்பிரமணியம் (வயது 46) ஆகிய இருவரும் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். (ஒ-31)

# உறவுகளின் சங்கமம் நேற்று யாழ்.நகரில்

யாழ்ப்பாணம்,ஒக்.18

'வெரித்தாஸ்' வானொலியின் 'உறவுகளின் சங்கமம்' என்னும் நிகழ்ச்சி நேற்று யாழ்.மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெற்றது.

வெரித்தாஸ் வானொலியின் பணிப்பாளர் பியாற்றோ வான்தாய் மற்றும் தமிழ் நிகழ்ச்சிப் பொறுப்பாளர் வண. பிதா ஏ.சிங்கராயன் ஆகியோர் அடங்கிய குழுவினர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

வெரித்தாஸ் வானொலியின் நேயர்கள், அன்பர்கள் உட்பட 200இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்ட இந் நிகழ்வில், வெரித்தாஸ் வானொலி தொடர்பாக யாழ்.மக்களிடம் உள்ள அபிப்பிராயங்கள், நிகழ்ச்சிகளில் ஏற்படுத்தப்படவேண்டிய மாற்றங்கள் என்பன குறித்து இக்குழுவினர் விரிவான கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர்.

வெரித்தாஸ் வானொலியின் தமிழ்ச் சேவை யாழ்.மக்களிடையே நடத்திய கட்டுரை, கவிதைப் போட்டிகளுக்கான பரிசில்களும் இவ்வைபவத்தில் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம், வெரித்தாஸ் தமிழ்ப் பணியின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் அருட்திரு.ரூபன் மரியாம்பிள்ளை, மட்டக்களப்பு இணைப்பாளர் அருட்திரு.ஆர்.ஜி.சந்திரகுமார், ஆசிய ஆயர் பேரவைச் செயலாளர் பிரான்சிஸ் ஜோசப் ஈஸ்வர் ஆகியோர் உட்படப் பல குருக்களும் கலந்துகொண்டனர். (ம-8)

# குடாநாட்டு புனரமைப்புக்கென ரூ.550 கோடி செலவிட்டுள்ளது

## கடந்த ஆட்சிக்காலத்தில் அரசு மட்டும்

## ஆனால் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் முன்னேற்றமில்லை

யாழ்ப்பாணம்,ஒக்.18

கடந்த ஆட்சிக் காலத்தில் யாழ். குடாநாட்டில் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கு என 550 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது. இத்தகைய பெரும் நிதி பயன்படுத்தப் பட்டபோதும் அது குடாநாட்டு மக்களின் வாழ்க்கைத்தர முன்னேற்றத்தில் எந்தவிதத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சிக் காலத்தில் இருந்த புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் இந்த நிதியில் பெரும் பகுதி புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கு என வாரி இறைக்கப் பட்டது.

ஆனால், நிதி வழங்கும் செயற்றிட்டங்கள் குறித்த கண்காணிப்பும் மதிப்பீடுகளும் சரியான - ஒழுங்கான - முறையில் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் வழங்கப்பட்ட நிதிமூலம் குடாநாட்டு மக்களுக்கு பெரியளவில் நன்மைகள் ஏற்படவில்லை.

இவ்வளவு பெரும் எடுப்பில் நிதி பயன்படுத்தப்பட்டபோதும் குடாநாட்டு மக்களின் வாழ்க்கைத்தர முன்னேற்றத்தில் அதன் தாக்கம் உணரப்படவில்லை.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றின்மூலம் இத்தகவல்கள் வெளியாகியுள்ளன.

இனிவரும் காலங்களிலும் இத்தகைய செயற்பாடுகள் இடம்பெறாது இருப்பதை உறுதிப்படுத்துவது அவசியம் என்று நிபுணர்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

புனரமைப்பு அபிவிருத்தி ஆகியவற்றுக்கென வாரி இறைக்கப்படும் நிதி சரியான விதத்தில் பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதன் மூலமே குடாநாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தமுடியும் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-8)

### திருமுறை விழாவை முன்னிட்டு போட்டிகள்

வலி.தெற்கு,ஒக்.18

சைவத்திருமுறை விழாவை முன்னிட்டு உடுவில் கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான பண்ணிசை, நீதிச் செய்யுள் மனனம், தொண்டுபடும் செய்முறை ஆகியவற்றில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இப்போட்டிகள் நாளை சனிக்கிழமையும் எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமையையும் நடைபெறவுள்ளன.

நாளை தரம் 6 தொடக்கம் 13 வரையான வகுப்பு மாணவருக்கு பண்ணிசை, நீதிச் செய்யுள் மனனம் மற்றும் திறந்த நிலைப்போட்டிகளான புராண படனம், கதாப்பிரசங்கம் என்பன மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரையான மாணவருக்குப் பண்ணிசை, நீதிச்செய்யுள் மனனம் என்பனவும் தரம் மூன்று தொடக்கம் தரம் 13 வரையான மாணவருக்கு தொண்டு படும் செயன்முறை போட்டிகளும் 21ஆம் திகதி திங்கட்கிழமை ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நடைபெறும். (ஒ-152)

# விழிப்புலனற்றோர் சங்கத்தின் வெள்ளைப் பிரம்புதின நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.18

யாழ்.லயன்ஸ் கழகத்தோடு இணைந்து யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம் சர்வதேச வெள்ளைப் பிரம்புத் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்துள்ள 'சுகஸ்வரங்கள்' கலை நிகழ்வு நாளை சனிக்கிழமை இடம் பெறவுள்ளது.

பொஸ்கோ பதிப்பகத்தினரின் அனுசரணையுடன் இடம்பெறும் இந்நிகழ்வில், நாளை முற்பகல் 9.00 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் வெள்ளைப் பிரம்புதின அடையாளப் பேரணியும் அதனைத் தொடர்ந்து ஒன்றுகூடலும் இடம்பெறும்.

பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் யாழ். விழிப்புலனற்றோர் சங்கக் கலைஞர்கள் வழங்கும் இன்னிசை நிகழ்வும் இடம்பெறும். (ஓ)

# வருமான அதிகரிப்பு திட்டம் ஆரம்பம்

கிளிநொச்சி,ஒக்.18

போரினால் நேரடியாகப்பாதிப்புற்று,வறுமையில் வாடும் குடும்பங்களின் வருமானத்தை அதிகரிக்கும் திட்டத்தின் ஆரம்ப விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை தருமபுரம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

சமுதாய முன்னேற்ற நிலையத்தின் வன்னிவலய இணைப்பாளர் கமலநாதன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. கெயார் நிறுவனத்தின் அனுசரணையுடன் சமுதாய முன்னேற்ற நிலையத்தினரால் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# 2002/2003 கல்வியாண்டில் யாழ்.பல்கலைக்கழகத்துக்கு மேலும் ஒரு தொகுதி மாணவர்

யாழ்ப்பாணம்,ஒக்.18

2002/2003ஆம் கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதியில் முதலாவது வெற்றிடம் நிரப்பும் பட்டியில், விசேட பட்டியல் என்பவற்றின் மூலம் மேலும் ஒரு தொகுதி மாணவர்களை உள்வாங்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அனுமதி அளித்துள்ளது.

இப்பட்டியல்மூலம் யாழ்பல்கலைக் கழகத்தின் கலைத்துறைக்கு 3 பேரும், வர்த்தகத்துறைக்கு 4 பேரும், விவசாயத் துறைக்கு 18 பேரும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தெரிவுசெய்யப்பட்டுள்ள மாணவர்களின் பெயர் விவரம் வருமாறு:

**கலை**

எஸ்.கெங்காதரணி (யாழ்ப்பாணம்), ஜே.பாலசங்கர் (முல்லைத்தீவு), எஸ். நந்தையா (யாழ்ப்பாணம்).

**வர்த்தகம்**

ஆர்.சுகிர்தன் (யாழ்ப்பாணம்), பி. தினேஷ்குமார் (யாழ்ப்பாணம்), எஸ். நந்தகோபன் (முல்லைத்தீவு), வி. சுதர்சினி (வவுனியா).

**விவசாயம்**

எஸ்.யாழினி (யாழ்ப்பாணம்), கே. வேணுகோபன் (யாழ்ப்பாணம்), எஸ். தாரணி (யாழ்ப்பாணம்), எஸ்.மதுநந்தினி (யாழ்ப்பாணம்), எஸ்.குணவர்சன் (யாழ்ப்பாணம்), எஸ்.பிரதீபா (யாழ்ப்பாணம்) கே.இன்ஷாய் (யாழ்ப்பாணம்) -

எஸ்.பிரதீபன் (யாழ்ப்பாணம்), பி. சிறீலா (யாழ்ப்பாணம்), பி.கலைச்செல்வி (யாழ்ப்பாணம்), ஏ.யசோதா (யாழ்ப்பாணம்), எவ்.ஜெயசீலி (கிளிநொச்சி), ரி.தயானந்த (மன்னார்), ஜி. சிந்துஜா (யாழ்ப்பாணம்), ரி.திருவேரங்கன் (வவுனியா), எஸ்.சுகன்ஜா (அம்பாறை), ரி.மேனகா (முல்லைத்தீவு), எஸ்.கிரிதரன் (யாழ்ப்பாணம்), எஸ். அரசலிங்கம் (யாழ்ப்பாணம்), எம்.ஏ. நிரோஜன் (யாழ்ப்பாணம்). (ஒ-5)

# வைத்தியராக...

1ஆம் பக்கத் தொடர்ச்சி

*பதில்:* ஆம். இதில் பல விடயங்களைப் பற்றிக் கவனத்தில் கொள்ள வேண்டும். நாம் அச்சுத்துறையில் ஈடுபடுகிறோம். அதற்கு முக்கியமாகத் தேவைப்படுவது காகிதம். நாம் காகித உற்பத்தியில் ஈடுபடுகிறோமா என்று கேட்டால் ஆம் என்று அரசு பதில் சொல்லும்.

வாழைச்சேனையிலும், எம்பிலிப்பிட்டியிலும் இரு தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவற்றில் 200 பேர் வேலை செய்யவேண்டிய இடத்தில் 2,000 பேர் வேலை செய்கின்றனர். அப்படியிருக்கும்போது நாம் எப்படி உற்பத்திச் செலவைக் கணக்கிடுவது? அதனால்தான் இந்த இரு உற்பத்திச் சாலைகளிலும் எந்தவிதமான அபிவிருத்தியும் ஏற்படவில்லை.

இந்தோனேஷியாவிலும், இந்தியாவிலும் நிலைமை வேறு. அவர்கள தரமான காகிதத்தை சரியான முறையில் உற்பத்தி செய்கிறார்கள்.

இங்கிருக்கும் கழிவுக் காகிதத்தை இந்தியா, இலங்கையிலிருந்து இறக்குமதி செய்து தரமான காகிதங்களாக்கி மீண்டும் எமக்கே அனுப்புகின்றது. நான் இதுபற்றி காகித உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளருடன் கலந்தாலோசித்தேன். நீங்கள் ஏன் அந்தக் கழிவுக் கடதாசியைக் கொள்வனவு செய்யக் கூடாதென்று என்னிடம் கேட்கின்றார். அதில் பல நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன. அதையும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

ஆனால், புறக்கோட்டையிலிருக்கும் வியாபாரி ஒருவர் வந்து குறைந்த விலைக்குக் காகிதத்தை வாங்கிக் கொண்டு போகிறார். இதுதான் தனியாருக்கும் - அரசதுறைக்கும் உள்ள வித்தியாசம்.

பலர் தனியார்மயப்படுத்தலை எதிர்க்கின்றனர். ஆனால், எனது கருத்துப்படி சிலதுறைகளில் தனியாரின் நிர்வாகம் தேவைப்படுகிறது.

*கேள்வி:* அரசாங்கத்திற்கு நீங்கள் கூறும் ஆலோசனை என்ன?

*பதில்:* புதிய ஒரு காகித உற்பத்திச் சாலையைத் திறந்து அதன் செயற்பாடுகளை ஆரம்ப உற்பத்தியில் தன்னிறைவு அடைய அதனை இன்னும் பத்து வருடங்களில் செய்ய முடியாது போகும் அதற்கு தற்போதுள்ள காகித தொழிற்சாலைகளை சரியான முறையில் அபிவிருத்தி செய்யவேண்டும். மற்றையதுதான் வரிச்சலுகை. இது தொடர்பாக நான் அமைச்சர் ஜி.எல்.பீரிஸுடனும் கலந்தாலோசித்தேன். கொள்கை ரீதியாக அவர் அதை ஏற்றுக்கொண்டார். ஆனால், அவர் என்ன செய்யப்போகிறாரோ தெரியாது. நாட்டில் வாசிப்பறிவை அதிகரிக்க வேண்டுமென நினைத்தால் அதற்கான ஏனைய ஏற்பாடுகளும் செய்துகொடுக்கப்படவேண்டும்.

*கேள்வி:* காகிதம் உற்பத்தி செய்யும் மேலதிக தொழிற்சாலைகள் உருவானால் நிலைமை என்ன?

*பதில்:* இல்லை. நான் கூறுவது என்னவென்றால் எம்மிடம் உள்ள தொழிற்சாலைகளை அபிவிருத்தி செய்யவேண்டும். தனியார்மயப்படுத்துங்கள் என்று கூறும்போது அந்த உற்பத்திசாலைகளில் இருந்தும் உபகரணங்களை வெளிநாட்டிற்கு விற்பனை செய்யுங்கள் என்று கூறவில்லை. சரியாக பரிசீலனைசெய்து சிறந்த முகாமைத்துவத்திடம் ஒப்படைக்கும்படிதான் கூறுகிறேன். எம்பிலிப்பிட்டிய தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவுகள் ஆற்று நீருடன் கலக்கின்றன. இவ்வாறான சூழல் பிரச்சினைகளை மிகவும் கருத்திற்கொண்டு தொழிற்சாலையை வழிநடத்தக்கூடியவர்களிடம் அதனை ஒப்படைக்கவேண்டும். இதனை ஜனாதிபதியுடன் நடந்த உயர்மட்டக் கூட்டம் ஒன்றில் நான் சுட்டிக்காட்டியபோது எனக்கு அந்தத் தொழிற்சாலை வேண்டுமா என்று அவர் என்னிடம் கேட்டார்.

கொடுத்தால் எடுத்துக்கொள்வேன என்றேன். அது ஒரு 'வெள்ளை யானை' என்று அவர் கூறினார். அரசுக்கு 'வெள்ளை யானை'யாகத் தெரிவதெல்லாம் தனியார் துறைக்கு 'கறுப்பு யானை' என்று பதிலடி கொடுத்தேன். அதுதான் தனியாருக்கும் அரசுக்கும் உள்ள வித்தியாசம். இதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் - இவ்வாறு கூறினார் சதீஸ் அபே விக்கிரம. ✦


**விற்பனை முகவர்கள் தேவை**

**லிப்டர் ஜெனரேட்டர்கள்**
(இத்தாலியில் தயாரிக்கப்பட்டது)
விற்பனைக்கு முகவர்கள் தேவை.
வடக்கு - கிழக்கு
மாகாணங்களில்
கவர்ச்சிகரமான வர்த்தகக் கழிவுகள்
Chairman - தலைவர்
STC General Trading CO.,Ltd., எஸ்.ரீ.சீ.ஜென்ரல், ரேடிங் கம்.லிமிட்.
Successors to Sri Lanka State Trading (General) Corporation - முற்றிலும் அரசுக்கு சொந்தமான நிறுவனம்
100, Navam Mawatha, (P.O.Box: 1686), Colombo - 2.
100, நவம் மாவத்தை, (த.பெ.இல.:1686), கொழும்பு-02.
Tel.:436149, Fax: 447970, 436234 தொலைபேசி: 436149,
தொலைநகல்: 447970, 436234
E.mail: lankagen@ sltnet.lk Web www.stogeneral.com
மின்னஞ்சல்: lankagen@Sltnet.lk,
இணையத்தளம்: www.stogeneral.com
வர்த்தக, நுகர்வோர் விவகார அமைச்சின் கீழுள்ள ஒரு நிறுவனம்.
அமைச்சு இணையத்தள முகவரி: www.commerce.gov.lk
(C/24302)



**கடை வாடகைக்கு**

யாழ்நகரில், கஸ்தூரியார் வீதியில் பாரத் ஸ்ரூடியோவுக்கு அண்மையில் 226ஆம் இலக்கத்தில் மேல் மாடியுடன் கூடிய (2அறை) கடை தனித்தனியாக வாடகைக்கு உள்ளது (நகைக்கடை நடத்த உகந்தது).
தொடர்பு:
No.39, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.:- 021-2225048
(9600)



**கடை வாடகைக்கு**

இல.172(254), K.K.S. வீதியில் அமைந்துள்ள மாடிக்கடை வாடகைக்கு விடப்படும்.
தொடர்புகளுக்கு:
அ.அலெக்ஸிஸ்
இல.18, புதுமைமாதா கோயில் கிழக்கு.வீதி,
யாழ்ப்பாணம்.
(9605) T.P.: 021-2223358



*யாழ்நகரில்*
**தீபாவளியை முன்னிட்டு விசேட சலுகை**
**புத்தம் புதிய Canon Photo Copier இயந்திரம்**

167000+VAT+TAX விலையில்




எமது விலை 167000 - 40000 +VAT+TAX

உங்களின் பழைய, இயங்காத போட்டோக் கொப்பி இயந்திரங்களை உச்சவிலையாக ரூபா 40,000இற்கு கொள்வனவு செய்வதுடன், அதனை எமது Canon NP 7161 போட்டோக் கொப்பி இயந்திரங்களின் விலையில் கழித்து மிகுதிப் பெறுமதிக்கு மாத்திரம் VAT, TAX என்பவற்றுடன் விற்பனை செய்ய முன்வந்துள்ளோம் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

**NP 1215 Canon Photo Copier** விற்பனைக்குண்டு.
155000 VAT+TAX உட்பட விலையில்

தொடர்பு: நவகலா
மெட்ரோ பொலிட்டன் விற்பனை முகவர்
200 K.K.S. றோட், யாழ்ப்பாணம்.
T.P: 021- 2222543.
(C/24301)


# கிறிஸ்தவ சமய அறிவுப்போட்டி

வலிகாமம் தெற்கு,ஒக்.18

தென்னிந்திய திருச்சபையினரால் கிறிஸ்தவ மாணவர்களுக்கான சமய அறிவுப்போட்டியொன்று நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

தரம் ஒன்று முதல் தரம் 13 வரை கல்வி பயிலும் கிறிஸ்தவ மாணவர்களுக்கு இப்பரீட்சை நடைபெறவுள்ளது. இவ்வருடம் முதன் முதலாக நடத்தப்படவுள்ள இப்பரீட்சையைத் தொடர்ந்து வருடந்தோறும் நடத்த தென்னிந்தியத் திருச்சபையினர் முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-152)

We Serve

**சர்வதேச வெள்ளைப்பிரம்பு விழிப்புணர்வு ஊர்வலம்**

யாழ். லயன்ஸ் கழகத்தினரும் யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தினரும் இணைந்து நடத்தும் நிகழ்வு நாளை (19-10-2002) சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெறும். ஊர்வலம் யாழ்.மத்திய கல்லூரி முன்றலில் ஆரம்பித்து யாழ்நகர் ஊடாக வந்து, யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியை அடைந்து, வெள்ளைப பிரம்பு விழிப்புணர்வுக் கூட்டம் மதியம் 12.00 மணியளவில் மேற்படி கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

அரிமாக்கள், லியோக்கள், ஆர்வலர்கள் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

★ சிறப்பு நிகழ்ச்சியாக யாழ். விழிப்புலனற்றோர் சங்க கலைஞர்களின் சுகஸ் வரங்கள் இன்னிசை நிகழ்ச்சி இடம்பெறும்.

யாழ்.லயன்ஸ் கழகம்,
(9601) யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 08 - 10 - 1925



ஆண்டவன் அடியில் 17 - 09 - 2002

அமரர்
**சின்னத்துரை கணபதிப்பிள்ளை**
(இளைப்பாறிய பொறியியலாளர், காங்கேசன் சீமெந்துக் கூட்டுத்தாபனம்)

என்றும் அன்பின் உறைவிடமாய்
பாசத்தின் தந்தையாய்
அமைதியின் இருப்பிடமாய்
ஆலோசனைக் கர்த்தாவாய்
அறிவூட்டி ஆளாக்கிய தெய்வமாய்
தன்னலமற்ற தூய்மைத் தலைவனாய்
பண்புமிக்க நண்பனாய், சகோதரனாய்
எங்கள் இதயங்களில் வாழும்
எமதருமைத் தந்தையே!
உங்கள் பிள்ளைகளுக்காய்
நீங்கள்பட்ட துன்பங்கள் கொஞ்சமல்ல
நீங்கள் காட்டிய வழிநடந்து உங்கள் கனவு
நனவாக என்றும் வாழ்வோம்.

எம் தந்தையின் பிரிவுச் செய்திகேட்டு நேரடியாகவும் தொலைபேசிமூலமாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும் பலவழிகளிலும் உதவிகள் செய்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இன்று (18.10.2002) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெறும். அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

43B, அல்பேட் பிளேஸ்,
தெஹிவளை.
Tel: 735209 (C/24297)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

## கந்தசாமி குணரத்தினம்

புத்தூர் - ஆவரங்காலைப் பிறப்பிடமாகக் கொண்ட முன்னாள் நில அளவையாளரும், கொழும்பு - 13, சக்தி எண்டபிரைசஸ் உரிமையாளருமான கந்தசாமி குணரத்தினம் அவர்கள் 15.10.2002 செவ்வாய்க்கிழமை காலை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி - அன்னம்மா தம்பதியினரின் மகனும், காலஞ்சென்ற இராமலிங்கம் - கனகம்மா தம்பதியினரின் மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், நவசீலன், இன்பசீலன், சுசீலன் ஆகியோரின் தந்தையும், கமலாதேவி, கனகரத்தினம், புஸ்பராணி, அரசரட்ணம், செல்வரட்ணம், புஷ்பமலர் ஆகியோரின் சகோதரரும், கோகுலராஜன், சௌந்தரராஜன், தேவராஜன், பத்மாவதி, நற்குணராஜன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 17.10.2002 வியாழக்கிழமை முதல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக் கிரிகைகள் நாளை (19.10.2002) சனிக்கிழமை 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கொழும்பு கனத்தை இந்து மயானத்தில் 2 மணியளவில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

55/11A, சுவர்ணா வீதி,
கொழும்பு - 06.
T.P: 503996. (C/24296)

தகவல்:
நவசீலன் (மகன் - கொழும்பு),
சௌந்தரராஜன் (மைத்துனர்).
அச்செழு, நீர்வேலி.